15²

295

ஸ்ரீ ரங்கநாத சாமி,

சேந்தமங்கலம்,

சேலம்.

வைத்திய அட்டவணை- கட்டு-3.

௨

295

Sir,

Palmleaf returned to individual on 10.12.63.

[signature]
11.12.63

தேதி:- 30.7.63.
புத்தகத்தின் பெயர்:- "வைத்திய அட்டவணை.3.
உரிமையாளரின் பெயர்:- ரெகுநாத ஸ்வாமி.
இடம்:- சேந்தமங்கலம், சேலம்.

295

295

...

வைத்திய அட்டவணை -3.

அதிசாரத்துக்கு கஷாயம்:-

பெருமரப்பட்டை முத்தக் காசு, சுக்கு, வில்வவேர், மாதளங்காய் இவை நறுக்கி, ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி அதிவிடயம் மேல் பொடி போட்டுக் கொடுக்கவும்.

பெரும்பாட்டுக்கு:-

ஆலவிதைம் பூ.ச, நெருஞ்சிப் பூ.ச, தண்ணீர்விட்டான் கிழங்கு பொடி.ஙு, நெருஞ்சில் வேர் பலம்.க, நன்னாரி வேர் பலம்.உ, இலுப்பை பலம்.க, அதிமதுரம் பலம்.உ, ஏலம் பலம்.ச, இதெல்லாம் உலர்த்திப் பொடி பண்ணி நிறுத்துக் கொண்டு சீலை வடி யிட்டு பதக்கு பசுவின் பால் குழம்பாகக் காய்ச்சிப் பொடியைத் தூவி திரள் வருகிற போது நெய், தேன், சர்க்கரை ஒவ்வொன்று நாழி, நாழி விட்டுக் கிளறித் தினம் காலமே தானத்திக் காயளவு கொள்ளவும். கைப்பு, புளிப்புத் தள்ளவும். பெரும்பாட்டுப் பிரமியம் அஸ்தி சிலம் இதுகள் போம்.

தாது வர்த்திக்கும்:-

கடுக்காய், சுக்கு இவை அத்தி பண்ணி சம பாகமாகச் சூரணம் பண்ணி வெல்லம் சமன் கூட்டி இருத்தி வைத்துக் கொண்டு காலமே கடுக்காயளவு கொள்ளவும். பலமுண்டாம் சேஉர்மம அரம், தாது உற்பத்தியுமாய் சுகமுண்டாம். மல மூத்திரம் போக்கு வாதமும் பித்தமும் போம். புகுஉகாரயிகள் கொள்ளக் கடவன்.

எலி கடிக்கு:-

வெள்ளைக் காக்கணம் வேர், புனைப் புழுக்கு வேர், ஒன்றொன்று பாக்களவு விழுதி பிரமிச் சாறு உரி சதுரக் கள்ளிப் பால் படி,ஞ, சுக்கு, மிளகு, கடுகு, நெல்லி முள்ளி, தானி பசுவின் நெய்யில் அரைத்துக் கரைத்து கற்கண்டோடே இறக்கவும். பாக்களவு கொடுக்கவும். தீரும் விஷாதி எலி கடிகளெல்லாந் தீரும்.

(வேறு) விராலித் தழை பிடுங்கி சுத்த பானையிலடைத்து வெளிச்சு செங்கல் அடுப்பில் காயப் போட்டு பானை இறக்கி வைத்து செங்கல் போட்டு வேது பிடிக்கவும். அதின் பிற்பாடு அந்தத் தண்ணீரை இறுத்து அரைக்கால் படி தண்ணீர் கொடுக்கவும் தீரும். புளி, புகை விடவும்.

தேளுக்கு:-

ஒரு விராகனிடை பொட்டலப்புக் கருகிடிஷிருக்கி அன்ன-பேதி விராகனிடை சீலை சுட்ட சாம்பல் விராகனிடை இரண்டும் பொடி பண்ணிப் போட்டுக் குளிகை எடுத்து வைத்துக் கொண்டு கடலை அளவு விழுங்கத் தேள் மீளும்.

சித்தில் உளைப்புக்கு:-

அத்தி, பேயத்தி பிராய் அம்மான் பச்சரிசி, அரைத்த ஒரே பானை விடத்தில் பூச ஈரல் காந்தவுடனே தீரும்.

மூலத்துக்கு:-

ஈர வெங்காயச் சாறு உரி, எலுமிச்சம் பழச் சாறு உரி கூட்டிக் கொடுக்கவும் இப்படி மூன்று நாள் கொடுக்க உடையும். பிறகு புகை போடவும். தொட்டப் பாஷாணம் ஏழு பணவிடை ஏழு நாள் புகை போடவும். அந்த வேளை போடவும். இது வெள்ளீர் தண்ணீர் புகை .

குழப்பிளைப் பிள்ளைக்கு மாந்தக் கழிச்சலுக்கு:-

மாந்தப் பட்டையாதை, பாலட்டம் வேர்ப் பட்டையாவது, பாக்களவு வசம்பு, பாலிலிட்டு அரைத்துக் கட்டவும். வெள்ளுள்ளி பாலிலிட்டு கட்டி---- மாந்தக் கழிச்சல் பொருமல் இரைச்சல் குணமாம்.

தீராத கழிச்சலுக்கு:-

கொழிஞ்சியிலை தேங்காயளவு கசாயம் வைத்துக் கொடுக்கவும். தீராத கழிச்சலும் தீரும். கை கண்டது. அக்கரகனம்.

பேராமத்தோஷத்துக்கு:-

சிறு புள்ளடி ஓரிலைத் தாமரை நீர்ப் பூலாக் கொழுந்து பழம் பாசி இவ நாலும் வகைக்கு ஒரு பிடி சமனாகக் கட்டி உலக்கி இடித்துத் தூளாக்கி இத்துடனே அதி மதுரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசினை இவ ஒரொன்றுக்கு அரைக்காசிடை கூட்டி தூளாக்கி முந்தி சொன்னதுடனே போட்டு மத்தித்து ஒரு புடமாக வைத்து எண்ணெ உள்ளுக்குப் பகட்டு உச்சியிலும், நெஞ்சிலும் தடவவும். எண்ணெ சிலவழிந்தால் உடனே பின்னையும் இந்தப் படி பொடி போட்டு எண்ணெயில் குழப்பி வெய்யிலில் வைத்துப் புகட்டவும். தீரும் வியாதி மாந்தக் கழிச்சல், அக்கரகனம் பேராமம், தோஷம், வலி இதெல்லாந் தீரும். கை கண்டது. சித்தி

வலிக்கு:- (மாந்தம் கணம் பேராமத்துக்கு:-)

பனிவிலைச் சாறும், ஈர வெங்காயச் சாறும் மூன்றுநாள் கொடுக்கவும். பிறகு வல்லாரைச் சாறும் ஈர வெங்காயச் சாறும் கொடுக்கவும். பிறகு விடத்தியிலை இப்பை இலைப் பொருள் இவை கசாயமிடவும். உள்ளே கிராந்தி வலி குணமாம். நல்ல வேளை வேராவது இலையாவது, சாறு பிழிந்து கொடுக்க குழி விழுந்த வலி குணமாம்.

மாந்தம் கணம் பேராமத்துக்கு:-

மாவிலிங்கு, நாவிலிங்கு, ஒதியிங்கு அத்தியிலிங்கு பருத்தியில்லாது வகைக்கு ஒரு பிடி, வேலிப் பருத்தி பாதிப் பிடி, கல்லாரை ஒரு பிடி, பொன்னாங்காணி பாதிப் பிடி, வல்லாரை ஒரு பிடி, பொன்னாங்காணி பாதிப் பிடி, எலுமிச்சம் பழம், ஓமம் இவையோடு பத்து மிளகு, கருஞ்சீரகம் இக மருந்து ஒன்பதும் கொண்டு சுத்த நெரி தண்ணீரிலே போட்டுக் கடைச் சரக்கு நாலு முறைக்ர போட்டு நாழி கஷாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். தீரும் வியாதி பேராமம், குன்மக் கரம், மாந்தம், கணமிவையெல்லாந் தீரும்.

மாந்தம் கணம் பேராமத்துக்கு:-

வேலிப் பருத்தி வேர், கண்டங்கத்திரி வேர், பிஞ்சிலைச் சாறு, உள்ளி, வசம்பு கூட்டி விளக்கெண்ணெயில் எரித்துப் புகட்டவும் தீரும். அகத்தியிலை, பிஞ்சிலை, உள்ளி, வசம்பு இவையோடு கட்டித் தலையிலிடவும். உள்ளுக்குங் கொடுக்கவும்.

சிரங்கு புகத்துக்கு:-

கோவையிலைச் சாறு வாத்தரைக்குப் பூசத் தீரும். அத்தியிலை நசுக்கிச் சாறு கொண்டு சொறிப்பித்துப் பத்தில் வடித்துப் பூசத் தீரும். நாய் வேளை வேர், சதுரமும் முருங்கைப் பட்டையும், குப்பை மேனி, சாறனை வேரும் அரைத்துச் சாறு கொண்டு நல்லெண்ணெயுங் கூட்டிக் காய்ச்சிப் பூசவும்.

(வேறு) நாகப்பாம்பு எண்ணெ:-

கோவையிலைச் சாறு, நல்ல வேளைச் சாறு நாழி, சதிரக் கள்ளிப் பால் படி.தை, இவை எரித்து ஒரு கரண்டி கொடுக்கவும். அதிகப் பட்டால் கோவையிலைச் சாறு தலையில் தேய்க்கவும். மோருஞ் சோறுங் கொடுக்கவும்.

(கல் கரப்பானுக்கு:-பஞ்ச கனியம் ஒரொன்றுக்கு நாழி பசுவின் நெய்)

புது கரப்பானுக்கு:- நாழி வெள்ளுள்ளி, சங்கங்குப்பிச் சாறு படி.தை, கற்பூர வள்ளி

சாறு படி.3/4, விஷ்ணுகாந்திச் சாறு படி.3/4, வேப்பெண்ணை படி.3/4, செவ் வத்தாரிப் பட்டை வேப்பம் பட்டை கருந்தொட்டிச் சாறு படி.3/4, நீர்முள்ளி வேர் திப்பிலி, மணத்தக்காளிச் சாறு படி.3/4, மாமலைச்சாறு படி.3/4, இவை கூட்டி பதத்தில் வடித்த உடம்பிலிட்டு உள்ளுக்கும் ஒரு காசிடை கொடுக்கவும். பத்தியம் பிடிக்கவும்.

செங்கரப்பானுக்கு:- 1.8.63.

நன்னாரிவேர்ப் பட்டை ஒரு நார்த்தங்காயளவு கழுநீர் எள்ளு ஒரு பிடி அரைத்தும் பட்டிக் தின்னச் செங்கரப்பான் தீர்ந்து பிள்ளை பிழைக்கும்.

சுக்லூரத்துக்கு:-

எள்ளும் பனைவெல்லமும் அரைத்துத் தின்னவும் குணமாம்.

இரத்தக் கழிச்சலுக்கு:-

கருங்காலி இலை அரைத்த ஒரு புன்னைக்காயளவு முலைப்பாலில் குழப்பிப் புகட்டவும் மூன்று பொழுதிலே குணமாம். தீரும் வியாதி ரக்தரகாசம் மாந்தக் கழிச்சல், ரெத்தக் கழிச்சல், இவையெல்லாம் குணமாம். பத்தியம் பிள்ளை தாய்க்கு மிளகு, புளி ஆகாது. அகத்திச் சாறும், ஈர வெங்காயமும் மோரும் கூட்டவும்.

பேதிக்கு விளக்கெண்ணை:-

பெருந்தும்பை வேர் பலம்.க, நிலாவாரை வேர் பலம்.உ, முடக்கொத் தான் வேர் பலம்.உ, சுக்கு பலம்.க, கடுரோகணி பலம்.½, ஓமம் பலம்.க, எண்ணை படி.க, எல்லாம் நசுக்கி எண்ணையில் போட்டு எரித்து வடித்துக் கொண்டு சரீர பலத்துக்குத் தக்கபடி கொடுத்தால் நல்ல பேதியாம். எண்ணை வாங்கி அன்னைக்கு வெண்ணீரும் சாதமும் உப்புக் கட்டிக் கொள்ளவும். பின்னை பேதி ஆகாது.

பெருஞ்சாதிக்கு மேகவெட்டை, மேகவாய்வு, அஷ்ட வாதம், வயிற்றுக்கு:-

விளக்கெண்ணை ஒரு படி, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.வ, வசம்பு பலம்.வ, சுக்கு பலம்.க, மிளகு பலம்.வ, ஓமம் பலம்.½, கடுரோகணி பலம்.வ, சீரகம் பலம்.½, கருஞ்சீரகம் பலம்.வ, குராசாணி ஓமம் பலம்.வ, சாதிக்காய் பலம்.க, லவங்கம் விராகனிடை.ஐ, இந்துப்பு விராகனிடை.½, முடக்கொத்தான் சமூலம் இடித்த பிடி.க, நாய்வேளை வேர் சாட்டணை பகுவேர்.க, சிக்கட்ட வேர்.க, இதெல்லாம் இடித்து எண்ணெயிலே கலந்து சூரிய புடமாய் வைத்து எரித்து எண்ணை பதமாய் இறக்கிச் சேர்ப்ப மேனிச் சாறு காசிடை.க, கசக்கிப் பிழிந்து இந்துப்பும் பொடி பண்ணிப் போட்டு இறக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு பலம் ஒன்றரைப் பலம் எண்ணை சரீர பலத்துக்கு தக்கதாய்க் கொடுத்தால் பேதியாம். பழம் புளி விட்டுச் சாதம் பண்ணிச் சாப்பிடவும். அல்லாமல் பச்சைப் பயறு வறுத்துப் போட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். தீரும்வியாதி மேகவெட்டை, மேகவாய்வு, அஷ்டவாதம், வயிற்றிசிவு இதெல் லாம் தீரும்.

இருமல் க்ஷயம் மந்தார காசத்துக்கு:-

ஆகாசத் தாமரைத் தாள் பலம்.க, ஆரையிலைத் தாள் பலம்.க, அரத்தை தாள் பலம்.க, திப்பிலி பலம்.க, மெருகன் கிழங்கு பலம்.க, ஆத்து முள்ளி விரை பலம்.க இந்தச் சூரணம் தேனுடனே கொள்ளவும். தீரும் வியாதி ஈளை இருமல், க்ஷயம், மந்தார காசம் தீரும்.

நீரழிவுக்கு:-

கொட்டைக் கரந்தை தாள் சேர்.க, கஸ்தூரி பலம்.½, குங்குமப்பூ விராகனிடை.க, கஸ்தூரி பணவிடை.க, இந்தச் சூரணம் வெருகடிப் பிரமாணம் தெள்ளீரி லாகுதல் எருமைத் தயிரிலாகுதல் தேனிலாகுதல் கொள்ளவும் நீரழிவு தீரும். நெல்லுப் பொரியாவது மாவாவது பருத்திக் கொட்டைப் பருப்பாவது, சீரகமாவது சர்க்கரையாவது கொடுக்கவும். மேல் (பக) எது இல்லை.

வாய்வுக்கு பசிக்கும் தீபனத்துக்கும் ரசாயனம்:-

தீக்ஷணம் தீபனத்துக்கு ரசாயன வகை:- சுக்கு, மிளகு, திப்பிலி, கொடு வேலி, கடுக்காய், நெல்லி முள்ளி, தானிக்காய் இது வெல்லாம் வகைக்கு ஒரு பலம் இந்துப்பு ஒரு பலம் இதுவெல்லாம் கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி கொடிப் பிரமாணம் சூரணம் பசுவின் நெய்யில் கொண்டால் மல சுத்தியாம். தேனில் கொண்டால் தீபனமாம். சர்க்கரையில் கொண்டால் உஷ்ணம் தணிவிக்கும். தேன், நெய் சர்க்கரை இவற்றை சமன் கூட்டி இந்தச் சூரணத்தைக் கூடப் போட்டு கலந்து வைத்துக் கொண்டால் இது ரசாயன மென்றும் பேர்.

ரசாயனம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி முள்ளி, தானிக்காய் இது ஆறும் வகை ஒன்றுக்கு பலம்.க, தனித் தனி சூரணம் பண்ணி நிறுத்துக் கூட்டிக் கொள்ளவும். சடைக் கஞ்சாவிலே பத்துப் புடம் பண்ணிப் பொடி பலம்.உ, ஆக பலம்.அ கூட்டி இதுக்கு தேன் நெய், சர்க்கரை கூட்டிக் குழப்பி நாளொன்றுக்கு நாலு காசிடை கொள்ளவும் தீபனமாம். பலமுண்டாம்.

கலிக்கம்:-

சமுத்திராப் பழக் கொட்டை எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்துக் கலிக்கமிடத் தலைக் கனப்பு உடம்பு கடுப்புக் காச்சல் வாய்வு போராமை வலிப்பு தீரும். கை கண்டது.

இன்னமொரு வகை கலிக்கம்:-

சவக்காரம், நல்லெண்ணெ கூட வைத்து செம்பு கொண்டு கிண்ணியில் இழைத்து பரணியில் வைக்கவும். அனுபானம்:- நடுக்கல் சுரத்துக்கு:- காட்டு வாழை விரை சுக்கு, திப்பிலி, மிளகு, சயிந்த லவணம், அஞ்சும், சரியாய் கூட்டிக் கூட்டி* சொருத்திரத்தில் அரைத்து மாத்திரை கட்டி நிழலிலுலர்த்தி கோமூத்திரத்திலாவது, எலுமிச்சம் பழச் சாற்றிலாவது உரைத்துக் கலிக்கமிடவும். தீரும் வியாதி பதிமூன்று சன்னி பாதகம் விஷமச் சுரம், குளிர் சுரம், வாய்வு, சயித்தியம் தீரும்.

நடுக்கலுக்கு:-

கருங் குங்கிலியம் பொடி பண்ணிப் புகையிலே சரி கூட்டிச் சுங்கானில் வைத்துப் புகைப் பிடிக்கவும். மூக்காலே புகை வாங்கி வாயாலே விடவும். இப்படி ஒரு நாளைக்கு மூன்று சிலும்பி அடிக்கவும். இதுக்குத் தீரும் வியாதி நடுக்குக் காச்சல், குளிர், தலைப் பாரம், தலைவலி, உடம்புக் கடுப்பு, சிலேட்டுமம், பிரமை வாய்வு, சுரம் வாத பித்த சேத்துமம். பதிமூன்று சன்னியுள்பட வியாதி நீங்கும். கை கண்டது.

தயிலம்:- செம்முள்ளி வேர்ப் பட்டை இரண்டு பங்கும், மிளகு ஒரு பங்கும் கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் கரைத்து உள்ளி, வசம்பு கட்டி வெயிலிலே வைத்து எண்ணெ எரித்தவுடனே பார்த்து இந்த எண்ணெயிட்டு உடம்புக்கு இட்டுப் பிடிக்கவும். உடம்பு கடுப்பு எரிவு தீரும். தலைக்கிட்டு வாருக் தலைப் பாரம் வாங்கும். கை கண்டது.

நீர்க் கட்டுக்கு:-

வெங்காரம் அரைப் விராகனிடை பொரித்து மூன்று பல்கறை பொடி பண்ணிப் பச்சைக் கற்பூரம் கால்விடை.ல இது மூன்றும் கூட்டி நேகப் பொடி பண்ணி இந்த எலுமிச் சம் பழம் பிழிந்து உழக்குச் சாற்றில் போட்டுக் குழப்பிக் கொடுக்கவும். இப்படி இரண்டு நேரமுங் கொடுக்கவும். பத்தியம், கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். துவரம் பருப்பு, மிளகு, சீரகம் இளங்கீரை கட்டவும். உஷ்ணம் அதிகமானால் பசுவின் பால் கூட்டவும். இது கை கண்டது. இதுக்கு தீரும் வியாதி நீர்க் கட்டுக் கல்லடைப்பு, சதை யடைப்பு மூத்திரப் பாளம், மூத்திரப் பாண்டு கொனூசம் இது எல்லாந் தீரும். சித்திர மூலப் பட்டை இடித்து வஸ்திர காயம் பண்ணி இந்தப் பொடி ஏழு விராகனிடையும் இதில்

ஒவ்வொரு விராகனிடை சாதிலிங்கமும்கூட்டி நேகப் பொடி செய்து பசுவின் இந்தப் பதினாறு பங்கு தண்ணீர் பதினாறு சீலைத் துணியில் பதினாறு பொட்டணம் கட்டி ஏழு நாள் பூகை, புளி, மந்தனவில் போடவும். இதுக்கு உள் மருந்து ரசகற்பூரம், விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, வாய்விளங்கம் விராகனிடை.க இதுக்குப் பதினாறு பங்கு வெல்லம் கூட்டி அரைத்து பதினாறு பங்கு உருண்டை பண்ணி ஏழு நாளைக்கு பதினாறு உருண்டை முழுங்கவும் உருண்டை பொரிமாவில் பிரட்டி வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் விழுங்கவும். உருண்டை முழுங்கினவுடனே இரண்டு நேரமும் புகை போடவும். வாயிலே நாக்கில் உடனே மருந்தும் புகையும் விடவும். ஒரு நாள் போட்டு மறுநாள் விளக்கெண்ணை மிட்டு வெந்நீர் காய்ச்சி சுத்தி முழுகவும். பிறகு இரண்டு நேரமும் வெந்நீர் விட்டு வரவும். மூன்று நாளைக் கொருக்கால் விளக்கெண்ணை மிட்டுத் தலை முழுகவும். இந்தப் படிக்குப் பண்ணவும். பத்தியம் உப்பு, புளி, விடவும். வெந்நீரும் சோறும், இது வெங்காயமும் கூட்டவும். பகலில் பால் கூட்டவும் தீரும் வியாதி சூலை, வாத சூலை, கருப்பு, வீக்கம், கட்டு மண்டைச் சூலை, சகல கிரந்தி சகல புண்ணும் தீரும்.

<u>நீர்ப் பீனிசத்துக்கு:-</u>

கல்லெண்ணை படி.க, வேப்பெண்ணை படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, வெற்றிலைச் சாறு படி.க, ஆடாதோடைச் சாறு படி.க, சாரணைச் சாறு படி.க, குப்பை மேனிச் சாறு படி.க, இந்த வகை படி சாறு அளந்து ஒரு சட்டியிலே விட்டு வசம்பு, வெள்ளுள்ளி, கருஞ் சீரகம் பதத்திலிறக்கி இரண்டு நாளைக்கொருக்கால் நாற்பது நாள் முழுகி நசியம் விடவும். பத்தியம் சுவரம் பருப்பு அரைக்கீரை, புளிப்பாகாது மற்ற பத்தியம் பிடிக்கவும்.

<u>கெர்ப்ப விப்புருதிக்கு:-</u>

குமிஞ்சி வேர், மருக்காலம் வேர், இரண்டும் பொடி செய்து சதிரக் கள்ளிப் பாலாடை போக்கி ஒரு பங்கு பசுவின் நெய் மூன்று பங்கு மருந்து பதமான வாறே வடித்து நாலு காசிடை உள்ளே கொடுக்கவும். வயல் கறிச்சால் மோரும் சோறும் கொடுக்கவும். ஒன்று விட்டொரு நாள் கொடுக்கவும். வியாதி வெருப்பாய் குன்று போலே விழும். பின்பு மருந்து கொடாமலிருக்கவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>கோப விப்புருதிக்கு:-</u>

குதிரைக் கோமியத்திலே கருங்கொள்ளு நாழி வேக வைத்து அந்த நீரில் நத்தி வேர் பட்டை அரைத்துச் சாறு கொண்டு கருஞ்சீரகம், கம்பிப் பிசின், கல்நார், காசுக் கட்டி காரம், கார்போக அரிசி, அன்னபேதி, மாங்கிஷ பேதி, திரிபாலை, நவச்சாரம் யவச்சாரம், ஒரோன்று முக்கழஞ்சு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துப் புண்ணில் திரியிடவும்.

கன்னக் கிரந்தியின் குணம்:- கடை வாய்ப் பல்லடியில் வெங்காயம் போலே புடைத்து புழம் பேயும் நாடையும் தைக்கும். இதுக்கு:- வேப்பெண்ணை அரத்தை குங்கிலியம், அதாவரிசி, சர்ப்புளம், எருக்கம் வேர் கள்ளி வேர் இவை அரைத்துக் கரைத்து கொதிப்பித்து ஒத்தவும். உருக்கு கட்டவும்.

<u>கன்று வாய்ப் புத்தின் குணம்:-</u>

அசையிலே கொக்கு கூட போலே வளர்ந்திருக்கும். சத்திரம் கொண்டு வெட்டி சலாகை கொண்டு மட்டுக் தேய்த்து அதின் பிறகு நல்லெண்ணை படி.உ, கொசிறுபதம் சுட்டுப் பொடி செய்து மாங்கிஷ பேதி பலனிடை சுத்தக் கரிசி கார்புளம், இந்துப்பு கண்டில் வெண்ணை ஒரோன்று முக்கழஞ்சு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து புண்ணிலிடத் தீரும். <u>உரத்திலுவி குறுதியின் குணம்:-</u>

கண்டத்துக்குள்ளே புகை பெருத்த தன்மை தீர்ந்து, பருத்த அடசியைப் போலே குரல் வளைந்தடைத்து வரும்.

இதற்கு:-

மார்க்கிடக வேதி பொன்னிறம் போலே இருக்கும். அது ஒரு பணவிடை வெற்றிலைச் சாற்றில் சம பாரமும் சிவனார்வேம்பிலைப் பழமும் தேனும் கூட்டிக் கொடுக்க எடுக்கும். நல்லெண்ணெயும் வேப்பெண்ணெயும் சரி கூட்டி எருக்கம் பூ அத்தித் தரிசு அரத்தை சரி கூட்டி அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து உள்ளே புகட்ட அடிதாம் மாறும்.

ரெத்த சோபத்தின் குணம்:-

உடம்பெல்லும் வீக்கமுமாய் எரிவுநமைமாய்ச் சத்திக்கும். உடம்பு கறுப்பாயிருக்கும். காலோஞ்சி வரும். கண் சிவந்திருக்கும். தவனமாயிருக்கும். உடம்பு கனத்திருக்கும்உட் காய்ச்சலுண்டாயிருக்கும். வருஉட சத்திபுர்டா வென்ற பேராம் இதற்கு மருந்து. சங்கம் பழச் சாறு, வெள்ளரி விரை முக்குளுநு முசுமுசுக்கைச் சாறு, சீந்தில் கல்லுச் சாறு முரிலைக் தாமரைச் சாறு, முள்ளிரிலைச் சாறு, செங்கழுநீர்த் தாமரைச் சாறு வேளைச் சாறு இருவேலி விளாமிச்சை பலம் நூல், பொன்னாங்கண்ணிச் சாறு அஞ்சிலை தொச்சியிலைச் சாறு, கரும்பஞ் சாறு, முத்தக்காசு, நெருஞ்சிக் காய், பனங் கிழங்குச் சாறு படி.ச, செவ்விள நீர் படி.ங, பச்சைப் பயறு அலைக்க சாறு படி.ங, வில்வ வேர்ச் சாறு படி.ங, பருத்திஇலைச் சாறு படி.க, பசுவின் பால் பசுவின் நெய், படி.ச, இதில் ஏலம், அதிமதுரம், சீரகம், கொத்தமல்லி, சந்தனம், சரளம் பச்சிலை, கச் சோலம், உலவா வேர்க் கொம்பு, அதிவிடையம், லவச்சாரம் இவை ஒரொன்று அரைப் பலம் அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம் கல்லு சர்க்கரை ஒரொன்று முப்பலம் கந்தல் போக்கிச் சேர்த்து நாலு காசிடை உள்ளே கொள்ளவும். அந்தி சந்தி கொள்ளவும் ரத்தம் மாறும். உடம்பு எரிப்பு மாறும். வீக்கந் தவனம் மாறும். கறுப்பு தீரும். கிருமிச் சத்தியின் குணம்:-

வயற்றைப் புரண்டும் குமட்டி வாயாலே கீரிப் பாம்பு எடுக்கும். இதற்குச் செம்பிலவிலை, மிஞ்சியிலை வேப்பிலை இரண்டை அலை சரி கொண்டு சாறு உரியில் சிறுக என்னை நாழி பசுவின் கோமியம் முன்குழி விட்டு சீதள தயிலமாய் யவட்சாரம் நெரிவிடம், அக்கரா காரம், சாதிக்காய் வேர்ச் கொம்பு, வெண்காரம், மரீசம் இந்துப்பு, திப்பிலி ஒரொன்று பலம்.க, அன்னவேதி மார்க்கிடக வேதி, கழஞ்சு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து நாளது ஒரு காசிடை கொள்ள கீரிப் பாம்பு மலட்டுப் புழு விழும்.

கீரிப் புச்சிக்கு:-

முப்பது வேப்பமீர்க்கு கடுக்காய், அர் பிரண்டைச் சாறு வார்த்தரைத்து விளக் கெண்ணெயில் ஏழுப்பி முழுக்கவும்.

வாயு சத்திக்கு:-

வயற்றைப் பரண்டு எழுந்து வயறு பொருமிச் சத்திக்கும்.

இதற்கு:- இவதீர் மூலதி சித்தாமுட்ட வேர், வில்வ வேர், முத்தக் காசு, கஞ்சா விதை இவை சரி கூட்டி இடித்து விதக்க நீர் வார்த்து நாலிலொன்றாய்க் காய்ச்சித் தலைத்துப் பிழிந்து போட்டு நெய் நாழி விட்டு இதில் கொத்தமல்லி அதிமதுரம், விலாமிச்சம் வேர் ஒரொன்று முக்குழுந்து வேர்க் கொம்பு ஒரு பலம் அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து இரண்டு காசிடை நக்கவும். பித்த

பித்த சத்தியின் குணம்:- வயறு எரிந்து எரித்துப் பேதிக்கும். இதற்கு:- மாதளம் பூச் சாறு படி ஒன்று அதிமதுரம், ஏலம், கொத்தமல்லி வேர்க் கொம்பு, (சீந்தில் தலைப் பதம்) சவுக்காரம், அக்கரகாரம், பசுவின் நெய் முந்திரி ஒரொன்று அரைப்பலம் அரைத்துக் கரைத்து வடித்து பொரிப் பொடி வாசிக் கொள்ளவும். ஒங்கார சத்தியின் குணம் வெள்ளோக்காள மெடுக்கும். இருமும். இரைக்கும். இதற்கு:- அத்திப் பட்டைச் சாறு ஊரி வில்வப் பத்திரிச் சாறு நாழி, முத்தக்காசின் சாறு நாழி சித்தாமுட்டிச் சாறு நாழி அதிமதுரம் கழஞ்சு; கொத்தமல்லி, அதிவிடையம், ஏலம்,

லவங்கம் ஒரொன்று அரைப்பலம் நல்லெண்ணெ படி.உ இதில் பதத்தில் வடித்து மூன்று காசிடை நக்கவும்.

<u>கல்லெரிப்புக்கு:-</u>

வாழைப்பழமும் எண்ணெயும் பிசைந்து தண்டிலே பூசி இருக்கக் கல்று விழும். அத்தியிலை முளி தண்ணீர் வார்த்து நாழியாகக் காய்ச்சி வெண்காரம் பொரிச்சு உள்ளே கொடுக்கவும். கண்ட மாலைக்கு:- மதுள் கிழங்கு உலத்திப் பொடி செய்து எருக்கம் பழுப்பிலே தேனைத் தடவி அதிலே அந்த தூளைத் தூவிப் புண்ணிலே போடவும். கிளிசை மூத்திரப் பானம்: மூகது நீர்.

<u>கண் சிவந்து கை கால் வீங்கி இருக்கிறதுக்கும்:-</u>

மாம்பழம் புளிந்து ஒரு பாக்களவு தண்ணீரில் கரைத்து பசுவின் பால் படி.உ, புகட்டிக் காய்ச்சி இரஞ்ச பதத்தில் இறக்கித் திரட்டி ஒரு சீலையில் மூடிந்து வைத்துக் கொண்டு ஒரு தேத்தான் கொட்டை அளவு இள வெந்நீரில் கொள்ளவும். ரெத்தக் கிராணி கவுசை பெருவயறு தீரும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

<u>வாயாலும் மூக்காலும் இரத்தம் விழுகிறதுக்கு:- மூலத்துக்கு:-</u>

நாயுருவி தெய் வடிக்க நாவிலி தோல் அரசந் தோல், ஒதியந் தோல் ஒரொன்று பலம் மூன்று பதக்குச் செவ்வூருவி வேர் இதுகள் அவைத்துப் பானையில் அடைத்து நாலு மரக்கால் தண்ணீர் வார்த்து குழியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு இதில் சந்தனம், விலாமிச்சம், அதிமதுரம், நன்னாரிவேர், செங்கழுநீர்க் கிழங்கு, அத்திப் பட்டைச் சாறு, நாவல்க் கொட்டை, புளியங்கொட்டைத தோல், ஆலமுகிழ் அஞ்சன நற்செங்கல் வெள்ளி லோத்திரம் மூத்தக்காசு இருவேலி வேர் மஞ்சட்டி, நெல்லி சிறுகீரை வேர், மருதந் தோல், வாழைப்பு, வதச்சுண்டி காகொளி மூத்திக்கைப் பழம், நற் சீரகம், இலவம் பிசின், மாவிரை, புங்கம் பாளை வேர், பன்னி மொக்கைக் கிழங்கு மஞ்சள் ஏலம், சவளை, சதை திப்பிலி, சிறுகாஞ்சொறி, கைக்சோலம், அதிவிடையம், வெட்பாலை அரிசி இவை ஒரொன்று ... கரைத்து இருநாழு
வெள்... பனி
...தி
...ள்

சீரகம் வட்டத் திருப்பி வேர், கஸ்தூரி மஞ்சள், வெள்வேலம் பட்டை சமனுகக் கூட்டிக் காய்ச்சிக் கொப்பளிக்கவும். ஆயில் பட்டை நருக்கித் தூள் போட்டுக் கீழ் கொப்பளிக்கவும்.. ரெத்தம் நிற்கும்.

<u>குன்மத்துக்கு:-</u>

மிளகு, கடுகு, திப்பிலி, இந்துப்பு கருவேலிலைச் சாறு வார்த்து அரைத்து சீலையிலாட்டி நிழலுலத்தி திரியாக்கித் திரியை எண்ணெயில் அவைத்து ஒரு சட்டியில் பிடித்து எரியிடத் தயிலம் விழும். அந்தத் தயிலமும் இந்துப்பும் குழைத்து முழுங்கவும். எட்டுவகை குன்மமும் தீரும்.

<u>வாத சுரத்துக்கு மருந்து:-</u>

ஏலமதிமதுரமொடு மிருவேலி மூன்னை வேர், எராலிப்பையின் பூக் கோரூடன் கலைக் கொம்பு நன்னாரி பேய்ப்புடல் கோதில் மூத்தக்காசுடன் சாலவாடா அ... டை சீந்தில் பற்படாகமுடன் சதிராக மிருநாழி நீர் தன்னிலே பன்னிரு கழஞ்சு பெ உரி தானுடன் காய்ச்சி யுண்ணே.

உரிதாழுடன் காய்ச்சி யுள்ளே.

சேட்டுமச்சுரத்துக்கு மருந்து:-

ஊமத்தை வேரின் புடலாடா தோடை துய்ய சிறு காஞ்சொறி முத்தக்காசு
ஏதமிலாக் கற்றூழை கண்டங்கத்திரி எற்று சிறவழுதலை சுக்கிடித்துக் கட்டிப்
பேதமற பல்விரல்கு கழஞ்சு கொண்டு பெருகு புனலிரு நாழி உரியாக காய்ச்சி
ஒதிய திப்பிலிப் பொடி தேனளாவிக் கொள்ள ஒருந் திரி சேற்றுமத்தின் உரங்கள்
தானே.

வாத பித்த சுரத்துக்கு மருந்து:-

அதிமதுர மிரு கழஞ்சு வங்க பூ மிரு கழஞ்சனியேல முக்கழஞ்சு உதவு மொரு
மிருவேலி தாறு மொரு முக்கழஞ்சற மஞ்சலார் சந்தனம் புறமை பெற இருகழஞ்சிரு
சுக்குடன் பொங்கு திப்பிலி கழஞ்சாகவே நிதமருவு கொத்தமல்லி ஆழாக்குடன் கட்ட
நிற்கும் திரிதோஷ சுரமே.

வாத சிலேத்தும சுரத்துக்கு மருந்து:-

துய்ய சிறு காஞ்சொறி வட்டத் திருப்பி வேர் ஊமத்தை நன்னாரி வேர்
எய்யுமடாடா தோடை சிறிய வழுதலையின் வேரினிய கண்டங்கத்திரி வேர்
மெய்வரிய நெல்லி முள்ளி சுக்கொடு கடுக்காய் மிருதானி காய்ச்சி நீரில்
உய்யவே தேனிறைரு திப்பிலியுடன் கொள்ள ஒருந் திரி தோஷ சுரமே.

பித்த சிலேத்தும சுரத்துக்கு மருந்து:-

இலந்தையிலை, நன்னாரி சீந்தில் தன்கு மிருவேலி, விலாமிச்சம், மெழில் பூ
நாகம் கலந்ததொரு பேய்ப்புடோல் முத்தக்காசு கன கோட்டஞ் சுக்குடனே ஆடா
தோடை நலம் புகழு மூலைப் பாலு மிஞ்சிச் சாறும் நற் சமன் கூட்டிச் சரியாய்
நீருங் கூட்டி உலந்ததொரு திப்பிலி மென் பொடியைத் தூவி உகந்து கொள்ளச்
சன்னி சுர மோடுந்தானே. கற்றூழஞ் சுக்குடனே கருவேப்பிலிலைத் தன்கு கண்டங்
கத்திரி யதன் வேர் உத்தான கற்கடகங் கடுகுரோகணியும் நீருற கிரம்புடன்
பெற்றொரு முந்திரிகையின் பழத்தையுங் கூட்டி பிழிந்து சாறு கூற்றும் வற்றுத மூலைப்
பாலு முக்கூறு கூட்டி புனலனமான சன்னி சுரமாயு மென்றே.

வாத பித்த சிலேத்துமத் சுரத்துக்கு மருந்து:-

கழல்ச் சீரா நன்னாரி முத்தக்காசு காசினி யென் பேய்ப்புடோல் பேராமுட்டி
வழுக்கமான கவளை வேர் துளசிக் கடு வாய்நிறைஞ் செவ்வாயக் கொடி
செங்கழுநீர் மூலஞ்
கழல் பொருந்தும் நீர் நாழிக் கறுகழஞ்சு சுருங்க உழக்காய்க் காய்ச்சி
யிஞ்சிச் சாறு உழக்குடனே கூட்டியே கொள்ள நாழி மோடுந் திரி தோஷத்
திறரங்கள் தானே.

சந்திக சன்னிக்கு மருந்து:-

சொற் படலங்கின்ற ஆடாதோடையினிய ஊமத்தை சிறவழுதலை
கற்புடைய நற்சித் தமட்டி வேர் சுக்கு கலந்த முத்தக்காசுடன்
பற்படக சந்தனம் மிலுப்பையின் பூ மிவைகள் பன்னிரு கழஞ்சு கொண்டே
பிற்படைய நீரு மிரு நாழி தனிலெட்டொன்று பேசிக் கொளச் சந்தி கெடுமே.

சீந்தில் முத்தக் காசு கவசிலையின் வேர் சீர் மருவ பேய்ப்புடோல் வேர்
வாய்ந்த தோர் கொத்தமல்லி சுக்குடன் மருவ சித்தமட்டி வேர் பேராமட்டி
வேர் விலாமிச்சை நன்னாரி என் கூறு கோகணியுடன் தேர்ந்த தோரிரு நாழி
நீருழக்காக்கிக் கொள் திகழ் சந்தி சன்னி கெடுமே.

தாந்திரிக சன்னிக்கு மருந்து:-

சீந்தில் பற்படாகமொரு வெட்டி வேர் பேய்ப்புடல் செய்யு சுக்கும் வசம்
வாய்ந்த மிரு நாழி நீர் பின்னிரு கழஞ்சிட்டு வள்ளிதாகக் காய்ச்சியே

சேந்த உடனே உழக்கா யிருத்தே கொள் செய்து பரிகாரஞ் செர்யில்
ஆந்த பாரோர் சொன்ன சன்னி வகை தன்னி லந்தக சன்னி தானேகுமே.

ரெத்தமை என்னுஞ் சன்னிக்கு மருந்து:- 2.8.63

பூசனித் தன்று முத்தக்காசு பொற்பாலகம்பந் திராய்
மாசறுக்குஞ் சிறிய வழுத உலயின் வேர் கொத்தமல்லியொடு பற்படகமும்
நேசமிக்கார் சுக்கு நன்னாரி வேர் யிருநாழி திகழ் நீரிலே காய்ச்சியே
நேச முந்தே கொள நின்ற ரெத்தமையான நிச்சையம் விட்டோடுமே.

அந்தக சன்னிக்கு மருந்து:-

ஏராகு மிரு வேலி வேரோடிலா மிச்ச மிரிய பற்படக மிரவுஞ்
சீராய் வருஞ்சுக்குடனே சிறந்திருஞ் சிறு தேக்கையுங் கட்டியே
பாரோருந் தமிழ நாழி நீர் காச்சி பசழுழக்கா யிருத்தே
கோரோசினே முலைப் பாலுடன் மாறிரும் சிரிலந்தக சன்னியே.

சீதாங்க சன்னிக்கு மருந்து:-

ஏல மிலவங்க நற் சந்தனம் பாரொளிரு பூசனித் தன்றுடன்
கோரைஞ் சுரைத் தன்று ஊ மலை ஊலை வேருடன் சுக்கு மொக்கக் கலந்தே
கால மிரு நாழி நீர் வார்த்துழக்காகவே தான் காய்ச்சியே குடித்தால்
சீல மிகு சீதாங்க சன்னி சுரமோடிருஞ் செப்பிலே மெப்போதுமே.

பிரலாப சன்னிக்கு மருந்து:-

சிறகாஞ் சொறி சிறுதேக்குச் செறிந்த வட்டத் திருப்பியுடன்
உறவாஞ் சுக்கு நிலவேம்பு உகந்த சிறிய வழுத ஊலயும்
அறிவார் முத்தக் காசுடனே அளந்த நீருநாழி விட்டு
குறைவா யாழாக்குக் கொள்வீரால் சுரம் பிரலாபம் போமே.

கண்டக சன்னிக்கு மருந்து:-

அரத்தை நமதேவதாரமுடன் ரோகணி அனிந்த சிறுதேக்கிருடனே
சிரத்த நிலவேம்புடன் சிறிய வழுத ஊலயின் வேர் சீராய் விளங்கும் சுக்கும்
உரைத்த விவை பன்னிருகழஞ்சு யிருநாழி நீருட் புகட்டிக் காச்சியே
கரைத்துழக்காய் வடித்தே குடித்தால் கண்டகுச் சனங் கோடிவிடுமே.

கண் குழிவு சன்னிக்கு மருந்து:-

மட்டார் கிரம்பு விரு குரோசனை வன்மை செறி பற்படகமும்
வெட்டால் மிகுந்த கண்டங் கத்திரி வேர் சுக்கு வீ கவே கட்டியே
கட்டார் மிகுங் கானமல்லிகைத் தன்றுமே கலந்து பன்னிரு கழஞ்சு
சிட்டாகவே கண் குழிச்சலென்னுஞ் சன்னி சீர் குலைந்தோடி விடுமே.

அழிவு சன்னி சுரத்துக்கு:-

பாதிரி கவ ஊல முன் ஊல பெரிய வாகை பார் முழுதென் குமிழ் சுக்குச் சித்தமல்லி
பேதமில்லா நன்னாரி பேர் மல்லி பேருலகென் சித்தமட்டி போமட்டி.
யேதமில்லாக் கண்டங்கத்திரியின் வேரும் யேத்த மிரு நெருஞ்சியுடன் நிதம் நாழி
யோதரிய மிஞ்சிச் சாறு உழக்குக் கட்டி யுகந்து கொள்ளச் சன்னி சுரமோடிப் போமே.

அதிக சன்னி சுரத்துக்கு மருந்து:-

நொச்சியிஊல பர்படக பேரமுட்டி நொய்தாக வுலத்திய பூசனியின் தன்று
பச்சை நிற்குஞ் சுக்குத் திப்பிலியுங் கட்டிப் பரிவாகப் பன்னிரண்டு கழஞ்சு ெ ான்று
வச்ச தன்னிரு நாழி உழக்காய்க் காய்ச்சி வாய் மடுத்துக் குடித்திடவே, ... ல்
மெச்சிடவே யதிக சன்னி காந்தாளரும் மெய்யை விட்டு அகலுமென வின

கண்டக சன்னிக்கு மருந்து :-

கடுகுரோகணி தேவதாரம் வெண் காவுள்ளி கார சுக்கு நொச்சியிலை போமட்டி
வேர் கண்டகரே நீ டைந்தோட எறில் பூசனித் தன்குமே
மேவிருசீ நீரு மிருநாழி பன்னிரு கழஞ்சு மிருவெந்தட்டமுக்கான பின் பொடிகள்
திப்பிலி னா வி யிஞ்சியின் சாறுடன் போதவே தான் கொள்ளுமே.

அசுவமேக சன்னிக்கு மருந்து :-

செண்பகம் கொத்தமல்லி கடுகுரோகணி மாஞ்சில் செங்கழுனியின் கோஷ்டமும்
ஸ்பரவு சீதேவி செங்கழுனிர் வேர்க் கொம்பு மேரான பற்படாகமும்
தன் பரவு மிருநாழி நீருழக்கா யிஞ்சி தன் சாறு தாறுழக்காய்
பன் பரவு திப்பிலியும் மேற் பொடியதாக்கிக் கொள் படர கவ சன்னி கெடுமே.

அலற்ற சன்னிக்கு மருந்து :-

செங்கழுனியின் கிழங்கதி மதுரம் சீந்தில் செய்ய தாமரை வ ளையமும்
தங்க மிரு பேய்ப்புடோல் வேரிப்பைப் பூ தலங்கு சிம தேக்கிறுடனே
யந்த மிரு மிரு நாழி நீரிலே சுக்குடனே எட்டொன்று தான் காச்சியே யுழக்காய்
மங்கையர் முலைப்பாலின் மேற்பொடிகள் திப்பிலி கொள் வாராதலற்று சன்னியே.

சந்தனம் பற்படக மிருவேலி கொத்தமல்லி தாரணி யொரு சுக்குடன்
யிந்த வகையான பொடி பன்னிருகழஞ்சு பொடி யிரு நாழி நீர் வார்த்தே
வெந்த பின்னுழக்குழக்காய் முலைப்பாலுடன் மேற்பொடிகள் திப்பிலியுடன்
இந்த வகை கொள்ள அலட்டு சன்னி வாராதிடைந்தோடும் நிச்சயமிதே.

பித்த சன்னிக்கு மருந்து :-

நத்தைச் சூரி குதிரை வாலி நாகப் பாம்பு நாயுருவி பற்றக்
பித்த சன்னி மோகரித்துப் பேச்சு மற்றுக்கிடப்பவர் தாம்
சத்தப் படாமலெழுந்திருப்பர் தப்பாதென்றுஞ் சாற்றியதே.

சுரத்தின் மேல் வந்த நாக்கிசிவுக்கு :-

சுக்குத் திப்பிலி மிளகுடனே தய்ய கடுக்காய் இரசுப்பு
குக்கில் குதிரைக் குளம்புடனே கோவின் கன்று மிதேவா
மிக்க வெல்லந் தேன்கட்டி மிகவு மரைத்து உருண்டை செய்து.
தக்க வார மேழு கொள்ளத் தாளார் நாக்குத் தளர்ந்திடுமே.

மதன காமேசுரம் :-

ஜெந்தகமும் வசுவி கேருயின் அப்பிரக செந்தூரந் தன்னுடனே சேர்த்திட்டு
மூந்தவே ஜாமத்தை விரைத் தயிலத்தொரு சாமந் தானரைத்துத்
தாமந்தத் தயிலத்துள் சாற்றுக் கேள் நேமத்தால் தோளாந்திரமாகத்
தொரு சாமந்தானெரித்துத் தாளாபரிகாரி கோதன்னுடனே வெள்ளாடு மூத்திரமும்
காள வாய் மூத்திரத் தோடொவ்வொன்றில் சாத்திரமுஞ் சொன்னபடி
தானெரித்து நாத்திசையோர் கொண்டாட அம்மருந்தை கொமட்டி மாதளம் பழத்தில்
நன்றாகவே யமத்தி நாட்டிய பின் நன்றாக மண் சீலை செய்தவுடன் மாறுதோர் புடமு
மிட்டு தன் சேரவே யெடுத்துத் தரணிதனைப் பன் சேர அம் மருந்தோடுமத்தத ஆன
விரைத் தயிலம் செம்மையுடனே பிசறிச் சிமிழி விட்டு நன்மையுடனுச்சிதனைக் கீறி உள்ள
மருந்தென்னலை நிச்சயமாய் மத்திக்கு நீயிலிக் கேள் மெச்சியதோர் பதப் பிரதேமுடன்
பொல்லாப் பிசாசு பேய் நாதவே தாளமுட சூடாறு மேதினியில் அஉட்ட ருன்ம நீர்க்
கோர்வை ஆன சந்த சூலையுடன் கட்டி வயற் நோய் பலவுங் காணுதே திட்டமுடன்
எருமைத் தயிரதிலே யிம்பமாய்த் தானருந்த திறமையுடனே பாண்டு தீருமே.
அருமைத் தாய் வாழைப் பழத்துடனே வன் மருந்து எள்ளளவு தாழப் பதி
யத்தைத் தானருந்த மீனப் பசுப் பால் குடித்து மிகப் பச்சைக் கற்பூரத்தோடே

ரசப்பான சந்தன மேனரை திசைப் பாரோர் பூசிடவே மன்மதனைப் போல வடிவு தரும் விசுமத வேழம் போல் மிருக்கிட்டாம் நேசியுடன் காமத் தொழில் பலவுங் காட்டி வெகுளீலே செய்து சாமத்திலெழுந்திரந்தான் புணர் வன் மாமனதாய் அப்போதுக் கப்போது ஆவின் பால் தான் குடித்துத் தப்பா ளெநீருஞ் சர்க்கரையுஞ் யிப்பாக் கன்று மற்றும் பூ தீருடன் பச்சைக் கற்பூரஞ் தின்ப மிக வேகுளித்துச் செய்திடவே நன்றெனவே யிந்திரியம் பொதியாதியாகதா மளவில் தந்திரமாய் நிம்ப விரை தானரைத்து விந்தை யுடன் பாக்களவு கொண்டிடவே பாசு மினி யிந்திரியம் போக்கி விடுமே யிதனைப் பூதலத்தோர் மாதர்களுடன் விதமா யிது வெனவே நிச்சயமாய்க் கொள்வோர்க்கு சதா காலமும் போகந் தவராதே. யிதமாக அன்னவிரர் சொற்படியே ஆதி முனியோருரைக்கத் தன்டமிழோரர் கவிதை யெனத் தாபித்தார் மண்டலத்தில் தாமே திரு நாமந் தாமுரைக்கக் கேள் மதன காமே சுரமிதனைக் காணும்.

<u>சதிரக் கள்ளிப் பால் சுத்தியல்:-</u>

உகாயின் பழுத் தயிலும் வெண்ணையுஞ் சாரித்துச் சதிரக் கள்ளிப் பாலில் கூட்டச் சுத்த சலமாம்.

<u>மாத்திரை வகை:-</u>

ரசங் கெந்தகம், தாம்பிர பற்பம் இவை மூன்றுஞ் சமன் கூட்டிக் கொடிவேலி கசாயத்திலரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா யெந்திரத்திலே ஒரு நாளெரித்து ஆறின வாறே எடுத்து பூனைப் பிச்சிலே இரண்டு சாமம் அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை செய்து ஒரு உருண்டை அநுபானத்திலிடத் தாந்திரிக சன்னி வாதந் தீரும்

<u>பூத வயிரவம், உக்கிர வயிரவம்:-</u>

ரசம், நாபி, அப்பிரகம், காரீய பற்பம் இவை நான்கும் சமன் கூட்டி திரிகடுச் சீலை*மண்*செய் சாத்தில் இரண்டு சாமம் அரைத்து குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்தில் இரண்டு சாமமெரித்து ஆறின வாறே நாய்ப் பிச்சிலரைத்து சனல் விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி இளநீரில் காய்ச்சி உரைத்திட அந்தக சன்னி வாதந் தீரும்.

<u>மந்த வயிரவம், மதன வயிரவம்:-</u>

தாம்பிர பற்பம், லோகமலஉந்உநாரம், படிக்காரம் இவை ஐந்தும் சமன் கூட்டி பஞ்ச லோக கசாயத்திலொரு நாளரைத்து அந்தக கசாயத்திலே டோளெந்திரகமா ஒரு சாமமெரித்து ஆறின வாறே எடுத்துக் கோழிப் பிச்சிலே அரைத்துத் துவரைப் பிரமாணம் குளிகை செய்து தேனுந் திப்பிலியுங் கூட்டி அருந்த ருத்திர சன்னி வாதந் தீரும்.

ரசங் கெந்தகம், மனோசிலை, தாம்பிர பற்பம், இந்துப்பு இவை ஐந்தும் சமன்கூட்டிக் கஸ்தூரி கத்திரிப் பழச் சாறுது சிறு வழுதலைப் பழச் சாறுவது விட்டு அரைத்து உருண்டை செய்து இளநீர் காய்ச்சியாவது திரிகடுகு கசாயத்திலாவது உரைத்திடச் சித்த விப்பிரகாராச சன்னி வாதந் தீரும்.

<u>ஆனந்த வயிரவம்:-</u>

ரசங், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், வெங்காரம், லோகம், தாம்பிர பற்பம், வங்கம், காரீயம் இந்த ஒன்பது வகையும் சமன் கூட்டிக் கரிசலாங் கன்னிக் கசாயத்தில் ஒரு நாளரைத்துப் பற்படக கசாயத்தில் தொளாந்திரமாக ஒரு நாளெரித்து பாம்பின் பிச்சிலே ஒரு நாளரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை செய்து அநுபான விசேஉ த்திலிடச் சீதாங்க சன்னி வாதந் தீரும்.

<u>மனோகர வயிரவம்:-</u>

ரசந் தாம்பிர பற்பம் யவட்சாரம், சத்தியட்சாரம், படிக்காரம்
இந்தப் பத்து வகையும் சமன் கூட்டி எருக்கம் வேர்க் கசாயத்தில் மூன்ற

வச்சிர குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்தில் ஒரு நாளெரித்து ஆறின வாறே எடுத்துக் கழுதைப் பிச்சிலரைத்துக் குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து தேனிலிடத் தாந்திரிக சன்னி வாதந் தீரும்.

சொர்க்கானந்த வயிரவம்:-

ரசங் கெந்தகம், நாபி, வெண்காரம், வங்க பற்பம் இவை ஐந்தும் சமன் கட்டித் திரிபலைக் கசாயத்திலே இரண்டு நாளரைத்து அந்தக் கசாயத்திலே டோளேந்திரமாக இரண்டு சாமமெரித்து ஆறின வாறே எடுத்துப் பன்றிப் பிச்சிலரைத்துக் குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து இஞ்சிச் சாற்றிலிடக் கண்ட கொட்டி சன்னி வாதந் தீரும். பத்தியம் தயிருஞ் சோறு உண்பது. தாகமானால் தண்ணீர் குடிப்பது.

கலியான வயிரவம்:-

ரசங் கெந்தகம், நாபி, வெள்ளைப் பாஷாணம், வங்கந் திப்பிலி இவை யாறுஞ் சமன் கட்டித் திரிபலைக் கசாயத்திலே டோளாந்திரமாக இரண்டு சாமமெரித்து ஆறின வாறே எடுத்துப் பன்றிப் பிச்சிலரைத்துக் குன்றி விரைப

கலியான வயிரவம்:-

ரசங், கெந்தகம், நாபி, வெள்ளைப் பாஷாணம்,வங்கந் திப்பிலி இவை யாறுஞ் சமன் கட்டிக் கொடி வேலிக் கசாயத்திலே ஒரு நாளரைத்து உருண்டை செய்து குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா யெந்திரத்திலே ஒரு நாளெரித்து ஆறின வாறே கெண்டைப் பிச்சிலரைத்துச் சனல் விரைப் பிரமாணம் குளிகை செய்து அனுபான விசேஷத்திடக் கரணிக சன்னி வாதந்தீரும். பத்தியம் பாலுஞ் சாதமும் சர்க்கரையும் மிஞ்சுங் கரும்புங் கூட்டுவது. ரசங் கெந்தகம், நாபி, வெள்ளைப் பாஷாணம் வங்கந் திப்பிலி இவை ஆறுஞ் சமன் கூட்டிக் கொடிவேலிக் கசாயத்திலே ஒரு நாளரைத்து உருண்டை செய்து குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்திலே ஒரு நாளெரித்து ஆறின வாறே கெண்டைப் பிச்சிலரைத்துச் சனல் விரைப் பிரமாணம் குளிகை செய்து அனுபான விசேஷத்திலிடக் கரணிக சன்னி வாதந் தீரும். பத்தியம் பாலுஞ் சாதமும், சக்கரையு மிஞ்சும் கரும்புங் கூட்டுவது.

விஜாரக வயிரவம்:-

ரசம், வங்கம், தாம்பிர பற்பம் இவை மூன்றுஞ் சமன் கூட்டி எருக்கம் பாலில் அரைத்து அந்தப் பாலிலே டோளேந்திரமாக ஒரு சாமமெரித்துக் கலைமான் பிச்சிலே அரைத்து குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து திரிகடுகு கசாயத்திலிடப் புத்தி நேத்திர சன்னி வாதந் தீரும்.

சன்னி வாத வயிரவம்:-

ரசங், கெந்தகம், நாபி, அப்பிரகம், வெண்காரம், காரீயம் இவை ஆறுஞ் சமன் கட்டி ஆலம் பாலிலொரு நாளரைத்து அந்தப் பாலிலே தோளாந்திரமாக எரித்துக் கெண்டை மீன் கடாமாடு மயில் இந்த மூன்று வகைப் பிச்சியும் ஒரொன்றில் ஒவ்வொரு நாளரைத்து துவரைப் பிரமாணம் குளிகை செய்து திப்பிலிக் கசாயத்திலிட ஈரத் தடிய என்றுஞ் சன்னி வாதந் தீரும்

காருண்ய வயிரவம்:-

ரசம், அப்பிரகம் இரண்டும் சமன் கட்டிக் கையாந்தகரைச் சாற்றிலே ஒரு சாமமெரித்துக் காட்டுப் பன்றிப் பிச்சி மயில் பிச்சு இரண்டிலும் அரைத்து உழுந்துப் பிரமாணம் குளிகை செய்து அனுபான விசேஷத்திலிடப் பிரலாப சன்னி வாதந் தீ

சித்த வயிரவம்:-

ரசம், அரிதார மிரண்டுஞ் சமன் கூட்டிக் கற்றாழஞ் சாற்றிலே அரை அந்தச் சாறிலே தோளாந்திரமாக ஒரு சாமமெரித்து மீன் பிச்சிலரைத்

சுண்டைப் பிரமாணம் குளிகை செய்து தேனுந் திப்பிலியுங் கூட்டி இட சிங்க வாத சன்னி வாதந்தீரும்.

காலு வயிரவம்:-

ரசம், கெந்தகம், பெருங்காயம், யவட்சாரம், சத்திசாரம், சாரணைக்காரம், திரிகடுகு, பஞ்சலவணம், கொடுவேலி வேர், எருக்கம் வேர், பிரண்டை வேர், மருளிச் சங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, திரிபலை, நாபி இருபத்து மூன்று வகையும் சமன் கூட்டி எருக்கம் வேர்க் கசாயத்தில் இரண்டு நாளரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்தில் இரண்டு சாமமெரித்து ஆறின பிறகு நாரும் பிச்சிலரைத்துக் குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து இளநீர் காய்ச்சியிட அபசன்னியாசன்னி வாதந் தீரும். மற்றுள்ள அனுபானத்திலிட சர்வ சுரங்களுந் தீரும். பத்தியம் தயிருஞ் சாதமும் உண்பது. புக்கில் வயிரவம் பூத வயிரவம் மந்த வயிரவம், மதன வயிரவம், ஆனந்த வயிரவம், மகேசுர வயிரவம், சொர்ணசானந்த வயிரவம், சூரியான வயிரவம், விதரண வயிரவம், சன்னி வாத வயிரவம், காருண்ய வயிரவம், சித்த வயிரவம், கால வயிரவம், ஆக வயிரவம் பதினாறு சன்னி வாதம் பதினாறுக்கும் பிரயோகிப்பது.

பூரண சந்திரோதயம்:-

தங்கம் பலம்.க, சுத்த ரசம் பலம்.அ, கெந்தகம் பலம்.யஅ, ஆகக் கூட்டிச் செருப்படிச் சாற்றிலே ஒரு நாள் கற்றாழஞ் சாற்றிலே ஒரு நாளரைத்து மயிலாக்கி உலர வைத்துக் குப்பியிலடைத்து வாய் மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்திலே மந்தாக்கினியாகப் பனிரெண்டு சாம மெரித்து ஆறின பாறே எடுக்க மாதுளம் போலே செந்தூரிக்கும் செந்தூரத்துக்கு நாலத்தொன்று சுத்பூரம் அம்மாத்திரம். கிராம்பு அம்மாத்திரம், சாதிக்காய் அம்மாத்திரம், திப்பிலி, அம்மாத்திரம், சமுத்திராச் சோகி விரை எழு பணவிடை கஸ்தூரி ஒக்கக் கூட்டிப் பொடி செய்து செந்தூரத்துடன் கலந்து தினம் ஒரு பணவிடையாக உதைய காலத்திலே பாக்கு வெத்திலையுடன் கூடத் தின்னவும். இப்படி ஒரு மாதந் செய்யில் மகா வியா(பக) புத்திபுஷ்டிண்டாம். அனேகம் பெண்களுடனே அனுபவிக்கலாம். இந்தப் படி நித்தம் கொண்டு வரச் சகல ரோகங்களுந் தீரும். காய சித்தியுண்டாம். பத்தியம் காரப்பு, புளிப்பு ஆகாது. பசுவின் பால், பழவரிசிச் சாதம்வெல்லங் கூட்டின கசாயம் உண்ந்து கூட்டின கசாயம் கூட்டுவது.

பிறந்த சுர ரசம்:-

ரசம், கெந்தகம், சாதிலிங்கம், நாபி நேர்வாள இவை ஐந்துஞ் சமன் கூட்டிக் கொடிவேலிக் கசாயத்திலரைத்து அந்தக் கசாயத்திலே தொளாந்திரமாக ஒரு நாளெரித்து பின் கள்ளிப் பாலிரைத்து உழுந்துப் பிரமாணம் குளிகை செய்து இஞ்சிச் சாற்றிலிடச் சகல சுரங்களுந் தீரும். எருக்கம் வேர் கசாயத்திலிடச் சன்னி வாதமெல்லாந் தீரும். பத்தியம் தயிருஞ் சாதமுமுண்பது. தாகமானால் மோர் குடிப்பது.

திரிபுராந்தக ரசம்:-

சுத்த ரசம், கெந்தகம், அப்பிரக பற்பம், மீன் பிச்சுக் காராட்டுப் பிச்சுக், காட்டுப் பன்றிப் பிச்சு இம்மூன்றிலும் மூன்று மூன்று சாமமரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சிச் சாற்றிலிட வாத சுரம் பித்த சுரம், சிலேட்டும சுரம் தீரும். அந்தந்த அனுபானத்திலிடத் தொந்த சுரம், திரிபுரதோஷ சுரம், சன்னி வாத சுரம் தீரும். பத்தியம் மோருஞ் சாதமும் இடத் தாகமானால் கரும்பு கூட்டுவது.

கால பயிரவ ரசம்:-

அப்பிரகம் கெந்தகம், அரிதாரம், மனோசிலை, துத்தம், துரிசி, நேர்வாளம், சாதிலிங்கம், வெண்காரம், இந்துப்புச் சிவந்த உப்பு இந்தப் பனிரெண்டு வகையும் சமன் கூட்டி இலுப்பை நெய்யிலே மூன்று நாளரைத்து அந்த நெய்யிலே தொளாந்திரமாக மெரித்து குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து ஒரு குளிகை எலுமிச்சம் பழச்

குழைத்து தலையிலே குடோரியாடி அவடத்திலே வைத்து விரலாலே மத்திக்கச் சயித்தியம் நடுக்கல், வலிப்பு, சுவாச காசம் இப்படி எழுந்த சன்னி வாதங்களெல்லாம் தீரும்.

சபேசாரம்:-

சுத்த ரசம், கெந்தகம், சாதிலிங்கம், நாபி, வெங்காரம் இவை ஐந்தும் சமன் கட்டிக் கொடிவேலிக் கசாயத்திலே அரைத்து குப்பியிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்திலே சமலாக்கினியாக இரண்டு சமமெரித்து ஆறின வாறே பொடி செய்து குன்றி விரைப் பிரமாணம் திரிகடுகு கசாயத்திலிட வாத பித்த சன்னி வாத சுரங்களுந் தீரும்.

மூலிகா முகம்:-

சொர்ண பற்பம், தாம்பர பற்பம், ரச பற்பம், காந்த பற்பம், சூரிய பற்பம் வெள்ளிய பற்பம், அப்பிரக பற்பம், ரசம், நாபி, கெந்தகம், இந்தப் பதினொரு வகையும் சமன் கட்டிக் கொடிவேலிக் கசாயம், எருக்கம் வேர்க் கசாயம் சாட்டரணை வேர்க் கசாயம், பொன்முசுட்டை வேர்க் கசாயம், சீந்தில் தண்டுக் கசாயம் கையாந்தகரைச் சாறு, நொச்சியிலைச் சாறு, ஆடாதோடை இலைச் சாறு ஊமத்தையிலைச் சாறு, கற்றாழைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு இந்தப் பனிரெண்டு வகையிலும் ஒரொன்றில் ஒவ்வொரு சாமமாகப் பனிரெண்டு சாமமாக அரைத்துக் காசிக் குப்பியிலிட்டு மூடிச் சீலை மண் செய்து வாலுகா எந்திரத்திலே மந்தாக்கினியாக ஒரு நாளெரித்து ஆறின வாறே மகிஷம் கடாமாடு குதிரை காட்டுப் பன்றி ஆடு மயில் கோழி கரும்பாம்பு மீன், தவளை, இந்தப் பத்து வகைப் பிச்சிலும் தனித் தனியாக அரைத்து பரணியிலடைத்து ஊசி முனையிலே எடுத்து அநுபான விசேஷத்திலிட சத்தியா சன்னி வாதம் கவிசை பீலிகை வெப்புப் பாவை நீராமை குன்மம் இது முதலான கன வியாதிகளெல்லாந் தீரும். இச்சா பத்தியம்.

சலசரி செந்தூரம்:-

ரசம் பலம்.க, சுத்த கெந்தகம் பலம்.யஉ, மனோசிலை பலம்.யஉ, பொன்னிமிளை பலம்.க, தங்கம் பலம்.க, இவை கட்டி மிளகரைந்த விழுதிச் சாறு, தாளிக் காய்ச் சாறு செம்பரத்தம் பூச்சாறு இதுகளில் ஒரொன்றில் மூன்று சாமமரைத்துப் பொடி செய்து அதை ஒரு குழிப் பணியாரச் சட்டியில் அந்தக் குழிப் போட்டுச் சீலை சில்லோடு கொண்டு மூடி அதின் மேலே கண் கட்டுவதற்கு வகை குளவிக் கூடு மண் வெள்ளைக் கல், சுண்ணாம்புக் கல், கரு வளையலவர் மண் இந்துப்பு புளியங்கொட்டைத் தோல், கோழி முட்டைத் தோல் பொன் மெழுகு கொசுத் தேன் மெழுகு கருங் குங்கிலியம் கடுக்காய் கருவேலம் பிசின், நல்ல வெல்லம், புழுங்கலரிசி, பழங்கிட்ட இவை சமன் கட்டிப் பொடி பண்ணி அக்கினியிலே வெதுப்பி சத்தியல் கொண்டு அடித்து மத்தித்து அந்த மண் கொண்டு சில்லோடு புதைய அழுத்தி மூங்கில் விறகு கொண்டு தீபாக்கினியாக மூன்று நாளெரித்து ஆறின வாறே எடுக்கச் செந்தூர முருக்கம் பூப் போலே இருக்கும். இந்தச் செந்தூரத்துக்கு அநுபான ஒரு பணவிடை தேனுடன் கொள்ள இரண்டு தேச காலமும் பத்து நாள் ஒட்டிய பண் கால் கை முடங்கின சூலை, வயிற்று வலி இவை தீரும். ஒரு பணவிடை சிங்கள சூரணத்துடன் இரண்டு தேச காலமும் பத்து நாள் கொள்ள ஈளை எலி கடி, மந்த காசம், சுவாச காசம், கய சுவாச இது முதலாகிய சிலேட்டும வியாதி சகலமும் தீரும். ஒரு பணவிடை வெருகடி சூரணத்துடன் தேன் கலந்து இரண்டு தேச காலமுமாக நாற்பது நாள் கொள்ள எண்பது வாதமுஞ் சத்தி குன்மமும் எரி குன்மம் வலி குன்மம் அட்டிகை பீலிகை ஆமை வலி இது முதலாகிய குன்ம வியாதி சகலமும் ஆமிலப் பயித்தியமுந் தீரும். ஒரு பணவிடை எலாதி சூரணத்துடன் இரண்டு காலமும் நாற்பது நாள் கொள்ளப் பயித்தியத்திலே எழுந்த வியாதி சகலமும் உஷ்ண வியாதியாதிகள் எரிம்புருக்கி, உள்ருக்கி, சுக்கிலப் பிரமியம், மேகம், சுரோணித பிர மேகம், குன்மாங்கிஷம், நீரடைப்புக் கல்லடைப்பு, இந்திரிய கண்டி இவ

ஒரு பணவிடை நூலாம் பழமும் பூமி சர்க்கரைக்கிழங்கும் சூரணம் பண்ணி வெருகடி தேனில்
கலந்து நாற்பது நாள் கொள்ள வச்சிர காயம் தாது வந்தவே உண்டாம். அழகும் வீரி
யமும் பிறக்கும். கை கண்டது.

வங்க செந்தூரம்:-

காரீயம் பலம்.க, கோசலத்தில் இருபது விசை உருக்கிச் சாய்த்து எடுத்துப்
போட்டு புடச் சட்டியில் அதை வைத்து கற்றாழை வேர், சீரகீரை வேர், சிறுக நறுக்கிப்
பெட்டிப்படன் கலந்து சிறுகச் சிறுகப் போட்டு ஈயத்தை வறுக்கச் செந்தூரமாம். மூன்று
நாள் வறுக்கச் செந்தூரமாம். அரைப் பணவிடை தேனுடன் கலந்து இரண்டு காலமும்
கொள்ளப் பெருவியாதி முதலாகிய குட்டம் செவ்வட்டை கடி காருக் கடி செய்யான் கடி,
வண்டு கடி, கபால குட்டம் கபால சிரங்கு, சொறி தீரும். செந்தூரம் உப்புக் கலவிப்
போடவும்.

பேய் நாய் கடிக்கு:-

ஊமத்தை இலை ஒரு பிடி, சர்க்கரை பலம்.க, பழ .ளி பலம்.க, புலித்
தோல் பலம்.க இந்த வகையுங் கட்டி புளிப் போலே மசியப் பிடித்துத் தின்னக் கொடு
த்து முப்பது நாழிகை கட்டி வைத்து முப்பது குடந் தண்ணீர் சொரியவும். மறு பத்தியம்
இரண்டு நாள் பிடிக்கவும். பேய் நாய் பேய் நரி கடி தீரும்.

ஆனந்த பயிரவம்:-

நாபி, கெந்தகம், சாதிலிங்கம், வெண்காரம், திரிகடுகு இவை எழுஞ் சமன்
கட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலே மூன்று நாளரைத்துக் குன்றிப் பிரமாணம் அநுபானத்தி
லிடச் சுவாச காசம், அதிசாரம், அசீரணம், அக்கினி மந்தம், பிரமேகம் இவை எல்
லாந் தீரும்.

வித்தியாரசம்:-

சுத்த ரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, துத்தம், தாம்பிர பற்பம்
இவை ஆறுஞ் சமன் கட்டித் துளசிச் சாறு நொச்சிச் சாறு இந்த இரண்டு வகைச் சாற்
றிலும் தனித் தனி அரைத்துக் கடலைப் பிரமாணம் குளிகை செய்து தேனிற் திப்பிலியுங் கலந்
திடச் சீத முதலானதெல்லாந் தீரும். வாந்தியும், பேதியும் எடுக்கும். தயிருஞ் சோறும்
பத்தியமாகும்.

அக்கினி ரசம்:- ரசம், கெந்தகம், நாபி, நேர்வாளம் இவை நாலும் சமன் கட்டி
பொடி செய்து குன்றி விரைப் பிரமாணம் சர்க்கரையுடன் கலந்திடச் சுரமெல்லாந் தீரும்

மன்னி மாத்த சுரம்:-

ஏலம், லவங்கப் பத்திரி, அதிமதுரம், கோஷ்டம், கிராம்பு, நற்சீரகம்,
கற்பூரம், காட்டெருமைப் பால், நெல்லி முள்ளி, ஆண் மரவைக் கிழங்கு, அமுக்கிறாக்
கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைக் கிழங்கு, நிலக்குமிழ் வேர், நெருஞ்சில் வேர்
பொன்னாங்காணி வேர், நீர் முள்ளி வேர், இலவம் பிசின், சீந்தில் வேர் இவை பத்
தொன்பதுஞ் சமன் கட்டிச் சூரணம் பண்ணி அதற்கு இரட்டிப்புச் சீந்தில் சர்க்கரை கட்டித்
தானிக்காய்ப் பிரமாணம் உதைய காலந் தேனுடன் கொள்ளச் சாயங்காலம் பசுவின்
பாலிலாவது தண்ணீரிலாவது கொள்ள உஷ்ணமுந் தாகமுமாகில் சர்க்கரையுடன் கொள்ள
யோனி தோஷம், லிங்க தோஷம், தாது நஷ்டம் இருபத்தொரு வகை மேக இவை
யெல்லாந் தீரும். லிங்கம் பெருகப் பெருக்கும். வீரிய முண்டாம்.

ராசப் பிரதாமார்த் தாண்டம்:-

சுத்த நாபி, நேர்வாளம், வெண்காரம் மூன்றுஞ் சமன் கட்டி அதற்குச்
லிங்கம் கட்டி இரண்டு சாமம் பொடியாக மத்திச்சு உழுந்து பிரமாணஞ் சர்க்
கரையிட மூன்று நாளிடச் சீத சுரந் தீரும். பத்தியம் தயிருஞ் சோறு முப்பது.

சீத சுராங்குசம்:-

ரசங், கெந்தக மரிதாரம், நாவி துத்தம், துரிசி வெங்கார இவை ஏழுஞ் சமன் கட்டி பிஞ்சு பாகலிலைச் சாற்றிலொரு நாளரைத்து குன்றி விரைப் பிரமாணம் குளிகை செய்து சர்க்கரையும், நற்சீரகமுங் கலந்திடச் சீத சுரமும் மாறல் சுரமுந் தீரும். மற்று அநுபானத்திலாவது உரைத்திடத் தார சுரந் தீரும்.

சுராந்தக ரசம்:-

நாபி பலம்.௩, சாதிலிங்கம் பலம்.௨, கடுகுரோகணி பலம். சமாகக் கட்டித் தண்ணீர் விட்டரைத்து உழுந்து பிரமாணங் குளிகை செய்து மூலைப் பாலாவது சர்க்கரையிலாவது உரைத்திடத் தாப சுரந் தீரும்.

மகா சுராங்குசம்:-

திரிகடுகு, சமன் கட்டி வெள்ளாட்டுக் கோமியத்தில் ஒரு நாளூற வைத்து வேப்பிலைச் சாற்றிலரைத்துக் குன்றி விரைப் பிரமாணங் குளிகை செய்து வேப்பிலைச் சாற்றிலரைத்துக் கரைத்துக் கொடுக்கச் சுரங்களுஞ் சன்னி வாதமுந் தீரும். உடனே எண்ணெயிட்டு முழுகலாம்.

மகா சுராங்குசம்:-

சுத்த ரசம், கெந்தகம், நாபி, ஊமத்தை விதையிவை நான்குஞ் சமன் கட்டி அதக்கு ரெட்டிப்புத் திரிகடுகுப் பொடி கட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலொரு நாள் இஞ்சிச் சாற்றிலொரு நாள் அரைத்து குன்றி விரைப் பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சிச் சாறு, சுக்குக் கசாயம் வெற்றிலைச் சாறு இதுகளிலிடச் சீதமாந்த சுரம், திரிதோஷ சுரம், விஷ சுரம் இவையெல்லாம் மூன்று நாளிலே தீரும்.

பூதாதி படகம்:-

சுத்த ரசம், கெந்தகம், நாபி, நேர்வாளம், தாம்பிர பற்பம், லோக பற்பம், திரி பலந் திரிகடுகு, திப்பிலி மூலம், வாய்விளங்கம், ஏலம், லவங்கப் பத்திரி, நாககேசரம், ரேணுகம், முத்தக் காசு, கொடிவேலி இவை சமன் கட்டி கொடிவேலிக் கசாயத்திலே ஒரு நாளரைத்துப் பொடி பண்ணி அந்தப் பொடிக்கு இரட்டிப்பு பழைய வெல்லங் கட்டி புளியம் விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி சுவாச காசத்துக்குத் தேனுந் திப்பிலியுங் கட்டி இடவும். சன்னி வாதத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். பித்த சன்னிக்குச் சர்க்கரையிலிடவும். பாண்டு சுரத்துக்கு வெல்லச் சாற்றிலிடவும். பாண்டு கிராணிக்கு எருமைத் தயிரிலிடவும். மகோதரத்துக்குக் கொள்ளுச் சாற்றிலிடவும். அசீரணம், போய் தீபன முண்டாம். மிளகு, உப்பு, வெந்நீர் ஆமணக் கெண்ணெய் இதுகளிடவும். மற்றும் அநுபானத்திலிடச் சகல வியாதியுந் தீரும். திரிதோஷ சுரம், சீதாங்க சன்னி, பிரமேகம் மூலை, சூலை வாதம் இப்படியான வியாதி தீரும்.

அரித்திரா படகம்:-

மஞ்சள், மர மஞ்சள், மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், வேப்பிலை பெருங்கோரைக் கிழங்கு, இவை ஏழுஞ் சமனாகக் கட்டி வெள்ளாட்டு மூத்திரத்தி லூறப் போட்டு மற்ற நாளரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்து நிழலுலர்த்தி திரிதோஷ விஷ சுரத்துக்கு வெல்லத்திலிடவும். பாண்டு ரோகத்துக்குகோமூத்திரத் திலிடவும். ரெத்த அதிசாரத்துக்கு ஏலம், லவங்கப் பத்திரி வைத்துப் பொடி பண்ணி இடவும். கிராணிக்கு மதிசாரத்துக்கும் பொரியிலிடவும். அசீரணத்துக்கு வெந்நீரிலிடவும். கண் சிவப்பு நீர்ப் பாய்ச்சல், திமிர் பூ வெட்டு இது முதலான கண் வியாதிக்கு கோமூத்திரத்திலாகுதல் தண்ணீரிலாகுதல் உரைத்துக் கண்ணிலிடவும். பாம்பு விஷத்துக்கு ஒரு பணவிடை வாய் மருந்தாய்க் கொடுத்து எட்டு உருண்டை மோரிலரைத்துச் வாயில் பூசவும். தாது நஷ்டம் இருபத்தொரு வகை மேகமிவை யெல்லா

<u>பேதி மாத்திரை:-</u>

எந்த செண்பகத்தோடேல மிலவங்க மஜராங் கோட்டம் சூழ்ந்திலை யெல்லாம் பாதி சுத்தி நேர்வாளம் பாதி காய்ந்த நீர் விட்டரைத்து கால்க் கழஞ் சுண்டை கொள்ளச் செந்திலை கழிய வேண்டித் தேன் சுக்கு நீரில் கொள்ள

<u>ஏலாதி உண்டை:-</u>

ஏலம், லவங்கம், அதிமதுர சிறுவேலி வேர், அக்கு, நன்னாரி, சுந்திரி, திப்பிலி இலுப்பைப் பூ, கடுகுரோகணி இவை முக்கழஞ்சு ஒன்று இளநீர் வாத்தரைத்து முன்னிப் பிர மாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தி இளநீரிலிடப் பயித்திய சுரம் தீரும். கந்தல் கசாயம் நீரிலிடச் சன்னிகள் தீரும்.

<u>சரீரம் விந்து நஷ்டத்துக்கு:-</u>

அத்திப் பிஞ்சு இடிச்சு இரண்டா மிதிர எருமைக் கிடாறித் தயிர் கரைச்சுக் கொள் இந்திரியங் கெட்டிப்படும். சரீரம் புஷ்டியுண்டாம்.

<u>அல்லுதித் தயிலம்:-</u>

ஞாயிற்றுக் கிழமை நாள், எருக்கம் பூ மலராத பூ. அரும்பாய் கொண்டு வந்து புதுப் பானைக்கு வாயன் கொடுத்துச் சாயங்காலம் வாரி வைத்து மறு ஞாயிற்றுக்கு தயில மிறக்கி அந்தத் தயிலத்தை சன்னி பதினெட்டும் விஷ கடிக்கும், வெற்றிலையில் பாவிடை கொடுக்க குணமாம். சோதினை கை கண்டது.

<u>வாயாலே ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

காட்டெரும் பட்டை ஒரு கடை கொண்டு வந்து கட்டு சாம்பலைப் புதுப் பானை யிலே போட்டுத் தண்ணீர் விட்டுக் கரைச்சு ராத்திரிக்கு வைத்து மறு நாள் காலமே கொள்ள நிற்கும். வெட்டை மேலே பிறந்தது நிற்கும். கடியத்தின் பேரிலே பிறந்தது நில் லாது. கோழி முட்டை .ம, கடுக்காய்.ம, கழச்சிக் காய்.ம, பனை வெல்லம் ம, கழக் கொட்டிக் கொழுந்து ஒரு கொத்திலே எரிச்சு ஏழு நாள் குடிக்கக் குணமாம் விளக்கெண்ணெயிலெரிக்கவும். பத்தியம். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

<u>அந்திர வாய்வுக்கு மிருத சஞ்சீவி மாத்திரை:-</u>

பூரத்தை மெழுகு வந்து பசுவின் பாலிலே போட்டு மணக்கிப் போட்ட பிறகு எடுத்து உலர்த்தி எடுத்து ஒரு காய வைத்து பொன் வறையாய் வறுத்து மணம் கண்ட பிறகு இறக்கி எடுத்துக் கல்வத்திலிட்டு இத்துடனே சுக்கு, மிளகு, திப்பிலி இது வகைக்கு விரா கனிடை கட்டி எருக்கிலை வதக்கிச் சாறு பிழிந்து நன்று அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை பண்ணி அநுபானத்திலிடச் சன்னி சுரம்,, தோஷம் தீரும்.

<u>புவுத்திரத்துக்கு:-</u>

நிலாவாரை சமூலமும் இடிச்சு வஸ்திர காயம் பண்ணிச் சூரணத்துக்கு நாலத்தொன்று சீரகம் பொடி செய்து கலந்து கொள்ளக் குணமாம். கை கண்டது. நிலாவாரை இடிச்சு பிரண்டைச் சாற்றில் கொள்ள மூல மாறும். கா*

<u>காய சித்திக்கு:-</u>

சிறு கட்டுக் கொடியிலே பிடுங்கி வந்து பனைவெல்லம் போட்டுக் கடைஞ்சால் தயிர் போலே ஆகும். அதைச் சாப்பிட்டால் பசியாது.

<u>இதக்கு மாத்திரை:-</u>

கோழியவரைச் சாறு சாப்பிட்டால் பசி எடுக்கும்.

பஞ்ச லவணம், பஞ்சசாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், ஆனைத் திப்பிலி தேசாவரம், சீரகம், திப்பிலி மூலம், சித்திர மூலம், பெருங்காயம், பெருங்க[illegible]ம், வாய் விளங்கம், கடுக்காய் இது வெல்லாங் கூட்டிடைக்குச் சமன் சீனி கண் [illegible] பல்

இவை இரண்டுக்குஞ் சமன் கல்லுப்பு இவை யெல்லாம் இடி வறையாய் வரைத்துச் சூரணம் பண்ணி வெட்டை சரீரத்துக்குத் தேனில் கொள்ளவும். பத்தியம் புளிப்பு, புகையிலை பாகல்காய், பச்சைத் தண்ணீர் எருமைச் சம்பந்தமாகாது. இதைக்குத் தீரும் வியாதி அசீரணம், குன்ம வாய்வு, மேக வாய்வு, கிராணி, சூலம், பவன வாய்க் கடுப்பு, சுர தோஷங் காமாலை பாண்டு, மார் நோவு, பஞ்ச வாதங் குதிபசகாளி, செரிப்ப சூலை அருவை பெருவயறு அக்கினி மந்த இவை முதலானதும் குணமாம். நித்திரையில்லா மலிருந்தால் சாதிக்காய், சாபத்திரி கூட்டவும். வயிற்றிலே அருவை பெருவயறு இல்லா மலிருந்தால் கள்ளிச் சாம்பலும், கல்லுப்புங் கூட்ட வேண்டாம். எண்ணை யிட்டு நன்ம நாளைக்கொழுக்கால் முழுகவும். வெய்யிலிலே சஞ்சரித்தால் தாக மெடுக்குஞ் குணமாம். கை கண்டது.

வயத்தில் பக்ச குலைக்கு :-

சுருக் கொட்டையிலைச் சாறு படி.தெ, வெள்ளைப் பூண்டுத் தயிலம் படி.௧, காயம் விராகனிடை.௪, மூன்றுங் கூட்டி எரித்து உள்ளுக்குக் கொடுக்கவும். வேதிக்குக் கொடுக்கவும். சுருக் கொட்டி உத்தாமணி மடலை வேம்பு தழுதாழை எருக்கிலை, கோழியவரை யிலை நொச்சியிலை இவை இடித்து செங்கல் வேகப் போட்டு நடுவே வைத்து ஒத்திடவும். தாகத்துக்குச் சிறு வழுதிலை கருக்கிக் காய்ச்சிக் குடிக்கவும். வெள்ளைப் பூண்டு வெள்ளாட்டுப் பாலில் அவித்துக் கொடுக்கவும். சித்தி.

செங்கொட்டை காசுக் கட்டி, கழிப் பாக்கு மூன்றும் இடிச்சு வைத்துக் கொண்டு வெத்திலையிலே கூட்டி மென்று மிஞ்சு போடவும்.

நெற் குன்றித் தயிலம் :-

நொச்சிச் சாறு படி.௧, கையாந்தகரைச் சாறு படி.௧, குன்றை இலைச் சாறு படி.௧, ஆரையிலைச் சாறு படி.௫, பொன்னாங்கண்ணிச் சாறு படி.௫, நீர்ப்பிரமீரைச் சாறு படி.௫, கோவையிலைச் சாறு படி.௰, பாப்பார முள்ளி யிலைச் சாறு படி.௫, பசுவின் பால் படி.௨, பச்சை வெத்திலைச் சாறு படி.௫, கரிசலாங்கண்ணி படி.௩, சுக்கு, மிளகு, திப்பிலி அரத்தை சுண்டு பறங்கி, மரமஞ்சள், சடாமாஞ்சி, சன்ன லவங்கப் பட்டை பஞ்ச லவணம் வகைக்குப் பலம்.௰, ஆயில் பட்டைபலம்.௨, பாப்பார முள்ளி வேர் பலம்.௨, சதகுப்பை பலம்.௫ இதெல்லாங் கூட்டி எரிச்சு வடித்து மிளகு உடைச்சு எண்ணை விட்டு வைத்துக் கொண்டு முழுகவும். சிரோபாரந் தலை நோவு, கழுத்துப் பிடரி நோவு பித்தம், வாய்வு பீனிச இது முதலானதும் குணமாம்.

கோரோசனை மாத்திரை :-

கோரோசனம் எலுமிச்சம் பழச் சாறு விட்டு நன்று அரைத்துக் குப்பைக் கீரை அரைச்சு குகை பிடிச்சு அதில் வைத்து ஏழு சீலை மண் செய்து ஏழு முட்டையில் புடம் வைத்து எடுத்து இங்குப் பற்பமும், ஏலம், லவங்கம், அதிமதுரம், கருஞ்சீரகம், சுக்குத் திப்பிலி மிளகு, கடுகுரோகணி, வெற்றிலைக் காம்பு இது வகைக்குப் பலம்.௰ இதெல்லாங் கூட்டிச் சீரகக் கஷாயத்திலே ஒரு சாமமரைத்துக் குன்றி மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி சீரகக் கஷாயத்திலே அநுபானமாய்க் கொடுக்கவும். அஷ்டாக் காச்சல் தோஷம், பித்த சுரம், தாகம் தீரும். செருப்படையிலை, கரிசலாங் கண்ணியிலை சாட்டறணையிலை இவை மூன்றும் பச்சையாய்த் தின்று வந்தால் தீரும் வியாதி சீதள காசம், தழுதணைச் சொறி தேமல் சொறி, தீரும். கை கண்டது.

மந்த காசத்துக்கு :-

பொன்னரிதாரம், நெய்ச் சட்டிச் சாறு விட்டரைத்து சீலையிலொட்டிச் சுருட்டி உலத்திப் புகைப் பிடிக்கவும்.

க்ஷயத்துக்கு :-

தேத்தாங் கொட்டை பலம்.௪, சுத்திராப் பழம் பலம்.௧, இவை இரண்டும்

பத்பம் பண்ணி பசுவின் நெய்யில் கொள்ளவும். பத்தியம் பசுவின் நெய் பசுவின் பால், பசுவின் மோர் பசுவின் தயிர் கூட்டவும். சுரம், இருமல் வெட்டை தீரும்.

வெட்டையின் பேரில் இருமலுக்கு சுரத்து இருமலுக்கு:- 6.8.63.

தேத்தாங் கொட்டை ஆழாக்கு கொட்டையை எடுத்து சிறுச் சிறுக நறுக்கி புதுச் சட்டி அடுப்பிலே காய வைத்து அந்தக் கொட்டையைப் பொன்னிறமாக வறுத்து அதை அம்மியிலே வைத்துப் பொடி பண்ணி அதிலே பசுவின் நெய் விட்டு இளகாமல் உருண்டையாகப் பண்ணி அந்த உருண்டையைச் சாப்பிடச்சே ஒரு கரண்டி பசுவின் நெய் வாயிலே வார்த்துக் கொண்டு முழுங்கிய பிறகு அந்த உருண்டையை ஒவ்வொரு உருண்டையாக அடக்கித் தொண்டையாகப் போட்டுக் கொள்ளவும் முழுங்கிப் போடவும். பிறகும் பிறகும் ஒரு கரண்டி நெய் சாப்பிட்டு இந்தப் படி தினமும் பண்ணி ஐந்து நாள் சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் குளிர்ந்த தண்ணீர் தொடப் போகாது. வெந்நீர் நடமாட வேணும். பசுவின் நெய் வார்த்துக் கொண்டு சோறு சாப்பிடவும். பின்னை ஒன்றுமாகாது. பாக்குப் புகையாகாது இந்தப் படி அவிழ்தம்.ரு நாள் மறு பத்தியம் மறுநாள் இந்தப் படி செய்து சாப்பிட்டால் சுயரோக மேக வெட்டை இருமல் வெட்டை இது முதலானது குணமாம். சோதிக்கை கை கண்டது.

மார் வலிக்கு:-

பெருஞ்சீரகம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.உ, கருஞ்சீரகம் விராகனிடை.உ இந்துப்பு விராகனிடை.க இந்த நாலு வகையும் வறுத்துக் கொண்டு கற்பூர வெற்றிலைச் சாத்திலே மத்திச்சு ஐந்து பொழுது சாப்பிட மார்வலி தீரும்.

மேகக் கட்டி வீக்கத்துக்கு:-

அமுக்கிராக் கிழங்கு, கொடிவேலி வேர்ப் பட்டை இது இரண்டும் பச்சைப் பட்டையாய் நறுக்கிக் கொண்டு மஞ்சளுங் கூட நறுக்கிப் பொட்டணங் கட்டிக் கொண்டு நல்லெண்ணை காய்ச்சிப் பொட்டணத்தைத் தோய்க்கப் பொறுக்கப் பொறுக்க ஐந்தாறு போது ஒத்திட வீக்கம் வாங்கும்.

தேளுக்கு:-

அவரி வேர்ப் பட்டை பெருங் கிழங்கு, புகையிலை, விரை மிளகு காய் சமனாய் வைத்து எருக்கம் பால் விட்டு அரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு எருக்கம் பாலிலாவது வெற்றிலைச் சாற்றிலாவது முலைப் பாலிலாவது உரைத்துக் கொட்டு வாயிலே பூச தீரும்.

கடிக்கு மருந்து:-

வசம்பு பலம்.ச, கருவேலையாக நறுக்கி இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கண்ட சாறுக்குச் சரியாய் கருப்பு மணக்கத்தை நெல்லு அரிசி மாவு பண்ணிக் கலந்து புதுக் கலசத்திலே வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது காலமே சாயங்காலமுஞ் சாப்பிடவும். இந்தப் படிக்கு ஏழு நாள் சாப்பிட ஏழு நாள் மறு பத்திய இந்தப் படி பதினைந்து நாள் புதுச் சட்டி புதுப் பானையிலே சமைத்துச் சாப்பிடவும். உப்பு, புளி, புகை ஒன்றுமாகாது. பத்தியப் பிழையானால் சரீரம் வீங்கி வெடிக்கும். பத்தியந் திட்டமாயிருக்க வேண்டும். வசம்பு இடித்த கப்பியும், பொடுதலைச் சாறும் அரைச்சு சரீர மெல்லாந் தடவியிட்டுக் கொண்டு பதினைந்து நாளுஞ் சாயங்காலம் வெந்நீர் வைத்து இலுப்பைக் கட்டி தேய்த்துக் குளிக்கப் போடவும். தீரும் வியாதி வண்டு கடி, கருங்குட்டம், சகல கடிக்குமா இது. கை கண்டது.

கை கால் வெள்ளைக் கருங் குட்டத்துக்கு:-

சுரைக்காய்க், கெந்தகம் ஒரு சேர் கொண்டு வந்து கஞ்சியிலே சுத்தி பண்ணி எடுத்துக் கொண்டு குமரி மோரிலே அரைச்சுக் கருப்பிக் காச்ச மோர் வடிஞ்சு அடியிலே வண்டலாயிருக்கும். அதை எடுத்து நன்று அரைத்துக் குமரி பாலிலே காச்சிப் புரை

சுத்தச்செ கெந்தக மலக்கத்தோடு மறு நாள் கடைஞ்சு வெண்ணெ எடுத்துக் கொண்டு சட்டியிலே உருக்க உருகிச் சட்டியிலே பாசி நியமாய்ப் பணியாரம் போலே கிளம்பும். எடுத்து வைத்துக் கொண்டு ஒரு பணவிடை அரைப்பணவிடை சர்க்கரையிலே கொடுக்க அது பொறுக்காவிட்டால் தேங்காயுடனே சாப்பிடவும். பத்தியம் உப்பு புளி ஆகும். பருப்புக் கீரை ஆகும். பின்னை யொன்று மாகாது. பால் நெய் ஆகும்.

<u>பெரும் பாட்டுக்கு</u>:-

கருக்காய்ப் பொடியில் கொடுக்கப் பொறுத்தாலாச் சுக மில்லாவிட்டால் தாளிக் காயிலேக் கொடுக்கவும். உப்பு மாத்திரமாம்.

கர்ப்பூர சிலாசித்து நெருப்பிலே ஒரு விராகனிடை சுட்டு வெள்ளைக்கு அரை விராகனிடை சீரகமும் அருகம் வேரும் அரைச்சு மோரிலே குழப்பிக் கொடுக்கவும். வெள்ளை காணுகிறது நிற்கும்.

<u>தாளக பற்பம்</u>:-

தாளகமும், படிக்காரமும், சாட்டறணைச் சாறும் கொஞ்சம் விட்டு அகலில் வைத்து சீலை மண் செய்து காட்டெரு முட்டையில் புடம் போடவும் பற்பமாம்.

<u>சங்கத் திராவகம்</u>:-

ஆலம் விழுது எள்ளுத் தட்டுக் கொள்ளுச் செத்தை கம்பந் தட்டு நாயுருவி எருக்கம் விறகு வாழைச் சருகு தாளம் விழுது சோளத் தட்டு சங்கம் விறகு கொளளுக் காவாளை நீர் முள்ளி, கள்ளிச் சருகு வகைக்கொரு னக்கு யேகமாய்க் கலந்து சுட்டுச் சாம் பலாக்கிச் சாம்பலைத் தண்ணீரிலே கரைச்சு இறுத்துக் கொண்டு தண்ணீரைச் சுண்டக் காச்சிறுவி காச்சின பானையிலே கறண்டியிலே சுரண்டி எடுத்துக் கொண்டு இந்துப்பு பலம்.க, படிக்காரம் பலம்.க, பெட்டியுப்பு பலம்.க, வெங்காரம் பலம்.க, நவச்சாரம் பலம்.க, எவட்சாரம் பலம்.க, சீனக்காரம் பலம்.க, கல்லுப்பு பலம்.க இம் மட்டுந் தூள் பண்ணி மொந்தையிலே போட்டு சங்கத் திராவகப் பொடி மூடிச்சுக்கிச் சீலை மண் செய்து அடுப்பிலே வைத்துச் சாம மெரிய விட்டு சங்கத் திராவகம் இறங்கும். நானாவித ரோகத்துக்கும் ஆகும். ஓமந் திராவகத் இப்படிச் செய்யச் சூலிகா வாய்வுக்கும் ஆகும்.

<u>காந்த செந்தூரம்</u>:-

ஊசிக் காந்தத்தைச் சதுரக் கள்ளிப் பாலில் மூன்று நாளூற வைத்து பசுவின் கோ மியத்திலே கழுவிப் போட்டு இடிச்சுத் தூள் பண்ணி அகலிலிட்டு மூடிப் புடம் போட்டு எடுத் துக் கொண்டு நாகப்பட்டைச் சாறு வார்த்து அரைத்து ஒரு நாள் நிழலிலுலர்த்தி மறுநாள் எ லுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து மூன்று சாம மரைத்து அகலிலிட்டு மூடிச் சீலை மண் செய்து புடம் போடச் செந்தூரமாம்.

<u>கெந்தக ரசாயனம்</u>:-

கெந்தகம் ஒரு சேர் பாலிலே சுத்தி பண்ணி எடுத்துக் கொண்டு அரைச்சுக் குமரி பசுவின் பால் காய்ச்சிப் புரை குத்தி கெந்தகம் அரைச்சதைப் பாலிலே குழப்பி வைத்தால் தோய்ந்து போகும். அதைக் கடைந்து வெண்ணெ எடுத்துச் சட்டியிலே போட்டு உருக்க உருகி நெய்யாம். அந்தச் சட்டியிலே பணியாரம் போலே கிளம்பும். அதை எடுத்து வைத்துக் கொண்டு எள்ளுப் பிரமாணம் கடலையிலே சாப்பிடவும் சகல ரோகமுந் தீரும். பால் நெய்யாகும். உப்பு, புளி ஆகும். பருப்பு ஆகும். பின்னை ஒன்றும் ஆகாது, சித்தி.

<u>கிரந்தி வெட்டிக்கு</u>:-

என்னை குருந்து மூத்து வமத்தா ந்தின விளக்கெண்ணெ படி.உ, வெள்ளைப் பூண்டு பலம்.ச, மிளகு பலம்.க, கடுகுரோகணி பலம்.க, ஓமம் பலம்.ச, சிலந்தி நாயகம் இலை பலம்.க, சாரணைக்கனைச் சாரணத்தி சமூலமும் பலம்.ச, சட்டித் தகரை சமூலமும்

பலம்.க, தவசி முருங்கை பலம்.க, பிரமியப் பூண்டு சாறு படி.ரு பழம் பாசி கரு நொச்சில் கொழுந்து ஒரு பிடி, மூசுமுசுக்கை வேர்ப் பட்டை இலை நெய்ச் சட்டிவேர் பலம்.க, சங்கு வேர், கசித் தகரை வேர் பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, ஆடக் கொத்தான் இலை ஒரு பிடி, நிலாவாரை சமூலமும் பலம்.ச, செஞ்சத்தாளிப்பட்டை பலம்.க, சிலந்தி நாயகம் பலம்.ச, மிட்டன் கொழுந்து பலம்.க, வெள்ளறுகு பலம்.க, கொடிவேலி வேர் பட்டை பலம்.க, பற்படாகம் பலம்.ஈ, கடுக்காய்.ய, இவை மட்டுங் கட்டி எண்ணெ எரிச்சு வைத்துக் கொண்டு தினம் ஒரு கரண்டி கொள்ளவும். இப்படி மூன்று நாள் மூனாக்குச் சாப்பிட்டால் பேதியாம். பேதியான பிறகு உடம்புக்கு வெந்நீர் வார்த்துக் குளிச்சுப் போட்டு வெந்நீருஞ் சோறும் உப்பில்லாமல் சாப்பிடுகிறது. மறு பத்தியம் மூன்று நாள் ஆக மூனு நாள் போன பிறகு இச்சா பத்தியமாயிருந்து பிறகு மூன்று நாள் அந்தப் படி எண்ணெ சாப்பிட்டு மறு பத்தியமும் பிடிச்சு பிறகு மூனு நாள் விட்டு ஒரு முறை சாப்பிட்டு மறுபத்தியமும் பிடிச்சு விடவும். பத்தியம் கடும் பத்தியம். சீக்கிரத்துக்குக் குணமாக வேண்டுமென்றால் ஏழு நாளைக்குத் தினம் மூனாக்கு எண்ணெயிருக்காது சாப்பிட்டு மறு பத்தியம் பிடிச்சு விடவும். இதுக்குத் தீரும் வியாதி கிரந்தி பதினெட்டும், மேக இருபத்தொன்றும் மேகக் கட்டு இதுவெல்லாம் தீரும். சித்தி.

பெண்டுகளுக்கு, கெற்பிணிகளுக்கு மாத மாதம் மூன்று நாள் சாப்பிடவும். பிள்ளை நல்ல பிள்ளைகள் பிறக்கும். இந்தப் படி கொடுக்கவும். விழுதுக தெளிஞ்சுடனே புக வைத்து எண்ணெ பண்ணிச் சாப்பிடவும்.

குன்மத்துக்கு எண்ணெ:-

வசுக்கா தீர்க்க விளக்கெண்ணெ படி, அதிமதுரம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, கடுகுரோகணி பலம்.ச, வெங்காயந் தாக்கொள்ள மிளகு பலம்.உ, வெங்காரம் பலம்.ரு வால் மிளகு பலம்.ல, சிறுநாகப்பூ பலம்.ல, சாதிக்காய் பலம்.க, சாதிப்பத்திரி பல விராகனிடை.உ, லவங்கம் விராகனிடை.உ, கஸ்தூரி மஞ்சள் பலம்.உ, அரத்தை பலம் பலசுப் பட்டை பலம்.உ, வெள்ளி மெருகுங் கிழங்கு பிரமிப் பூண்டு, ஆடக் கொத்தான் நெருஞ்சி வேர், கற்றாழை நாரிஞ்சி இந்த ஐந்தெண்ணெக்கும் குறிக்கிற வயணம்.

நல்லெண்ணெக்கு ஆத்தி கள்ளி இலை போட்டுக் காச்சச் சுத்தியாம். இலுப் பெண்ணெக்குப்பை மேனி இலை புங்கெண்ணெக்குப் பாகலிலை, விளக்கெண்ணெக்கு பச்சை வெற்றிலை வேப்பெண்ணெக்கு வேலிஇலை இந்த இலைகள் போட்டுக்காச்சு எண்ணெ குறியும் ஐந்தெண்ணெயும் ஒரு சட்டியில் வார்த்து பெருங்காயம் விராகனிடை.ச, சீரகம் சேர்.க, சீரகத்தை நல்லாய் அரைத்து அடை அடையாய்த் தட்டி எண்ணெயில் விட்டு பெருங்காயம் வெறுப்பி எண்ணெயிலே போட்டு வெள்ளைப் பூண்டு சேர் உரிச்சு நசுக்கி எண்ணெயிலே போட்டு மூன் சொன்னதில் போட்டு எரிக்க அந்த பக்குவத்தில் பலாப் பழ வாசனையாய் வரும். பூண்டு சிவக்கும். சீரகம் அடை சிவந்த காணும். அந்தப் பக்குவத்திலே இறக்கி வைத்துக் கொண்டு இந்தப் பல்லாங்கையிலே பத்திரம் பண்ணி வைத்துக் கொண்டு காலமே ஒரு கரண்டி சின்னக் கரண்டியிலே சாப்பிடவும். நாலு தரம் பேதியாம். சுத்தியாம். தீரும் வியாதி பித்தக் குன்மம், வாத குன்மம், மேக குன்மம், வாய்வு எரி குன்மம், சத்தி குன்மம், தீரும். பத்தியம் புளிப்பு, புகை நாக்குத் தவிர்க்கவும். உப்பு, பால், நெய், துவரம் பருப்பு, முருங்கையிலை யாவும், பாகற்காய், பூசணிக்காய் பெரும் பயத்தம் பருப்பு ஆகாது.

(மேல்.கூ-ஏடுகள் வரைக்கும் நீரழிவுக்கு விபரம் ஜூம் கருப்புகிறது விடப்பட்டது)

இந்திரியம் நீ போல லிங்கத்தின் மூக்குப் போல
நந்தலே நூலை போல நலியாமல் புறப்பட்டோடும்
அந்த வாதத்தினாலதை நீக்கப் பித்த மாறும்
முந்திய சிலேத்துமம் பத்த பிற தீர மருந்து சொல்வேன்.

நீரழிவு மருந்து விதம்:-

நீரழிவு மருந்து விதம்:-

51. தூரே தூரே வருகின்றீர் யுறையும் பித்த மகத்தடக்கி
நீரே நீரே மாகிலுங் கேள் நெய்யரிந மோரே மிகப் பருகி
பாரே பாரீர் முசுட்டை இலை மரிந்த பரிந்த ஆவாரையின்
ஆரே மாரே கொள்கின்மல் தோந்நீர் நீரே தொரீரே.

52. பூவரந் தளிர் மரங் கொன்றை வேர் நீ.விரைந்த குடி புளி மோருடன்
வாவிரைந்த வரும் புனநீ காவேரி தாவிரைந்த வரிந் தருக்குமே.

53. ஆவரை கொன்றை நாவல் அருகு. பூவரசு அத்தி
மேவிய மருந்தெதாரும் விரைந்தட ஜெக்கக் கட்டி
பூவினிற் றரிந்த மாதே புதிய தோர் தெளிவுள்ள
காவேரி நீரும் வற்றிக் கடலேறுஞ் சுவறுமென்றே.

54. காந்தமொரு திரிபலைத்தன்னிருக்கும் வீசுங் கருநரிய முத்த மஞ்சட்டி கிட்ட
மாம் தாபக் கரும் நிமிலை சக்கு மரிசனங் சொல்கேழி பலேயுமகிப் பாய்க் கட்டி
யெந்த மூலையாய் கைய்யாந்தகரைச் சாத்திரி விசப் பவரமரத் தெடுந்த வுண்டை
யொன் யந்த ஆய்ந்த பசுந் தேனுடனே மருந்திக் கொண்டால் அரமூலை நீரழிவு
அமந்து போமே.

55. நாகள் கோட்டஞ் சிரதேக்கு சாதிக்காய் பொக்குவாரை வேர்
நிகர் கொண்டதலைப் பொடி செய்து நிகதி யொரு மண்டலங் கொள்ளில்
மகரச் செறியுங் கடல்து போல் வரு நீரெல்லாம் பருகு மென்ன
நகரந் தோர்வும் பறையறை மின்னின்ரிழிமால் நவீரே.

56. ஒரரைக்கால் அரு விந்தம் இருகரைக் காய் கருவேப்பரிசி
நீரரைக்கால் மர மஞ்சளிபதரைக் காலாவாரை விரைக்
தேறரைக்கால் கருகரைக்காக் நிகழரைக்கால் திப்பிரால்
நீரரைக்கால் திப்பிராய் நீரரைக்கால் போகாது நெடு யாலாலை நிச்சயமே.

57. பின்னைக்குப் பொடி செய்திட்டா வரையின் கொழுந்துடனே நெருஞ்சி வேரும்
மின்னெக்கும் வெயில் தனிலே விரித்துலர்த்தி வெகு வைத்த மிகவும் நன்றாய்
பன்னிக்கு நெய் மொழியாய் பாடலொத்த தேன் கலந்து பரிந்த கையமா
வன்னைச்சிவன்னக்கிலிரு வீரால் நீராழுக்குப் போகாதென்றறிவித்தோமே.

ஊரண ரசம்:-

திரிகடுகு திரிபாலை, ஏந்தக்காசு, வாய்விளங்கம், எவட்சாரம், கொத்தமல்லி
சித்திர மூலம், தேவதாரம், வட்டத் திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், அதிவிடயம்,
பேய்ச்சுரை வேர், பிரங்காமூலம், கய்ச்செ எரம் சவுர்லவணம், ஆனைத் திப்பிலி
வகைக்கு பலம்.க, இவ வெல்லாம் பொடி பண்ணி இதக்குச் சரியாய் கருங்குன்றியம்
கட்டிப் பொடி பண்ணி வெந்நீர் விட்டுப் பிசைந்து கழற் பிரமாணம் உருண்டை
பண்ணி இரண்டு நேரமுந் தேனில் கொள்ளவும். இதக்கு ரத்த வாதம், பாரிச வாய்வு, காச
காசு சுவாசம், அசீரண வாய்வு. சூலரோகம், கிரிப் பாம்பு, குட்ட ரோகம்,
சுரம்.அ வகை சேடியம், கந்தம் எலும்புருக்கி உதிர சூலை பாரிச சூலை வாத
சூலை உதர ரோகம் குன்ம சூலை, பெருவயறு கவுசை வீக்கம் மூலம்.அ, வகை துட்ட
மான விரணம். மேகம்.உய, தூவிபு.அய, சேற் மம்.சய, அதிசாரம் அரோசிகம்
இவைகள் தீரும். பத்தியம் காடை, நெய் பால், அவரை, இளக் கீரை, மிளகு, நீர்
வாய்வு, எல்லாக் கறி கூட்டவும். கை கண்டது.

ஊது காமாலை, கம்பம் மாப் படி.உ, செங்கத்தாரிப் பட்டை, அரைத்த
அடை விழுது திப்பலை கூட்டிப் சிறந்த அ ட சட்டுத் தின்னவும். அந்தி சந்தி மூன்று
நாள் தீரும் வியாதி ஊது காமாலை, விடபாகம், வீக்கம். கை கண்டது, தீபனமுண்
டாம், நீர் வற்றிப் பலமுண்டாம், பத்தியம் பருப்பு மிளகு, வெள்ளுள்ளி, மற்றது
ஆகாது, நெய்யில் அடை தோய்த்துத் தின்னவும்.

அசுவ கெந்தாதி சூரணம்:-

கிரும்பு பலம்.க, நாகப்பூ பலம்.க, ஏலம் பலம்.ங, லவங்கம் பலம்.ச, லவங்கப் பத்திரி பலம்.ரு, சீரகம் பலம், கொத்தமல்லி பலம்.எ, மிளகு பலம்.அ, திப்பிலி பலம் ய, சுக்கு பலம்.யஉ, அமுக்கிரா. , சர்க்கரை.எ அ ஆக இப்படியாகச் சூரணம் பண்ணி வெருகடி கொள்ளவும். தீரும் வியாதி காச சுவாசம், சேற்மம், காசி ரோகம், சுரம், வீக்கம், மந்தாக்கினி, குத்திர வாய்வு, வாந்தி, உஷ்ணம், பிரமியம், வாந்தி பைத்தியம், சூசிக வாய்வு இவை எல்லாந் தீரும்.

அசுவ கெந்தாதி சூரணம்:-

அமுக்கிரா வேர் பலம்.அ, சுக்கு பலம்.ச, திப்பிலி பலம்.உ, ஏலம் பலம்.க, சிறுநாகப்பூ பலம்.ரு, கிரும்பு பலம்.ரு எல்லாம் சூரணம் பண்ணி சரி சர்க்கரை கலந்து தேனில், நெய்யில் கொள்ளச் சகல வாய்வு, சகல மேகம், சூலை வாதம், பைத்தியம், அஸ்தி சுரம், புஷ்டியுண்டாம். கை கண்டது.

அமுக்கிரா வெட்டி வந்து நிழலிலுலர்த்திச் சூரணம் பண்ணிச் சீரகம் படி பொன்னிறமாய் வறுத்துப் பொடி பண்ணி அமுக்கிராச் சூரணத்தையும் நிறுத்துக் கொண்டு ஒன்றாய்க் கலந்து கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ளச் சரீரம் வாங்கி இளமையுண்டாம். நெய்யில் கொள்ளச் சரீரம் பருக்கும். கை கண்டது.

கண்ட திராவகம்:-

சுக்கு பலம்.க, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், ஓமம், சீரகம், வெள்ளுள்ளி, சித்திர மூலம், வாய்விளங்கம் வகை பொன்சுக்கு பலம்.க, காயம் பலங் கால் எல்லாம் பசுவின் நெய்யில் சர்க்கரை பலம்.ச, போட்டு உருகின உடனே சூரணம் போட்டுக் கிண்டிப் பிறகு தேன் விட்டுக் கிளறி எடுத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் தின்னவும். உஷ்ண வாய்வு, அக்கினி மந்தம், வயறு பொருமல் கழிச்சல், கால் கை அசந்து போறது சகல ரோகமுந் தீரும். கை கண்டது.

அசுவ கெந்தாதிச் சூரணம்:-

அமுக்கிரா வேர் பலம்.அ, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஓமம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, லவங்கம், அரத்தை, கோஷ்டம், விளங்கன் கோரைக் கிழங்கு, நன்னாரி வேர், முக்காவளை, சித்திர மூலம், சத்திச் சாரம், எவச்சாரம், கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, கைச்சாரம், தாளிசை பத்திரி, சிறுதேக்கு கற்கடக சிங்கி இவை யெல்லாம் வகைக்கு பலங்.வ இடிச்சு சூரணம் பண்ணி செவியுஞ் சிற மூலம் வெட்டி வேர் இவை வகைக்கு பலம்.க, கூட்டிச் சூரணம் பண்ணி இதில் சர்க்கரை பலம் யச, கலந்து தின்ன உப்புசம், திரிகா சுரம், வயறு, உப்புசம், வாந்தி வயறு நோவு, அந்திச் சுரம், மாங்கிஷத்தைப் பற்றின சுரம், திரிவிஷ சுரம், திரிவிஷாதிச் சுரம், இது முதலான சகல சுரமுந் தீரும்.

கஷாயம்:- அரக்கு, நெல்லி முள்ளி, லவங்கப் பட்டை, தன்னி விட்டான், தேங்காய்ப் பூச் சரி கூட்டிக் கஷாயமிட்டுச் சர்க்கரை கூட்டிக் கொடுக்க எரம்பருக்கி அந்திச் சுரம் தீரும்.

மூலத்துக்கு:-

கொட்டைப் பாசி யிலையும், குப்பை மேனியிலையும், முருங்கையிலையும், கருவேப்பிலையும் சமன் கூட்டிப் பொடி பண்ணித் தேனில் கொள்ள மூலம் ரெத்தமாய்க் கரைந்து விழுந்து போம்.

இருமலுக்கு:-

நிம்புலுக்கு அரிந்து இரண்டு படி உப்பு போட்டு குடுவையில் வைத்து அதை மறையப் பிரண்டைச் சாறு விட்டு வாய் கிண்ணு மூடிச் சீலை மண் செய்து கீழே புதைத்து.யஉ, நாள் கழித்த பிறகு எடுத்து இதில் மஞ்சள், அரத்தை, சிறுதேக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், லவங்கன் கூட்டிச் சூரணம் பண்ணி எலுமிச்சம் பழத்தில் போட்டுக் கலந்து வைத்துக் கொண்டு

இருமல், உப்பிசம், இரைப்பு, பயித்திய குன்ம வாய்வு இவை தீரும்.

ஏலாதி சூரணம்:- 8.8:63.

ஏலம், சடாமஞ்சி, லவங்கம், சுக்கு, திப்பிலி, முத்தக்காசு, கற்பூரம், கொத்தமல்லி, பேரீச்சம் பழம், சாபத்திரி, இலுப்பைப் பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், முந்திரிகைப் பழம், தாமரை வளையம், சந்தனம், கோஷ்டம் குங்கமப் பட்டை, காட்டெருமைப் பால், சாதிக்காய், சிகப்பு நெருஞ்சி வேர், சாரணை வேர், நிலப் பனை, நிலவேம்பு, அமுக்கிரா, சீந்தில் தண்டு இவை சரி கூட்டிப் பொடி பண்ணிச் சர்க்கரை கூட்டிப் பசுவின் பாலில் குழப்பிக் கொட்டைப் பாக்களவு கொள்ள பாண்டுவச் செயம், ஈளை இருமல், சித்திரைப்பு, பயித்தியம், பித்தம், வாயாலெடுக்கிறது, சேற்பம், வாய்வு, பிள்ளைப்பு மனேக உடன் சகுதிகளெல்லாம் குணமாம்.

ஏலாதி சூரணம்:- கோரோசினை மாத்திரை:-

சுக்கு மேல் பிறளி சீவிப் போட்டு நிம்பச் சாற்றில் முப்பது நாழிகை ஊறப் போட்டு எடுத்துக் கோரோசனை கூட்டி நிம்புச் சாற்றிலரைத்து உருண்டை பண்ணி உருந்து பிரமாணம் சர்க்கரையில் ஒரு உருண்டை இடவும். குழந்தைகளுக்கு முலைப் பாலிலிடவும். சகல சுரமுந் தீரும். கை கண்டது.

க்ஷயத்துக்கு:-

சூரிய பலம், ரூ, குப்பை மேனிச் சாறு விட்டரைத்துக் கொடுக்க வாந்தி யாம், பிறகு பச்சரிசியும், பாசிப் பயறும் காய்ச்சிக் கொடுக்கவும், மறுநாள் கோழி முட்டை, வெள்ளைக் கரு, முசுறு முட்டையுந் தவைச்சு சரி கலந்து சரீர பலம் அறிந்து ஒன்றை விட்டொரு நாள் எட்டு நாளைக்கு கொடுக்கவும். பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும். பசுவின் நெய், பால் கூட்டவும். க்ஷயரோகந் தீரும்.

வாத சுரத்துக்கு குளிகை:-

கற்பூரம் விராகனிடை.க, திப்பிலி திபலம்.க, கூட்டி அரைத்துக் குன்றி அளவு உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும். அநுபானத்திலிட க்ஷயம், சுவாசம், இருமல், மூக்கு நீர்ப் பாச்சல், சத்தி இவை தீரும்,

வாத சுரத்துக்கு:-

பூவந்திப் பழம்.உவ, விரை தள்ளி அம்மியில் வைத்தரைத்து மெழுகு பதமான பிறகு கோரோசினை விராகனிடை,ரு கூட்டி நசுக்கவும், மெழுகு பதமான பிறகு.ய உருண்டை பண்ணி உலர்த்தி வைத்து எந்தச் சுரத்துக்கும் கல்லிலுரைத்து சந்தனக் குழம்பு போலே இதை உரைத்துத் துட்டளவு நாக்கிலே தேய்க்கவும். சிறு பிள்ளைகளுக்கு அதில் பாதி கொடுக்கவும், ஜன்னியச் சுரம் சேற்பம சுரம் தொண்டைக் கட்டுப் பயித்திய இதுக்கு சிறங்கை வெந்நீரில் குழப்பிக் கொடுக்கவும், கோழையாக எடுத்துப் போட்டு மயக்கம் அதிகமாய்ச் சுரந் தலைப் பாரமாயிருக்கு இவை யெல்லாந் தீரும். சுவாசம் உப்புசம் இரைப்பு இதுகளுக்கு இப்படிக் கொடுக்க எழு ஞாயிறு பொரிச்ச ஆனைத் திப்பிலி விராகனிடை,க கூட்டிக் கொடுக்க உடனே தீரும். பத்தியம் தூதுவளை, இஞ்சி, நாறத்தை கூட்டவும்.

க்ஷயத்துக்கு கற்பூராதிச் சூரணம்:-

ஆலாத்திக் கற்பூரம், உப்புச் சத்து வெள்ளி, வெள்ளி) லோத்திரம், சாதிக்காய், கிராம்பு, பச்சிலை, சிறுநாகப்பூ, லவங்கம், திரிகடுகு, இவை சமன் கூட்டிச் சூரணம் தேனில் கொள்ளக் க்ஷயம், காய சுவாசம், இருமல், மூக்கு நீர்ப் பாச்சல் சத்தி இவை தீரும்.

பூவந்திக் குளிகை:-

பூவந்திக் குளிகை:-

பூவந்திப் பழங் காடியிலரைத்த கழச்சிப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி வைத்து அசீரணத்துக்கு கலக்கமிடவும். விடாந் தீண்டிக் கோழை கட்டி வாந்திக்கு இள வெந்நீரிலிடவும். மாந்தம் பேராமாந்தம், அவரை அளவு இடவும், மூலைப் பாலிலிடவும். தீரும். கை கண்டது.

கோரோசனைக் குளிகை தந்த வாய்வுக்கு:-

கோரோசனை விராகனிடை.க, திப்பிலி பலம்.க, கட்டி அரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி உலர்த்திக் கொள்ளவும். பச்சை பச்சைக் கற்பூரம், ஏலம், லவங்கம், காசுக் கட்டி, திருமணி, சுக்கு, மிளகு, சாதிக்காய் இவை சமன் இளநீரிலரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி ஒரு உருண்டை பாக்கில் போடவும்! தந்த வாய்வு தந்த மூலை
தீரும்.

சுத்தக்குளிகை:-

சுத்தம் பலம்.க, எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு நாளூற விட்டு (எரித்துச்) சரி வெண்ணை பலம்.க, கட்டி அரைத்துக் குன்றி அளவு உருண்டை பண்ணி சர்க்கரை பலம்.ச, கட்டி பாலிலாவது வெந்நீரிலாவது இட மாந்தம் சுரம் பேராமாந்தம் இவை தீரும்.

அருவாசக் கிருதம்:-

அருகம் வேர் சேர்.உழக்கு, சிறுக நாக்கிப் பச்சரிசிக் கழுநீர் நாழி மரக்கால் நாழு அந்த வேரைப் போட்டு ஒரு மரக்காலாகக் காய்ச்சிக் குழம்பாக்கி வடித்து அதில் வெள்ளாட்டுப் பால் படி.ச, கூட விட்டு இம் மூன்றும் ஒன்றாய்க் கலந்து இதில் செங் கழுநீர்க் கிழங்கு தாமரைக் கிழங்கு, கோஷ்டம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், சயிந்தலவணம், சந்தனப் பொடி முத்தக் காசு, சந்த சந்தனம், முந்திரிப் பழம், சிறு நாகப்பூ இவைகள் வகைக்கு விராகனிடை.சு இதுக்குச் சூரணம் பண்ணி நெய்யுடன் கலந்து எரிச்சு மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு நக்க ரெத்த பித்தம் இரத்த பயித்தியம் ரத்தப் பிரமியம் மூக்கிலும் ரெத்தம் விழுந்தாலும் நசியம் பண்ணினாலும் தீரும். காதில் கண்ணில், கழுத்தில் வடிகிற ரெத்தமானாலும் நாளது வரையிலே வந்த ரோகம் ரோகங்களிலே புறப்படுகிற ரோகங்கள் இவையெல்லாந் தீரும்.

மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு:- பழம் புளியும், நெல்லி முள்ளியும், காடியினால் அரைப் போட்டு அரைத்து தலையில் தப்ப நிற்கும்.

தாளிசை வடகம்:-

தாளிசம், சுக்கு மிளகு, திப்பிலி, செவியம், இது பலம்.உ, திப்பிலி மூலம், கடுக்காய், நெல்லி முள்ளி, தானிக்காய், சுக்கு, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, கைச் சோலம் நாகப்பூ இவை வகைக்கு பலம்.க, கட்டிப் பழ வெல்லம் பலம்.உ, கட்டி அதில் புளியம் புறனிச் சாம்பல் கரைத்துக் காய்ச்சி முந்தின மருந்து தூவி உருண்டை பண்ணி மேல் மூச்சு மருந்தீடு, பயித்தியம், மந்தாக்கினி மூலம் குன்மம் மேகம் தீரும்.

வில்வாதி லேகம்:-

சுக்கு பலம்.ச, மிளகு பலம்.ஈ, தாளிச பத்திரி பலம்.உ, சி நாகப்பூ பலம்.க, விளங்கம் பலம்.உ, லவங்கப் பட்டை பலம்.ரு, அஞ்சுகப் பத்திரி பலம்.ரு, ஏலம் பலம் ரு சீரகம் பலம்.ச, கொத்தமல்லி பலம்.உ, இவை யெல்லாம் நிறுத்தி இடித்து வடி கட்டி பிறகு வில்வ வேர் தோல் போக்கிச் சீவில் பலம்.ய, நரிப் பயறு கொடி பலம்.ய, விளாவிலை பலம்.ய, முசுமுசுக்கை பலம்.ய, இவை யெல்லாம் பாவையிலிட்டு முப்பது மரக்கால் தண்ணீர் விட்டு வளமிலி பலம்.ச, பாவையிலிட்டுக் காய்ச்சி நாழி வளத் தண் ணீராய்க் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். வடி கட்டி இதில் நல்வெண்ணை வெல்லம் பலம் ய போட்டுக் காச்சிப் பாகு பதத்தில் சூரணம் போட்டுக் கிளறிச் சத்தே வெந்தவுடனே இறகிலும் போலே இறக்கி வைத்துக் கொண்டு தேன் பலம்.ய, விட்டுக் கிளறி வைத்துக்

வைத்துக் கொள்ளவும். கசாய வசமாறுப் போலே இறக்கிக் கொள்ளவும். இதக்கு உட்காச்சல், மேக வெட்டை, போகும். தீபனமுண்டாம். வாதம் உச்சம் கொள்ளும் தின்னத் தத்திலப் போலே போறது வல சத்தியாம். உட்சுடு அதிகம். கண்ஜெரிச்சல் தீரும். அந்தி சந்தி தின்னவும்.

நீல கண்ட ரசாயனம்:-

திப்பிலி பலம்.தெ, பொடி பண்ணி சர்க்கரை பலம்.அ, நெய் படி.உரி தேன் படி.தெ, தண்ணிமுட்டான் கிழங்குச் சாறு.உ, பால் படி.ஈ இது வெல்லாங் கட்டிக் காய்ச்சி இதில் கர்சம் கொத்தமல்லி நெல்லி முள்ளி, சீரகஞ் கருங்காலிப் பட்டை, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, கடுக்காய், முத்தக் காசு, சடாமஞ்சி வகைக்குக் கழஞ்சு பொடி பண்ணித் தூவி லேகம் பண்ணிக் காலமே கழஞ்சு திரிபாலைப் பொடியில் சரி கூட்டித் தேனில் கொள்ள வாந்த மகோதசிகம், தலை நெஞ்சு இடிப்பு மூச்சையாமல் பித்தம் இவை தீரும். கை கண்டது.

குக்கில் சூரணம்:-

திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், விளங்கம், ஓமம், வட்டத் திருப்பி வேர், வசம்பு, காயங் கடுகு, சிறுதேக்குச் சீரகம் அதிவிடையம், ரோகிணி வகைக்கு பலம்.இரு கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு இவை வகைக்கு பலம்.க, கடுக்காயுங் குக்கிலும் வறுத்துக் கொண்டு எல்லாம் சூரணம் பண்ணி நெய் விட்டுப் பிசைந்து வைத்து புளியம் விரைப் பிரமாணம் தேனில் கொள்ளவும். இதுக்குச் சுரவாதங்க வாதம் குன்மம் மூலம், கிருமி வெண்குட்டம் சூலை, மகோதசிகம், மார் நோவு, அக்கினி மந்தம், அசதி, க்ஷயம், சுவாச காசம், அமர் வாதம், உடம்பு திமிர், நித்திரை வாதம் சுரோணித வாதம் இவை தீரும்.

குக்கில் ரசாயனம்:-

சுத்தியான குக்கில் பலம்.ஞ, வட்டத் திருப்பி விழாலரிசி, தேவதாரம், ஆனைத் திப்பிலி, சத்திச் சாரம், எவட்சாரம், சுக்கு, மிளகு, சதகுப்பை, செவியம், கோட்டம், வாலுழுவை, மஞ்சள், வெப்பாலை அரிசி, ஓமங் கொடிவேலி, ரோகிணி சிவதை, வசம்பு, சிறு மூலகம், அரத்தை, மன் திட்டி, அதிவிடையம், சித்த மல்லி வகைக்குக் கழஞ்சு எல்லாம் இடித்துக் கலந்து நல்லெண்ணெய் நெய் தேன் மூன்றும் படி.க, சட்டி காய வைத்து நெர், எண்ணெயை விட்டு மருந்து போட்டுக் கிளறிப் பிறகு தேன் விட்டுப் பிசைந்து வைத்து அ. நாள் தின்னவும். இதுக்கு குட்டம், பாண்டு தாமரை வாதம், சூலைமேகம், குத்திர வாய்வு, கிருமி இவை தீரும்:

குக்கில் ரசாயனம்:-

குக்கில் பலம்.க, வெங்காரம் பலம்.க, ஓமம் பலம்.க, வறுத்துப் பொடி பண்ணிக் கலந்து முருங்கைப் பட்டைச் சாற்றில் வெருகடி தின்னவும், இருபது நாள் நாப்பு வாதம், எரிவாதம், முடக்கு வாதம், கணுவாதம், முழங்கால் வாதம், பக்ச வாதம், சுருக்கு வாதம், கணைக்கால் வாதம் இவை தீரும். நீர்க் கட்டுக்கும் ஆகும்.

குக்கில் சூரணம்:-

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தாளிக்காய், நெல்லிமுள்ளி, விளங்கம் செவியம், கொடிவேலி, ஏலம், லவங்கப் பட்டை, விடங்கம், தேவதாரம், தம்பி வேர், கோஷ்டம், சிறுதும்மட்டி வேர் இவை சமன் மஞ்சள், மரமஞ்சள், ஐட்டுப்பு வாசிலை உப்பு, ஆனைத் திப்பிலி இவை சரி இதுக்குச் சரி குக்கில் சுத்தி பண்ணி எல்லாங் கட்டிச் சூரணம் பண்ணி தேனில் பிசைந்து அதிஞ்சி விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி நெய்யில் காலமே தின்னக் காசம், சுவாசம், க்ஷயம், இளைத்த சரீரம் மூலம், பவுத்திரம், குன்மம், வல்லையமுகம் மூடல் வாதம் அரோசிகம், திமிர் பம

வெதுப்பு, க்ஷயரோகம், இவை தீரும், பால், நெர், கஸ்து இறச்சி கஞ்சி, தேன் இவைகள் ஆகும். பதினெட்டு குட்டமும் அனேக நாளாகுத சிலந்திகளுந் தீரும்.

தாளிச வடகம்:-

தாளிச பத்திரி பலம்.க, மிளகு பலம்.க, செவியம் பலம்.க, திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.உ, சுக்கு பலம்.௩, ஏலங் கழஞ்ச.ரு, லவங்கப் பட்டை பலம்.உ, லவங்கப்பத்திரி பலம்.௩, கிராம்பு கழஞ்ச.ரு, விலாமிச்சம் வேர் கழஞ்ச.ரு,

இவ்வாம் இடித்து வடிகட்டி இதில் ரெட்டிப்பு பழ வெல்லங் கட்டிப் பிசைந்து கழச்சிப் பிரமாணம் உருண்டை பண்ணி எந்நேரமாகிலும் ஒரு உருண்டை கொடுக்க இருமல் சுவாச காசம், சுரம், வாந்தி, வல்லை மாறு, பக்க உளைப்பு, பாண்டு சுரா அதிசாரம், இவை தீரும். தாளிச வடகம் பத்தியம், புளி மாங்கி ஊடும் தவிர்க்கவும்.

நிலாவாரைச் சூரணம்:-

நிலாவாரை பலம்.அ, சுக்கு பலம்.ச, மிளகு பலம்.ச, இடித்து கலந்து வெருகடி அந்தி, சந்தி.யரு நாள் தின்ன உதிர வாய்வு, மூல வாய்வு, மூலம், மல பந்தம் இவை தீரும்.

நிலாவாரைச் சூரணம், அதிசாரக் கிருமிக்கு:-

பூங்கங் கொழுந்து, சரி வெல்லங் கட்டி அரைத்து உக்கிரர பண்ணி மூன்று நாள் நெய்யில் கொள்ள வயறு வலி, கழிச்சல், சூப்பு, சீதம், ரெத்தம், அதிசாரம், ஆம அதிசாரந் தீரும். மேகம்.உஷ்ணம் தீரும். இச்சா பத்தியம்.

தாளிச சூரணம்:-

தாளிச பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பலம்.க, லவங்கப் பட்டை லவங்கப் பத்திரி ஏலம் வகைக்கு பலம்.மு, ஓமம், திப்பிலி மூலம் ஒரு பலம். விழுக்காடு கூட்டி இதுக்குச் சரி சர்க்கரை கூட்டி வெருகடி தின்னக் காசம், சுவாசம் சுரம், வாந்தி, வல்லை, பக்க சூலை, பாண்டுவம், பாண்டுச் சுரம், அதிசாரம் இவை தீரும். பத்தியம் புளி மாங்கிஷம் தவிர்க்கவும்.

தாளிச சூரணம்:-

தாளிச பத்திரி, மிளகு, செவியம் வகைக்கு பலம்.க, திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம். பலம்.உ, சுக்கு பலம்.௩, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, கிராம்பு, விலாமிச்சம் வேர் வகைக்கு கழஞ்சு எல்லா இடித்து வடிகட்டி இதுக்கு இரட்டிப்பு பழவெல்லங் கட்டிப் பிசைந்து இலந்தைக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி தின்னவும். எந்நேரமாகிலும் ஒரு உருண்டை கொடுக்க இருமல், சுவாச காசம், சுரம், வாந்தி வல்லை மாறு உளைப்பு, பக்க உளைப்பு பாண்டு சுராதிசாரம் இவை தீரும்.

தாளிச வடகம்:-

நிலாவாரைச் சூரணம், வெள்ளறுகுச் சாறு, நெருஞ்சிக் காய்ச் சாறு, சர்க்கரை, நெய் ஐந்தும் சமஞ்சு கூட்டி ரசாயனம் பண்ணிச் கழஞ்சுப் பிரமாணம் தின் சகல வாய்வு, வாதம், சூலை இவை தீரும். சகல ரோகமுந் தீரும். கடுக்காய்.ரு வந்திகால வேர் பலம்.தெ, பசுவின் பால் படி.உ, நெய் படி.க, கூட்டி அரைத்துக் கொள்ள ரெத்த ரோகந் தீரும்.

நிலாவாரைச் சூரணம்:-

நிலாவாரைச் சாறு படி.உ, மஞ்ச வெண்ணம், சூரைத் திப்பிலி, வகைக்கு வாவரைச் சாறு படி.உ, இடித்துக் கலந்து வெருகடி ஏழு நாள் தின்ன, அ. நாள் தலை முழுகவும். தீரும் விசாதி தீரும் ஏழு நாள் தின்ன அ நாள் தலை முழுகவும். இருபது நாள் தின்னவும். இதுக்கு ஆமைக் கட்டி, ஆமைச் சூலை, வயத்துக் கட்டி இவை தீரும்.

<u>நிலாவாரைச் சூரணம்:-</u>

நிலாவாரைத் தூள் படி.ரு மஞ்ச லவணம், ஆனைத் திப்பிலி வகைக்கு பலம்.ரு இடித்துக் கலந்து வெருகடி ஏழு நாள் தின்

<u>நிலாவாரைச் சூரணம்:-</u>

நிலாவாரை சமூலம் பலம்.ச, சுக்குச் சீரகஞ் கடுக்காய், வில்வப் பழம் இவை வகைக்கு பலம்.வ, எல்லாஞ் சூரணம் பண்ணிக் கலந்து சர்க்கரை பலம்.உ, கலந்து காலமே.உ வெருகடிப் பிரமாணம் தின்னவும். இதற்கு சுரக் கட்டு, சீதக் கட்டு, அக்கினி மாந்தம், வயிற்றிற் சகல சூலையுந் தீரும். பத்தியம் புளி தவிர்க்கவும். மற்றது கூட்டவும்.

<u>நிலாவாரை ரசாயனம்:-</u>

நிலாவாரை சமூலம் இடித்த தூள் கடுக்காய்த் தூள் இது இரண்டுங் கூட்டித் தேனில் பசுவின் நெய்யும் விட்டுப் பிசைந்து வெருகடி அந்தி, சந்தி நாற்பது நாள் கொள்ள இதற்கு உஷ்ண வாய்வு, அக்கினி மாந்தம், மலபந்தம், பயித்திய வாய்வு, அந்தி வெட்டை, மூல வாய்வு, மூலக கிரணி, மூலம் இவை தீரும். சரீரம் புஷ்டியுண்டாம். சகல ரோகமுந் தீரும்.

<u>நிலாவாரை ரசாயனம்:-</u>

சுக்குடனிலாவாரைச் சூரணம் பண்ணித் தின்ன மிக்கதோர் சூலை குன்மம், மேகங் கண்ட வாய்வு, தக்க தோர் கபால சூலை, சயரோக முதலாய மிக்கவ தீரு மென்றே விளம்பினர் முனிவோர் தாமே.

நிலாவாரைப் பொடி பலம்.ச, திரிகடுகு ரோகணி வகைக்கு பலம்.க, நாலுஞ் சற்றே வறுத்து இடிச்சுக் கலந்து சர்க்கரையாவது பனை வெல்லமாவது அரை வாசி கூட்டி வெருகடி காலமே தின்ன மல சுத்தியாம். சகல வாய்வு அக்கினி மந்தம் தீபனமுண்டாம்.

<u>மூல வாய்வுக்கு:-</u>

நிலாவாரை பலம்.ஙு, கொன்றைக் கொழுந்து பலம்.க, கடுக்காய்.ஙய, விரை போக்கி இதற்குப் பாதி சீரகம், இதற்குப் பாதி சுக்கு இதற்குப் பாதி திப்பிலி. இதற்குப் பாதி மிளகு எல்லாங் கூட்டிச் சூரணம் பண்ணி வெருகடி தின்னவும். வெட்டைச் சரீரத்துக்கு சர்க்கரையிடவும். வாத சரீரத்துக்கு தேனிடவும். சேற்பன சரீரத்துக்கு மிளகு பொடியிடவும். சர்வ வாய்வுக்கு வென்னீரிடவும். இதற்கு மூல வாய்வு, அக்கினி மாந்தம். மலக்கட்டு, இரைச்சல், பொருமல் பசியத்தது இவை தீரும். கை கண்டது. இதற்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>சகல மேகத்துக்கும்:-</u>

விளக்கெண்ணெ படி.உரி, வாகைப் பட்டை, செவ்வகத்திப் பட்டை, நிலப் பனைக் கிழங்கு, வகைக்கு விராகனிடை.அ, புறணி நீக்கி நைய்ய நசுக்கிப் போட்டு சாதிக்காய்.உ, ஏலம் விராகனிடை.ச, கிராம்பு விராகனிடை.க, எண்ணெயில் போட்டு சாடித்துச் சூரிய படம் மூன நாள் வைக்கவும். பிறகு எண்ணெ வடித்துக் கொள்ளவும். காலமே கரண்டி ராத்திரி உண்டு படுக்கும் போது அரைக் கரண்டி குடித்துப் படுக்கவும். இதற்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு, உப்புத் தவிர்க்கவும். அ. நாள் குடித்த ஒன்பதா நாள் விளக்கெண்ணெயிட்டுத் தலை முழுகவும். பின்பு சகலமுங் கூட்டவும். உஷ்ண வாய்வு அக்கினி, மாந்தம் மல பந்தம், மூல வாய்வு, மேக வாய்வு, மேகக் கிரந்தி கை எரிவு, கால் எரிவு, சுரக் சூலை எரிவு, உஷ்ண வாய்வு மேலெழுந்த வியாதி எல்லாந் தீரும். மாவிலிங்கப் பட்டை சிறு நிம்பளை, எருமை மோரில் படி.ரு கலந்து கொடுக்கப் பிரமியம் தீரும்.

திரிகடுகு, திரிபாலை, கஞ்சாயிலை புடமிட்டு மூன் மருந்து வகை பலம்.க,

கற்சாப் பொடி பலம்.உ, தேன், சர்க்கரை, நெய் கூட்டிப் பிசைந்து வைத்து நாது காசிடை கொள்ளவும் தீபன முண்டாம். உடம்பு பிருக்கீண்டாம்.

<u>ரோகணிச் சூரணம்:-</u>

ரோகணி மரமஞ்சள், திரிகடுகு, மஞ்சள், திப்பிலி மூலம், விளங்கம், சீரகம், கடுக்காய் வகைக்கு நிலாவாரை, சிவதை, கண்டங்கத்திரி முக்காவலை வள்ளி யெல்லாம் வகைக்கு விராகனிடை.க, கூட்டிச் சூரணம் பண்ணி சரி சர்க்கரை கூட்டிக் காலமே வெருகடி தின்ன.ஒரு நாள் சகல வாய்வு அக்கினி மந்தம், மல பந்தம், நீர்க் கோவை, மூல வாய்வு, இவை எல்லாந் தீரும்.

சீரகம், வெந்தயம், சுக்கு, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், மிளகு, கடுகு, கிராம்பு, நாய்க் கடுகு ஏலக்காய் சவுக்காரம், எருக்கம் பழுப்பு, பிரண்டை தூக விரா கனிடை.ரு இள. வறையார் வச்சிரப் பிசின் போலே அரைத்து புளியம் விரைப் பிரமாணம் உருண்டை பண்ணித் தின்னப் பசியுத்தது வயறு, வீக்கம், கழிச்சல், அக்கினி மந்தம், இவை தீரும். அக்கினி மாந்தம் இருந்தவர்க்கு வாத பிச்சமால் வயறு பொருமி இருந்தால் மருந்து.

<u>வாதக் குடோரி:-</u>

லெம், ஓமம், மிளகு, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், லவங்கம், கடுகு, நாய்க் கடுகு, வெந்தயம், சவுக்காரம் வகைக்கு விராகனிடை.ரு எல்லாம் பொன்னிறமாய் வறுத்து இடித்து வடிக்கட்டி எருக்கம் பழுப்பு பிரண்டை இரண்டும் வகைக்கு இடித்த சாறு பிழிந்து இந்தச் சாற்றில் பிசின் போல அரைத்து புளியம் விரைப்பிரமாணம் உருண்டை பண்ணி அந்தி, சந்தி தின்னவும். சரீரம் பொறுக்காமலிருந்தால் ஒரு நேரம் சாப்பிடவும் பத்தியம் புளி புகை விடவும்.

<u>அமுக்கிறச் சூரணம்:-</u>

அமுக்கிறு பலம்.அ, சுக்கு பலம்.ச, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.க, ஏலம் பலம்.தெ, லவங்கப் பட்டை பலம்.ரு, கிராம்பு விராகன்.க, இதுக்குச் சரி சர்க்கரை கூட்டவும். இதுக்கு காச சுவாசம், சேற்பம், காசி ரோகம், சுரம் வீக்கம், மந்தாக்கினி, உத்திர வாய்வு, வாந்தி, உஷ்ணம் பிரமியம் பயித்தியம், சூசிகா வாய்வு இவை தீரும்.

<u>முக்கா அகை வலை பற்பம்:- அக்கினி மாந்தத்துக்கு:-</u>

முக்கா வலை ஒரு பானையிலிட்டு எரிக்கப் பற்பமாம். பலம்.அ சயிந்த லவ ணம் பலம்.உ, கூட்டிக் கலந்து வெருகடி தேனில் கொள்ள அக்கினி மந்தம், வயறு வலி மந்தம், வாய்வு இவை தீரும்.

<u>மூல வாய்வுக்கு மருந்து:-</u>

வடக்கு முகமாயிருக்கிற மாவிலிங்கக் கொழுந்து பிடி, மிளகு பிடி.உ, கூட்டிச் சுண்ணாம்புத் தண்ணீரில் வேக வைத்து அரைத்து அந்த வேர்ப் பட்டை சீவிப் பிடி, ஓமம் சிறங்கை இது இரண்டும் சுண்ணாம்புத் தண்ணீரில் வேக வைத்து இரண்டும் வெற்றிலைச் சாற்றிலரைத்துக் கூட்டிக் கழற் பிரமாணம் உருண்டை பண்ணித் தின்னவும். காலமே மூல வாய்வு, மலபந்தம், மூலம், அக்கினி மாந்தம் இவை தீரும்.

திரிகடுகு, திரிபாலை, முத்தக் காசு, விளங்கம், எவ்வக்ஷாரம், கொத்த மல்லிகை, சித்திர மூலம், தேவதாரம், வட்டத் திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், அதிவிடயம், பேய்ச்சுரை வேர், பிறக்காஞ்சம், கைச்சோலம், சவுட்லவணம், ஆலைத் திப்பிலி நவாச்சாரம் வகைக்கு விராகனிடை மூன்று இது எல்லாம் பொடி பண்ணி இதுக்குச் சரி கழுங் குங்கிலியங் கூட்டிப் பொடி பண்ணி வெந்நீர் விட்டுப் பிசைந்து கழற் பிரமாணம் உருண்டை பண்ணி உ நேரமுந் தேனில் கொள்ளவும். இதுக்கு ரெத்த வாதம், பாரிச வாதம், காசம், சுவாசம், அசீரணம், வாய்வு, மூலரோகம் கிரைப்

பாம்பு, குட்டரோகம் சுரம்.அ வகை க்ஷயம், சுந்தம், எலும்புருக்கி, உதிர சூலை பாரிச சூலை, வாத சூலை.உ, ரெத்த ரோகம், ஆமைக் கட்டி ஆமைச் சூலை எ வகை வயிற வீக்கம் குதம்பை மூலம்.அ வகை கட்டமான ரெணம் மேகம்.உக தீரும்.

12.8.63.

<u>பஞ்சாக்கினிச் சூரணம்:-</u>

பஞ்ச லவணம், நவச்சாரம், திரிகடுகு, திரிபாலை, சீரகம், கிராம்பு, ஓமம், வெள்ளுள்ளி, சிவதை நாகப்பூ, நந்தியா வட்டம் இவை கூட்டி கள்ளிப் பால் விட்டரைத்து உருண்டை கண்டைக் காயளவு பண்ணி நெய்யில் கொள்ளவும். இதைக்கு குன்மம்.ரு, மூலம் சுவாசம், காசம், வாதம்.அய, மகோதரம், சுரம் பாண்டு.அ, குடல் வியாதி வீக்கம், காமாலை, மூத்திரக் கிறிச்சம் கிருமி அத்தி நீர் மாந்தம் இவை தீரும். கை கண்டது. பசி-தீபனமுண்டா-

<u>பசி தீபனமுண்டாக:-</u>

ஓமம் பலம்.உ, திப்பிலி பலம்.ரு, மிளகு பலம்.௩, சுக்கு பலம்.௩, காயம் பலம்.௩, இந்துப்பு பலம்.௬, சீரகம் பலம்.௯, கருஞ்சீரகம் பலம்.ரு, அதிமதுரம் பலம்.௰, கோஷ்டம் பலம்.௰, புடமிட்டு இடித்துச் சூரணம் பண்ணிச் சரி சர்க்கரை கூட்டிக் கரிபான் சாறு கட்டி மெழுகு பதமாய் முன்னிக்காய் பிரமாணம் தின்னவும். பயித்திய வாய்வு தீரும்.

<u>சித்திர மூல ரசாயனம்:-</u>

திரிகடுகு, திரிபாலை, இந்துப்பு, சித்திரமூலம் வகைக்கு பலம்.க இடித்து சூரணம் பண்ணி வெருகடி நெய்யில் கொள்ளாமல் தேனில் கொள்ளத் தீபனமாம். சர்க்கரையில் கொள்ள உஷ்ணம் விடுவிக்கும். தேன், சர்க்கரை மருந்து சமன் கூட்ட ரசாயனமாம். சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அபின், சித்திரமூலி வகைக்கு பலம்.௩, லவங்கப் பட்டை, மிளகு, சீரகம், ஓமம் வகைக்கு பலம்.௫, அபினி, சித்திர மூலி, நீக்கி மற்றதெல்லாம் இள வறுவலாய் வறுத்துக் கொள்ளவும். ஏலம் விசை எள் பண்ணி பழ வெல்லம் பலம்.ரு, சிறுகத் தண்ணீர் விட்டு பாகு காய்ச்சி மருந்து போட்டுக் கிளறி வைத்துப் பாக்களவு தின்னவும். உஷ்ண வாய்வு இரைச்சல், கழிச்சல், பொருமல் பாண்டு இவை தீரும்.

<u>உடம் பெரிச்சல், விக்கல், சத்தி தாகம், அக்கினி மாந்தத்துக்கு லேகியம்:-</u>

உடம்பெரிவுக்கு பச்சைப் பயறு வில்வ வேர், முன்னை ஏலம், நெல் பொரி, நெல்லிப் பருப்பு இந்நீரில் கார்ச்சி குடிக்க உடம் பெரிப்பு, உழலை விக்கல் சத்தி தாகம் தீரும். திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம்.உ, மிளகு பலம்.௫, சுக்கு பலம்.க, சீரகம் பலம்.ரு இவை எல்லாம் சூரிய புடம் வைத்து இடித்துச் சூரணம் பண்ணி, உரி தேன் விட்டுப் பிசைந்து கழல் பிரமாணம் உருண்டை பண்ணி அந்தி சந்தி.எ, நாள் தின்னவும். இதுக்கு அக்கினி மாந்தம், கை கால் கடுப்பு, பசி மந்தம், வயறு இசிவு, தலைப் பயித்தியம் இவை தீரும். வாத சரீரத்துக்கு தேனில் பித்தசரீரத் துக்குப் பசுவின் நெய் அனுபானம். இது கை கண்டது.

<u>வாய்வுக்கு:-</u>

மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளுள்ளி, சமன் கூட்டி பிடி வெருப்படக்கி கட்டி அவிழ அரைத்து சுழற் பிரமாணம் உருண்டை பண்ணிக் காலமே தின்னவும். வயறு இரைச்சல் பொருமல், கழிச்சல், அக்கினி மந்தம் இவை தீரும். கை கண்டது. புளிச்ச மோர் தயிர் கூட்டவும்.

<u>உஷ்ண வாய்வு கழிச்சல் பொருமல்:-</u>

சுக்கு பலம்.உ, மிளகு பலம்.௰, திப்பிலி பலம்.௰ லவங்கம் பலம்.க, சிறுநாகப்பூ பலம்.உ, ஏலம் பலம்.௩, அமுக்கிரா பலம். இவை யெல்லாங் கூட்டி இலக்குச் சர்க்கரை பலம்.எ கூட்டி வெருகடி வெந்நீரில் கொள்ள பயித்தியம் பிறந்த

ரெத்த வாந்தி தீரும். க்ஷயரோகந் தீரும். கண்டங் கத்திரி இடித்துப் பிட்டுப் பிழிந்த இந்தச் சாற்றில் குக்கிலம் பலம்.எ, பொரித்து அரைத்து கழஞ்சளவு உருண்டை பண்ணி நெய்யாவது தேனாவது கூட்டித் தின்னவும். இருமல் உப்புசம், க்ஷயந் தீரும்.

ரத்த குன்மத்துக்கு:-

நரந்தாரி யிலை விழுது, விளாங்காயளவு அவ்வளவு கருங் குவளை மா கூட்டிக் கழப்பிப் பகலின் நெய்யில் பணியாரஞ் சுட்டு அந்தி, சந்தி தின்னவும். துவரை மிளகு நீர் கூட்டவும். கொடிவேலிக்காய் வட்டத் திருப்பி, திரிகடுகு, இந்துப்பு, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி மூலம், யவட்சாரம், விளங்கம், பெருங்குரும்பை, செவியம், சாறணை இவை சரி கூட்டி நிம்பச் சாற்றிலரைத்துச் சிறு கழற் பிரமாணம் உருண்டை பண்ணி அசனத்தின் முன் தின்னவும். அசனஞ் செரிக்கும். பிறகு தின்ன தின்றது செரிக்கும். இதுக்குப் பக்க சூலை, மாருணைப்பு ஆமை சூலை ஆரோசிகம், அய வாதம், விருழி அசீரணம் இவை தீரும்.

புளுத்தற் சாதி வடகம்:-

முக்காவணை சமூலம் பானையிலிட்டு எரித்து பற்பம் பண்ணி பலம்.அ, சயிந்த லவணம், பலம்.ஈ, கூட்டிக கலந்து வெருகடி தேனில் தின்ன இதுக்கு அக்கினி மாந்தம், யிரைச்சல், கழிச்சல், வயறு வலி மந்தம், பொருமல் இவை தீரும்.

பித்தத்துக்கு எண்ணை:-

நறுவிளிப் பட்டை, நாகப் பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, லவங்கப் பட்டை வகைக்கு பலம்.கு, தனித் தனியே இடித்து ஐந்து வகைச் சாறு பிழிந்து ஐந்து வகைச் சாறும் கால்படி எண்ணை அரைப்படி கூட்டி சூரிய புடம் வைத்து எரித்து தினங் கரண்டி காலமே கொள்ளவும். அடர முழுகவும். அ நாள் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால், நெய் பருப்பு பெருங்கைப் பிஞ்சு கூட்டவும்.

பக்க குட்டுக்கு:-

குத்தி யிலையை அரைத்து நிம்பளவு அவ்வளவு வெண்ணை குழப்பிக் கொள்ளப் பக்கக் குட்டு நடு வயத்துக் குட்டுத் தீரும்.

அரிதகிச் சூரணம்:-

விரை போக்கிக் கடுக்காய் பலம்.க, திப்பிலி பலம்.க, சரி கூட்டி இடித்து வடிகட்டி வெருகடி காலமே தேனில் தின்னவும். மூல வாய்விரும் அக்கினி மந்தம் குணமாம் சகல குன்மம், சகல வாய்வுந் தீரும்.

தீபனச் சூரணம்:-

சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, திப்பிலி, ஓமம் காயம் இவை சமனாய்க் கூட்டிச் சூரணம் பண்ணித் தின்னவும்.

தீபனச் சூரணம்:-

காக்கை இரண்டுண்டு கரி நிலந் தேவி தலை நூர்க்கப் பொடி பண்ணி பாக்களவு பாலில் கொள்வீரால் நோக்கைக் கழிவில்லை ஆண்டு ஆயிரமே.

சுக்கு பலம்.க, பாகு காய்ச்சிப் பொடி போட்டுக் கிளறி சித்திர மூலி விராகனிடை.க, அபின் விராகனிடை.க, மேல் பொடி ஊ லி நிம்பு.க, பிழிந்து கிளறி கழற் பிரமாணம் தின்னவும். உடம்ப வாய்வு இரச்சல், பொருமல் கழிச்சல் இவை தீரும். கை கண்டது. வறுத்துக் கழக் கொட்டி பருப்பு, பெருங்காயம், சுக்கு, வெள்ளுள்ளி, சமன் கூட்டி இள வெந்நீரிலரைத்துக் குடிக்கவும். அசீரண வலி ஆமை வலி வாய்வு, சூலை இவை முதலானது குணமாம்.

சுரத்தின் மேல் கழிச்சலுக்கு:-

கிராம்பு விராகனிடை.க, எருமை மோரில் முடிந்து போட்டு வேக வைத்து

அந்த மோர் தெளிவிலரைத்துக் கொடுக்கவும். சுரம் அதிசாரந் தீரும். ஆமை வலி அசீரண வலி, வாய்வு, சூலை இது தீரும். நாலாவது பத்தாவது வாந்தி எடுத்தால் மூன்று நிறை சுக்கு தட்டி ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அரைக்கால் படி தண்ணீர் நிற்க இறுத்துக் கொடுக்கவும். மருந்துகள் பொருந்தாமல் வாந்தி எடுத்தால் இந்தப் படி கொடுக்க நிற்கும்.

<u>அக்கினி மாந்தத்துக்கு லேகியம்:-</u>

திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.உ, மிளகு பலம்.ரு, ஓமம் பலம்.கால், சுக்கு பலம்.க, சீரகம் பலம்.க எல்லாம் சூரிய புடம் வைத்து இடித்து வடிகட்டித் தேன் உரி விட்டுப் பிசைந்து கழற் பிரமாணம் தின்னவும். எ நாள் தின்ன அக்கினி மாந்தம் கால், கை கடுப்பு, பசி மந்தம் வயறு இழுவு, தலைப் பயித்தியம் இவை தீரும்.

வாத சரீரத்துக்குத் தேன், பித்த சரீரத்துக்கு நெய் இது கை கண்டது.

சுக்கு, திப்பிலி மூலம், அதிவிடயம், அரத்தை, சடாமஞ்சி வகைக்கு விராகனிடை.அ, பொடி பண்ணி பழ வெல்லம் பலம்.க, சட்டியில் போட்டு உருகினவுடனே மருந்து போட்டுக் கிளறி வைத்துக் கழற் பிரமாணம் தின்ன அக்கினி மந்தந் தீரும்.

சுக்கு, சீரகம் பலம்.உ பொடி பண்ணிச் சர்க்கரையில் தின்ன வாய்வு தீரும். பேதியானால் வறுத்துக் கொள்ளவும். பயித்திய வாய்வு, எரைச்சல், கழிச்சல இவை தீரும்.

<u>சகல வாய்வுக்கு மருந்து:-</u>

சுக்கு, வெங்காரம், இந்துப்பு, பெருங்காயம், உப்பு நீங்கள், மற்ற மருந்தெல்லாம் பாதி பொரித்து மற்றது பச்சை எல்லாம் சமன் கூட்டி முருங்கைப் பட்டை சாற்றில் அரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி உலர்த்தி இஞ்சிச் சாற்றிலிட இருக்கும் தீர வயிற்றுச் சூலை, வாய்வு. குசிக வாய்வு தீரும்.

<u>சகல வாய்வுக்கு மருந்து:-</u>

ஆதளையிலை.ரு, மிளகு.எ, திப்பிலி மூன்று. இந்துப்பு விராகனிடை.ரு, உள்ளிப் பருப்பு.ரு, சுக்கு.கஅ அரைத்துக் கொடுக்கவும். குசிக வாய்வு தீரும். கை கண்டது. கொடிவேலி வேர் பாலில் அரைத்துக் குடிக்க உடம்பு எரிப்புத் தீரும். தண்ணீரில் கொள்ளப் பின் ளையுண்டாம். தேனில் கொள்ள ஈளை இருமல் தீரும். எண்ணெயிலெரித்துக் காதில் விடச் சீ மாறும். வாயிலடக்க விடநந் தீரும். வேப்பொடி காசளவு காலமே மூன்று நாள் தின்ன சிரங்கு தீரும். இது கை கண்டது. பத்தியம் மோர், தயிர் கூட்டவும்.

<u>வெள்ளைக் காக்கணம் கற்பம்:-</u>

வெள்ளைக் காக்கணம் கொடி பிடுங்கி உலர்த்திப் பொடி இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு வெருகடி வெந்நீரிற் கொள்ள விடநந் தீரும். கை மசக்குத் தீரும். இது பாலிலரைத்துக்குடிக்கச் சிலந்தி தீரும். இது தண்ணீரிலரைத்து நெற்றியில் திலதமிட இது பூசிப் புணர பெண்கள் பிரியப்படுவார்கள்.

சுக்கு விராகனிடை.ரு, திப்பிலி விராகனிடை.ரு, மிளகு சீரகம் விராகனிடை. கருஞ்சீரகம் விராகனிடை.ரு இந்துப்பு விராகனிடை.ரு ஓமம் விராகனிடை.ய, காயம் விராகனிடை.ய இந்த எட்டும் சற்று வறுத்து இடித்து வடி கட்ட உடனே வாய்வு மிச்சமானவனுக்கு கரிசலாங்கண்ணி சாறு படி.க, நாலஞ்சு ஒட்டிவிட்டு சூரிய புடம் வைத்து உலர்த்தி விராகனிடை.ந கலந்து அந்தி, சந்தி விராகனிடை.க தின்னவும் தீபனமுண்டாம். மல சுத்தியாம். சரீரந் தட்டம் போலே ஆகும்.

<u>அட்ட சூரணம் சகல வாய்வுக்கும்:-</u>

சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க,

ஓமம் விராகனிடை.க, இந்துப்பு விராகனிடை.க, சீரகம் விராகனிடை.க, கடுக்காய்.க இது சமன் காயம் விராகனிடை.எ எல்லாம் சூரணம் பண்ணி வெந்நீரிலாவது தேனிலாவது தின்ன வாய்வு என்னப் பட்டதெல்லாந் தீரும்.

சீரிய யிவ்வருஞ் சிறந்த மூவரும் சூரிய வடகலை அசமதாகமும் கூரிய ஒரு வருங் கொடிய காயமும் நேர்படி என் மரும் நெருப் பொடொக்குமே.

இதில் வேப்பம், பழுப்புப் பொடுதலை காயம் வறுத்துப் பொடி செய்து கொடுக்கவும். வயறு இசிவு முகத்தில் பிசிவு தாழ்வாயிசிவு தாள் வாய் கடுப்பு எல்லாந் தீரும். ஒத்திடம் எருக்கிலை கல்லை தைந்த ஈர மணல் வறுத்த ஒத்திடவும். சீலையில் கல்லைப் போட்டு வறுத்த மணலைக் கொட்டிச் சேர்த்துப் பிடித்து ஒத்திடவும்.

சுக்குச்_சூரணம்_அக்கினி_மந்தத்துக்கு:-

சுக்கு பலம்.உ, மேல் தோல் சீவிப் போட்டு உப்பரைத்து மேல் பூசி உலர்த்திச் சட்டியிலிட்டுப் புடமிட்டு பொன்னிறத்திலிறக்கி உப்பு உருத்துப் போக்கு நிம்பச் சாற்றில ரைத்து.உ கொட்டைப் பாக்களவு காலமே தின்னவும். ௩ நாள் இதுக்கு அக்கினி மந்தம் அரோசிகம் சேற்பமம் பயித்தியம் இவை தீரும். வயறு எரிவு கண்டால் மூசுமுசுக்கை கசாயம் இட்டுக் குடிக்கவும். மூன்று பொழுது எரிவு நிற்கும். புடமிட்டுச் சுக்குப் பொடி பண்ணித் தேனில் சுழற் பிரமாணந் தின்னவும். அசீரணம் தீரும். தீபனமுண்டாம். ஓமம் பலம்.அ, இந்துப்பு பலம்.க, சுக்கு பலம்.ச, கடுக்காய் பலம்.உ எல்லாங் கூட்டி இடித்த சூரணம் பண்ணி வெருகடி தின்னவும். அக்கினி மாந்தம் சகல வாய்வுந் தீரும். தீபனமுண்டாம்.

அக்கினி_மாந்தத்துக்குசு_சகல_வாய்வுக்கும்:-

சுக்கு பலம்.க, ஓமம் பலம்.க, சீரகம் பலம். , கடுக்காய் பலம்.க, சவிந் தலவணம் பலம்.௩, வெட்சாரம் விராகனிடை.உ, காயம் விராகனிடை.௩ எல்லாங் கூட்டி சூரணம் பண்ணி வெருகடி தின்னவும். அக்கினி மாந்தம் மல பந்தம் மந்தம் தீரும். தீபனமுண்டாம். அரோசிகந் தீரும். கை கண்டது.

மிளகு பலம்.க, சுக்கு பலம்.௩, மஞ்சள் பலம்.௨ இது நெய்யத் தட்டி சட்டியிற் போட்டு சிவக்க வறுத்து பிறகு தண்ணீர் படி.ரு விட்டுக் காய்ச்சி சிறங்கை இறுத்து அபின் மிளகளவு வீக்கில் வாட்டி முருங்கத்தால் பொடி பண்ணிக் கலந்து அந்தி சந்தி.எ நாள் கொள்ளவும் உடனே வாய்வு இரைச்சல், பொருமல், கழிச்சல் அக்கினி மாந்தம் இவை தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர் கூட்டவும்.

புன்னைக்கு, வெள்ளுள்ளி, கல்லுப்பு சமன் கூட்டி அரைத்து சுழற் பிரமாணம் தின்ன வயறு சூலை தீரும்.

இடுப்பு_நோவுக்கு:-

கோழிமுட்டை.க உடைத்து சட்டியிலிட்டு பெருங்காயம் விராகனிடை.ரு, வெள்ளுள்ளி பலம்.௩, தேங்காய் மூடி திருவிப் பால் பிழிந்து புழுங்கலரிசி சிறங்கை இவையெல்லாம் பாலிலரைத்துக் கலந்து நல்லெண்ணை.தெ விட்டு இதில் மூன் கலந்த மருந்து விட்டு அப்பஞ் சுட்டு ராத்திரி தின்று படுத்துக் கொள்ளவும். காலமே கருவாடு புளி தள்ளிச் சாறு காச்சி வார்த்துக் கொள்ளவும். ௩ நாள் இதுக்கு இடுப்பு நோவு மார் நோவு, கை கால் கடுப்பு, சூசிக வாய்வு தீரும். உடம்பு பலமுண்டாம். கை கண்டது.

வாழைப்பழம்.௩, நல்லெண்ணெயில் பிசைந்து.எ நாள் தின்ன இடுப்பு நோவு தீரும். வெருகங் கிழங்கு அரைத்து விழுது நிம்பளவு புழுங்கலரிசி சிறங்கை வெல்லம் சிறு நிம்பளவு நல்லெண்ணெயில் களி பண்ணித் தின்ன இடுப்பு நோவு தீரும். கை கண்டது.

நீர்ப்_பாட்டுக்கு:-

கொப்பாடு விதை நீர்மிரி இதுக்கெல்லாம் அபின் மிளகு சமன் சீரகம் விராகனிடை.ரு வறுத்து நாலி பண்ணி வெந்நீரில் சாரித்துக் கொடுக்கவும். சீரகம் விராகனிடை.க, (மூன்றுவது சுண்ணாம்பு) குன்றியளவு கூட்டி கையில் நல்லாய் தேய்த்து ஊதிப் போட்டு தின்று

வெந்நீர் குடிக்க விக்கல் தீரும்.

வாந்திக்கு பிராந்திக்கு:- சும்பு சுட்டுக் கரி விராகனிடை.க, அபினி கடுகளவு கூட்டிப் பண்ணித் தேனில் கொள்ளவும். வாந்தி, கழிச்சல் இவை தீரும். மன்மழுந் தீரும். கை கண்டது.

கடுப்புக் கழிச்சலுக்கு:- 13.8.63.

அபினி விராகனிடை.க, கடுகுரோகணி ஓமம் கிராம்பு, சாதிக்காய் இவை மத்தைச் சாற்றிலரைத்து உளுண்டை பண்ணி ஊர்த்தி தேனில் தயிரிலிடவும். கடுப்புக் கழிச்சல் தீரும், புங்கங் கொழுந்து சரி வெல்லங் கூட்டி அரைத்து (உசுகிறதரைக்) கிளறி வைத்து மூன்று நாள் நெய்யில் கழற் பிரமாணம் கொள்ள வயறு வலி, கழிச்சல் கடுப்பு சீதம், ரெத்தம் மத்தாதிசாரம், அமாதிசாரம் இவை தீரும்.

சீதமூலம் ரெத்த மூலத்துக்கு:-

சுக்கு, சீரகம், கருவேப்பிலை, மாம்பருப்பு வகைக்கு விராகனிடை.க கூட்டி அரைத்து கழ் காய்ச்சிக் குடிக்கச் சீதக் கடுப்பு ரெத்தக் கடுப்புத் தீரும். விடத் தேரிலை அரைத்து நிம்பளவு வடிகட்டின தயிரில் குழப்பிக் கொடுக்க ரெத்தக் கடுப்பு தீரும். பத்தியம் நெய்யும் சோறும். இவை கை கண்டது.

வயறு கடுப்பு, ரெத்தக் கடுப்புச் சீதமுங் கழிச்சலுக்கு:-

வரகரிசி தீட்டி தவிடுடன் பொங்கிச் சேர்ந்து வருகிற வேளையில் ஒரு அகப்பை சோறு வாங்கி மூன்று கடுக்காயும் காசுக் கட்டியும் பொடி பண்ணிச் சோற்றிலரைத்து வைத்து நல்லெண்ணை வார்த்து முன் சோற்றில் மூடிப் புழுங்க வெந்த பிறகு மருந்து பிடியும் சோறு பிடியும் உண்ணவும். வயறு கடுப்பு தீரும்.

மூலக் கிராணிக்கு வயறு கழிச்சலுக்கும்:-

வெள்ளுள்ளி பலம்.௨, அரிஞ்சு சட்டியில் போட்டு பாக்களவு பனை வெல்லங் கூட்டிக் கிண்டித் தின்னவும். மூலக் கிராணி வயறு கழிச்சல் தீரும்.

அதிசாரக் கிராணிக்கு:-

கழற்சிப் பருப்பு ஓமம் இரண்டும் நல்லெண்ணையில் வறுத்து இடித்து சூரணம் பண்ணி எண்ணை விட்டுப் பிசைந்து வெருகடி தின்னவும். கிராணி அதிசாரந் தீரும்.

மூலத்துக்கு:- வரகரிசி சிறங்கை கழிஞ்சைப் பிடி கூட்டி அரைத்து அடை சுட்டுத் தின்ன நாள மூலம் விழுந்து போம்.

திப்பிலிச் சூரணம்:-

சுக்கு பலம்.௪, மிளகு பலம்.௩, திப்பிலி பலம்.௩ லவங்கம் பலம்.க, சிறு நாகப்பூ பலம்.௨, ஏலம் பலம்.௩, அமுக்கிரா பலம். இவை யெல்லாங் கூட்டி இதுக்கு சர்க்கரை பலம்.எ கூட்டி வெருகடி வெந்நீரில் கொள்ள பயித்தியத்தில் பிறந்த ரெத்த வாந்தி க்ஷயரோகமுந் தீரும். கை கண்டது.

கண்டங்கத்திரி இடித்து பிட்டு இட்டு பிழிஞ்சு இந்தச் சாற்றில் குக்கில் பலம்.எ, பொரிச்சு அரைச்சு கழற் பிரமாணம் உருண்டை பண்ணி நெய்யிலாவது தேனிலாவது கூட்டித் தின்னவும். இதுக்கு இருமல் உப்பிசம், க்ஷயம் தீரும்.

ரெத்த குன்மத்துக்கு:-

நருந்தாளியிலை விழுது விளாங்காயளவு அவ்வளவு கருங்குவளையாக கூட்டிக் குழப்பி பசுவின் நெய்யில் பணியாரஞ் சுட்டு.௩ நாள் அந்தி சந்தி தின்னவும். தலைர மிளகு நீர் கட்டவும். குருதந்சி*லசுகக்*

புழுதக்கிலட்டகம் உலைக்கு:-

கொடிவேலி, காரம், வட்டத் திருப்பி, திரிகடுகு இந்துப்பு, ஓமம், சீரகம் கருஞ்சீரகம், திப்பிலி மூலம், யவட்சாரம், விளங்கம், பெருங்குரும்பை, செவியம் சாறணை இவை சரி கூட்டி நிம்புச் சாற்றிலரைத்து சிறு கழற் பிரமாணம் உண்டை

பண்ணி அசனத்தின் முன் தின்னவும். அசனஞ் செரிக்கும். பிறகு தின்னத் தின்றது செரிக்கும். இதக்கு பக்க சூலை மாருளைப்பு குலை சூலை, அரோசிகம், அவ்வாதம், விக்கி, அசீரணம் இவை தீரும்.

புகுக்குச்சாதி வடகம்:-

முக்கா வேளை சமூலமும் பாவிலயிலிட்டு எரித்த பறபம் பண்ணி பலம்.அ, சயிந்த லவணம் பலம்.ஊ கூட்டிக் கலந்து வெருகடி தேனில் தின்ன அக்கினி மாந்த பிரைச்சல் கழிச்சல் வயறு வலி, மாந்தம் பொருமல் இவை தீரும்.

பித்தக்குக்கு என்ணை:-

நாவுளிப் பட்டை, நாகப்பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, இலவம் பட்டை வகைக்கு பலம்.ரு, தனித் தனியே இடித்துச் சாறு பிழிந்து ஐந்து வகைச் சாறு கால்படி எண்ணை அரைப்படி கூட்டிச் சூரிய புடமாய் வைத்து எரித்து திரங் கறங்கி காலமே கொள்ளவும். அடர முழுகவும். அ நாள் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால், நெய் பருப்பு முருங்கைப் பிஞ்சு கூட்டவும்.

குட்டு பக்கக் குட்டுக்கு:-

சுந்திரிஇலையை அரைத்து நிம்பளவு அவ்வளவு வெண்ணை குழப்பிக் கொள்ளவும். குட்டு பக்க குட்டு நடு வயற்றுக் குட்டுத் தீரும்.

அரிதகிச் சூரணம்:-

விரை போக்கிக் கடுக்காய் பலம்.க, திப்பிலி பலம்.க, சரி கூட்டி இடித்து வடிகட்டி வெருகடி தேனில் காலமே தின்னவும். மூல வாய்வு அக்கினி மந்தம் குன்மம் சகல வாய்வுந் தீரும்.

தீபனச் சூரணம்:-

சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, திப்பிலி, ஓமம், காயம் இவை சமனுக் கூட்டி சூரணம் பண்ணித் தின்னவும்.

தீபனச் சூரணம்:-

சுக்கு பலம்.க, சீவிப் பொடி பண்ணி வெல்லம் பலம்.உ, காய்ச்சிப் பொடி போட்டுக் கிளறி சித்தமுலி விராகனிடை.க, அபின் விராகனிடை.க, மேன் பொடி பண்ணித் தூவி நிம்பு.க, புழிஞ் கிளறி கழற் பிரமாணம் தின்னவும். இதக்கு உஷ்ண வாய்வு, இரைச்சல் பொருமல் கழிச்சல் இது தீரும். கை கண்டது.

வறுத்த கழற் கொட்டை பருப்பு, பெருங்காயம், சுக்கு, வெள்ளுள்ளி இவை கூட்டி இள வெந்நீரிலரைத்துக் குடிக்க ஆமம் வலி அசீரண வலி வாய்வு, சூலை இவை முதலானது குணமாம்.

சுரத்தின் மேல் கழிச்சலுக்கு:-

சிராம்பு விராகனிடை.க, எருமை மோரில் முடிந்து போட்டு வேக வைத்து அந்த மோரில் தெளிவிலுல் அரைத்துக் கொடுக்கவும். சுரம், அதிசாரந் தீரும். நாவிலா வது பத்தாவது வாந்தி எடுத்தால் மூன்று சுக்கு தட்டி தீபபி தண்ணீரில் போட்டு அரைக் சாறு படியாகக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும். ரத்தக் கடுப்பு, சீதக் கடுப்புக்கு:-

பச்சைக் கருவேப்பிலை அரைத்துக் கொட்டை பாக்களவு அவ்வளவு மிளகரைத்து பழந் தண்ணீரில் குழப்பிக் கொடுக்க ரத்தக் கடுப்பு சீதக் கருப்புத் தீரும்.

மூலக் கிருமிக்கு:-

சாதிக்காய்.ச, கிராம்பு விராகனிடை.ச, அதிவிடயம் விராகனிடை.க, அபினி விராகனிடை.க இவை பொடி பண்ணித் தேனில் கொள்ளவும் மூலக் கிருமி தீரும்.

வயறு கடுப்புக் கழிச்சலுக்கு:-

அபின் விராகனிடை.க, கருஞரோகனி ஓமம், கிராம்பு சரி கூட்டி மத்தைச் சாத்திலரைத்து உருண்டை பண்ணி தயிரில் தேனிடக் கடுப்புக் கழிச்சல் தீரும். கடுப்புக்

கழிச்சலுக்கு:- தாளியிலை உப்பில்லாமல் புழுங்கலரிசிப் பொரிமாவில் தூவி மூன்று நாள் கொடுக்கக் கடுப்புக் கழிச்சல் தீரும்.

__வயது கடுப்புக் கழிச்சல் இதுக்கு:-__

ஓமம் விராகனிடை.ய, கடுக்கி அபின் விராகனிடை.க இது இரண்டுஞ் சுட்டு பொடி பண்ணி வைத்து நேரத்துக்கு விராகனிடை தேனில் வெண்ணெயில் கொடுக்கவும். பத்தியந் துவர்க் கறி கூட்டவும். கை கண்டது.

__மூலக் கிராணிக்கு:-__

நீக்குரட்டை யிலை அரைத்துக் கரண்டியிட்டு நல்லெண்ணெ விட்டுக் கிளறி மூன்று நாள் தின்னவும். மூலக் கிராணி தீரும். கை கண்டது.

கழுதம்பை விளாங்காயளவு அவ்வளவு உளுந்து கூட்டி அரைத்து விளக்கெண்ணெயில் ¼ அப்பஞ் சுட்டுத் தின்ன எண்ணெயுங் குடிக்க வயிறு விடும்.

__கிராணி கடுப்புக்கு:-__

செவ்வாழைப் பழத் தோல் பச்சைத் தோல் சிறு அரிந்து வறுத்துக் கரியாக்கி அந்த கரி விராகனிடை.ய அபின் விராகனிடைக் கூட்டிப் பொடி பண்ணி நேரத்துக்கு விராகனிடை.க தேனிலாவது வெண்ணெயிலாவது குழப்பிக் கொடுக்க கிராணிக் கடுப்புத் தீரும்.

__மூலக் கிராணிக்கு:-__

கழுதம்பை அரைத்து விளாங்காயளவு அவ்வளவு புழுங்கலரிசி அரைத்துக் கலந்து நல்லெண்ணெயில் ¼ அப்பஞ் சுட்டு அந்தி சந்தி தின்னவும். இதுக்கு கிராணிக் கழிச்சல் மூலக் கடுப்பு இவை தீரும். பத்தியம் ஐந்த யிலை சமைத்துத் தின்னவும். நல்லெண்ணெ கூட்டவும்.

__சகல கிராணிக்கும்:-__

எலுமிச்சம் பழஞ் சட்டியில் பிழிந்து அதில் அபின் விராகனிடை.க கூட்டிக் கரைத்து அடுப்பில் வைத்து எரிக்க சுக்கு பலம்.க, வறுத்துப் பொடி பண்ணி வைத்து தின்னவும். சகல கிராணியும் குசிகா கிராணியுந் தீரும். பத்தியம் நெய்யுஞ் சோறுந் தின்னவும். கடுக்காய்.யரு, சுக்கு பலம்.க, கூட்டிச் சூரணம் பண்ணி சர்க்கரை கலந்து தின்ன பயித்திய வாய்வு அரோசிகந் தீரும்.

__பைத்திய வாய்வுக்கு:-__

சுக்குஞ் சீரகமும் சரி கூட்டி சர்க்கரையில் தின்னவும் வாய்வு தீரும்.

கிராணிக்கு கபாடங் குளிகை:- ஊமத்தை விரை சாதிக்காய், கிராம்பு, வெளிச்சைப் பிசின் விளாம்பிசின், அதிவிடயம், மாம் விரைப் பருப்பு இந்த மருந்தெல்லாம் சமன் கூட்டி அபின் பெருமரப்பட்டை.ரு இந்துப்பு ஆக.யம் கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துத் தேனிலாவது தயிரிலாவது இட அதிசாரங் கழிச்சல் கிராணிக் கழிச்சல் பொருமல் இவை தீரும். ஆறு நாள் கொடுக்கவும். பத்தியம் வெள்ளாட்டுக் கறி அவியல் தண்ணீர் வாழைக் கச்சல் முருங்கைப் பிஞ்சு அவரைப் பருப்புக் கூட்டவும். எலு நிம்புச் சாற்றில் அபின் விராகனிடைத்.க, கரைத்து சுக்கு பலம்.க, அரைத்துக் கரைத்துக் கொதிப்பித்து லேகம் உருண்டை சுண்டைக்காயளவு தின்னவும் சகல கிராணியுந் தீரும். கை கண்டது. பத்தியம் நெய்யும் சோறும்.

__மூலக் கிராணி, வாய்வுக்கிராணி, பாண்டுகை காம் ஓயாததுக்கு அக்கினி மாந்தம் இதுக்கு:-__

பிறண்டை கணு போக்கி முறட் இடித்து உலத்தி வடிகட்டி நாழி மூவுழக்கு கருஞ்சீரகம் பலம்.ரு காயம் விராகனிடை.ரு, ஓமம் பிடைச்ச மனி மூவுழக்கு கஸ்தூரி மஞ்சள் விராகனிடை.க, வெள்ளுள்ளி பலம்.ச, சீரகம் பலம்.க பனை வெல்லம் பலம்.யரு, கடுகு ஓமம் சீரகம், கருஞ்சீரகம் சற்றே வறுத்து இடித்துச் சூரணம் பண்ணி வெள்ளுள்ளி அரைத்து எல்லாங் கலந்து சித்த மூலிகை.தெ கலந்து வெருகடி.உ, வேளை

யுங் கொள்ளவும். பத்தியம் தயிர், மோர் வாழைக்காய் புகையிலே உப்பு, பசுவின் பால் இவை கூட்டவும்.

அதிவிடயம் மாம்பருப்பு, சாதிக்காய், அபின், குத்திர நாபி இவை வகைக்கு விராகனிடை.க நாவியைச் சிறுக நறுக்கி கோமூத்திரத்தில். நாழிகை ஊறப் போட்டு சீந்திக் கொடிச் சாறு விட்டரைத்து.ய நாழிகை பிறகு தேன் விட்டரைத்த பிசின் போலே அரைத்து குன்றி அளவு உருண்டை பண்ணி நிழலில் வைத்து வயிற்று கழிச்சல் கிராணி இதுக்கு தேனில் தயிரில் சர்க்கரையில்.ச நேரம் கொடுக்கவும். நில்லாவிட்டால் பின்னேயும் இரண்டு நேரம் கொடுக்கவும். வயறு கடுப்புக்குத் தயிரில் கொடுக்கவும்.

<u>கிராணிக்கு:-</u>

கடுகு, சீரகம், ஓமம், மிளகு, வெள்ளுள்ளி, திப்பிலி, திப்பிலி மூலம், கடுகுரோகணி வகைக்கு படி.வ, எல்லாம் கூட்டிக் கெட்டிச் சீலையை மூன்று மடித்து அதில் பொட்டணம் கட்டி ஐந்து படி பசுவின் ஒரு பானையில் வார்த்து முக்கால் படி கல்லுப்புப் போட்டு அதின் மேல் பொட்டணம் வைத்துச் சட்டி கொண்டு மூடி எரிக்கவும். மோரெல்லாம் சுண்டி சீலை மூன்று மடிப்பில் ஒரு மடிப்பு வெந்தாப் போலே பானை வெடியாம இறக்கிப் பொட்டண மருந்தை எடுத்துக் கொண்டு இள வெந்நீரிலே சிறு கொட்டைப் பாக்களவு அபின் கரைத்து இந்தத் தண்ணீர் தெளித்துப் பதமாய் அரைத்து கழற் பிரமாணம் குளிகை பண்ணி உலர்த்தி வைத்து அந்தி விடியல் குளிகை தின்னவும். ய நாள் தின்னவும். இதுக்கு அதிசார மூலக் கிராணி, சங்கா கிராணி வயிறு பொருமல், சோறு செரியாமலிருக்கிறது, ரத்தமும் சீதமும் விழுகிறது மஞ்சள் போலே விழுகிறது எல்லாம் ஒரு வாரத்துக்கு வரும். பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>பித்த வாய்வுக்கு:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், ஓமம், கருக்காய், சமன் பொடி பண்ணி சரி சர்க்கரை கலந்து தேனில் கொள்ளச் சகல பித்த சுவாசம் வாயிரைப்பு மேல் மூச்சு இளைப்பு தேகம் உலர்ந்தது இவை தீரும். <u>வயறு கடுப்புக்கும் கிராணிக்கும்:-</u>

பச்சரிசி படி.ஏ, அரைத்த மாவைக் களிக் கிண்டி அதில் சுக்கு பலம்.ஏ, வறுத்துப் பொடி பண்ணிப் போட்டுக் கிளறி வைத்துக் காலமே உடம்புக்கு வெந்நீர் விட்டுக் கொண்டு அந்தச் சோறு சத்து நெய் தொட்டுக் கொண்டு தின்னவும். இப்படி மூன்று நாள் காலமே தின்னவும். ஒரு மாதத்தைக் கிராணி வயறு கடுப்பு தீராதது தீரும். கை கண்டது. பத்தியம் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

<u>சிறு பிள்ளைக்கு அடி பிறப்பட்டால்:-</u>

கடுகு வெதுகடி பிரமாணம் பொன்னிறமாய் வறுத்துக் கொட்டைப் பாக்களவு பனை வெல்லம் கூட்டி அரைத்து உருட்டி மூன்று நாள் தின்னவும். அடவாங்கும். உப்பு, பருப்புக் கூட்டவும். கை கண்டது.

<u>பிறண்டைச் சூரணம்:-</u>

பிறண்டை கணுப் போக்கி குறுணி கல்லுப்பு எருமை மோர் படி.உ, கண்டை அவித்து உலர்த்திச் சூரணம் பண்ணி இதில் மிளகு, திப்பிலி, ஓமம் வகைக்கு பலம்.ஏ, வெள்ளுள்ளி பலம்.உ, எல்லா இடித்துச் சூரணம் பண்ணிக் கலந்து பனைவெல்லம் பலம். கூட்டிக் கலந்து அசனம் பண்ணி படுக்கிற போது விரல் கொண்ட பொடி தின்னவும். மூல வாய்வு, அக்கினி மந்தம், ரத்தம் விழுகிறது வயிறு எரைச்சல், மந்தக் கழிச்சல் மூலம் சிகை வாய்வு இவை தீரும். பத்தியம் புளி, புகை விடவும். கை கண்டது.

<u>அக்கினி மந்தம்:-</u>

கண்டங்கத்திரி நசுக்கிச் சூலம் புட்டு வைத்து சாறு பிழிந்து சிரங்கை.உ, இதில் மிளகு விராகனிடை.க, வெள்ளுள்ளி பூண்டு.க புளி விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.ச அரைத்துக் காய்ச்சிக் காலமே கொடுக்கவும்.

<u>இருமும்:-</u>

பிரண்டைக் கொழுந்து பிடி.உ, அவித்து அரைத்து சக்கை பிழிந்து போட்டு வடிகட்டிச் சாறு அதில் மிளகு விராகனிடை.க, புளி விராகனிடை.க, வெள்ளுள்ளிப் பூண்டு.க அரைத்துக் காச்சிக் காலமே கொடுக்கவும். அக்கினி மந்தம் மூல வாய்வு தீரும். இதில் திப்பிலி.ச கூட்டம்.

<u>பேதிக்கு</u>:-

நிலாவாரை வேர்ப் பட்டை அரைத்து கொட்டைப் பிரமாணம் வெந்நீரில் கலந்து கொடுக்கவும் பேதியாம்.

வெள்ளைக் காக்கணம் விரை அரைத்துக் கழஞ் பிரமாணம் வெந்நீரில் கொடுக்கப் பேதியாம். சாதஞ் சோறுங் கொடுக்கவும்.

<u>வாய்வு ஒருங்கிறதுக்கு</u>:-

மூன்று வருடந் சென்ற கோழி அறுத்து வெள்ளாட்டுப் பாலில் வேக வைத்து இதில் இந்துப்புக் காயம் வாலுளுவை யரிசி, சீரகம், சுக்குத் திப்பிலி, வெங்காரம், வசைக்க கருஞ்சு வெள்ளரி பலம்.ய, கோழிக் குடல் வாங்கிப் போட்டு மருந்தெல் லாம் கோழி வயத்தில் திணித்து வேக வைத்து பின்னைக் கொட்டைப் பிரமாணம் தின்னவும். வாய்வு ஒடுக்கந் தீரும்.

<u>ஆசனப் பவுத்திரங் கண்ட மாலைக்கு</u>:- <u>பவுத்திரத்துக்குப் புகை</u>:-

செங்கல் நெருப்பாய் காயப் போட்டு எடுத்துப் பணவிடை வெள்ளைப் பாஷா ணம் பொடி போட்டு அதின் மேல் உத்தாமணி சாறு பிழியப் புகை எழும்பும். இந்தப் புகை புள்ளில்.ய நாள் பிடிக்கப் பவுத்திரம் புள் சீலை பொட்டிலும் ஆறாத புண்ணும் ஆறும்.

<u>சகல வீக்கத்துக்கும் பத்துப் போட</u>:-

மிருதார் சிங்கி நிம்புச் சாற்றிலரைத்துப் போட வீக்கங் கரைந்து போம்.

மூலத்துக்கு:- லிங்கம் விராகனிடை.க, வெள்ளை போட்டிழைத்து மெல்லிய சீலையில் பிரட்டி.யச தண்டு பண்ணி புளியந் தணலில் கலசத்திலிட்டு அதில் வத்தி போட்டுப் புகை ஆசனத்தில் பிடிக்கவும். காத்துப் படாதே புகை பிடிக்கவும். மூலங் கரைந்து போம். பவுத்திரம், ஆசனப் புத்து ஆசனக் கண்டமாலை இவை எல்லாந் தீரும்.

<u>பவுத்திரத்துக்கு</u>:-

அதிமதுரம் விராகனிடை.க, வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.வ இது இர ண்டும் நிம்புச் சாற்றிலரைத்து உளுந்து பிரமாணம் விழுது வாங்கிப் பவுத்திரத்தில் தடவ வீங்கும். உடனே சிறுகீரை வதக்கி அடை தட்டிக் கட்டவும். ங நாள் வாங்கப் போடவும். மூன்று நாளில் வாங்கிப் போம்.

<u>பவுத்திரத்துக்கு எண்ணை</u>:-

நல்லெண்ணை படி.க, கொன்னை வேர்ப் பட்டை நிம்பளவு கோழிக்சாரம் சிறங்கை இதுகள் பொடி பண்ணி வைத்து அந்தி எண்ணையில் போட்டு எரித்துப் பதத் தில் இறக்கி வைத்து அந்தி சந்தி கறண்டி கொள்ளவும். நாள் அரையாப்பு நாபி ரணம், மேகரணம், பவுத்திரங் கொடிப் பவுத்திரம், பக்கப் பவுத்திரம், ஆசனப் பவுத்திரம் இவையெல்லாம் தீரும். பத்தியம் முருங்கையிலையில் உப்பு பிரட்டி வெய்யிலில் உலர வைத்துக் கட்டவும். ஈர முள்ளி நெத்திலி திருக்கை கரு இளங்கீரை பசுவின் நெய், மிளகு கூட்டவும்.

இதுக்குப் புகை:- புளியந் தணலில் ங நாள் இலுப்பைக் கட்டி கண்டங்கத்திரி விதை தலைமயிர் இதுவும் பொடி பண்ணிப் புகை போடப் புழுச் செத்து விழும்.

<u>புண்ணும் பவுத்திரத்துக்கு</u>:-

கருதும்பையிலையாவது ஊமத்தைப் பிஞ்சு சுட்டு அரைத்து அடை தட்டி வெத்தி லையில் வைத்துக் கட்ட மூளையுடன் விழுந்து போம். கை கண்டது.

பவுத்திரத்துக்கு:- 10.8.33.

கெந்தகம் பலம்.க, பசுவின் நெய்யிலரைத்து சீலையில் தடவித் திரி பண்ணி நாழி விளக்கெண்ணெயில் குழம் பண்ணி.அ நாள் கொள்ளவும். பவுத்திரம் புண் மேகம் நாபி ரணம் இவை தீரும்.

ஆழி மூலத்துக்கு புகை:-

வெள்ளுள்ளி பலம்.க, அரப்புக் கட்டி பலம்.க கண்டங்கத்திரி விரை பலம்.க, லிங்கம் விராகனிடை.கெ, கெந்தகம் பலம்.க, கருங்குங்கிலியம் விராகனிடை.க இவை பிரண்டைச் சாறு விட்டரைத்து நூறு குளிகை பண்ணி ஆழியில் விளக்கெண்ணெ தடவிப் புகை போடவும். பத்தியம் வெள்ளாட்டுப் பால் கூட்டவும். ஆழிமூலந் தீரும்.

பிளவைக்கு எண்ணெய்:-

உள்ளி, வசம்பு, கம்பிளிப் பிசின், கருஞ்சீரகம், வெம்பாடம் பட்டை, செங்கத்தாரி, புதகரப்பான் இலை வகைக்கு பலம்.உல குப்பை மேனிச் சாறு நாழி கரிப்பான் சாறு நாழி, நல்லெண்ணெ நாழி, காட்டெருமைப் பால்.ரு இவை கூட்டி எரித்துப் பதத்தில் வடித்து சீலையில் தோய்த்துப் போடப் பிளவை தூரம். கை கண்டது.

பவுத்திரத்துக்கு நல்லெண்ணெ படி.உ, எலுமிச்சம் பழச் சாறு உரி, காயம் விராகனிடை.ரு சித்திர மூலம், திரிகடுகு, திரிபாலை கூட்டி எரித்துப் பதத்தில் இறக்கி கறந்து குடிக்கப் பவுத்திரந் தீரும். கை கண்டது.

பவுத்திரக் கட்டிக்கு:-

பத்து வெள்ளுள்ளி அரைத்து விழுதில் சுண்ணாம்பு கூட்டி மத்திக்க வெண்ணெ போலாம். அப்பொழுது பற்றுப் போடவும். வீக்கம் வீங்கிப் போம். கை கண்டது.

பவுத்திரத்துக்கு நெய் குக்கில் ரசாயனம்:-

குக்கில் பலம். எருமைச் சாணியைக் கரைத்து அதில் சாமம் ஊற வைத்துக் கழுவிப் போட்டு பசுவின் கோமியம் பாலையில் விட்டு வேடுகட்டி அதில் வைத்து எரித்துப் பிறகு உலர்த்திப் பசுவின் நெய்யில் போட்டு திரிகடுகு இலசீரகம், லவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி ஆக மருந்து. பொடி பண்ணி வட்டத் திருப்பி வழுலரிசி தேவதாரம், அத்திக் திப்பிலி, சந்திசாரம், எவச்சாரம், சுக்கு, மிளகு, சதகுப்பை, செவியம், கோஷ்டம், வாலுளுவை, மஞ்சள், வெப்பாலை அரிசி, ஓமம் கொடி கடுகுரோகணி சிவதை வசம்பு, சிறுமூலம், அரத்தை, மஞ்சட்டி அதிவிடயம், சித்தமல்லி இவை வகைக்கு கழஞ்சு.ங எல்லா இடித்துக் கலந்து நல்லெண்ணெ நெய் தேன் மூன்றும் படி.க, சட்டி காய வைத்து நெய் எண்ணெயை விட்டு மருந்து போட்டுக் கிண்டி பிறகு தேன் விட்டுப் பிசைந்து.அ நாள் தின்னவும். இதற்கு குட்டம் பாரு தாமரை வாதம், சூலை மேகம், பவுத்திரம், கிரந்தி சூலை, மேக வாய்வு, மேகசூலை, மூத்திர வாய்வு, சிலனி இவை தீரும்.

கண்ட மாலைக்கு உள்ளுக்கு மெழுக்கு:-

கொடுடன் கிழங்கு உள் சதை, மிளகு பலம்.ரு, வெள்ளுள்ளி பலம்.உ, துளசிச் சமன் அரைத்து ஆயிர மூன்று உருண்டை திங்கள்.ரு உருண்டை, செவ்வாய்.எ உருண்டை, தின்ன வாந்தி வரும். பச்சரிசி கூட்டிக் கொள்ளவும். அவரைப் பருப்பு, நல்லெண்ணெ தெளித்துப் பிரட்டிக் கொள்ளவும்.

உள்மூலம், பிரமூலம், மூளை மூலம் இதுக்கு:-

நீர்ப் பன்னீரிலை உலர்த்தி இடித்து வடிகட்டி சரி மிளகு பொடி கூட்டி வெருகடி கொள்ள.அ நாள் வெளிமூலம். உள்மூலம் மூளை மூலம் இவை தீரும்.

மூலத்தின் மேலெழுந்த ரெத்தக் கடுப்பு, பித்தத்தின் மேலெழுந்த கடுப்பு இதுக்கு மருந்து

கடுக்காய் சுட்டுச் சீலைச் சாம்பல் சரி கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் குழப்பித் தின்னவும் மூன்று நாள். ரத்தக் கடுப்புத் தீரும்.

ஊடல் வாதத்துக்கு:-

  முடக் கொத்தானிலை பிடி.க, உள்ளிப் பல்.ரு, வெளிச்சைப் பிசின் விராகனிடை.ரு; காயம் குன்றி அளவு சுருள்ளி சிறங்கை இவை.ட அரைத்து வறுத்து விளக்கெண்ணை படி.ரு விட்டுச் சிவக்க வறுத்துக் கருகும் எண்ணெயும் தின்ன உடனே ஊடல் வாதம், வயறு வலி குடலேத்தம், மாருநோப்பு, உப்புசந் தீரும். ஏ நாள் தின்னவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

ரத்த மூலத்துக்கும் ரத்தக் கிராணிக்கும்:-

  கொட்டைப் பாசி, குப்பை மேனி, முருங்கை, கருவேப்பிலை சமன் கூட்டிப் பொடி பண்ணித் தேனில் கொள்ள மூலங் கரைந்து ரெத்தமாய் விழுந்து போம். ரெத்த மூலத்துக்குப் படிகாரம் மாடையிடை பொடி பண்ணி பனைவெல்லம் பாக்களவு சற்றே நெய் விட்டு அரைத்து உருட்டி அதில் குழித்துப் பொடி வைத்து உருட்டி நெய்யில் தோய்த்து முழுங்கவும். இரண்டு நேரமும். இதுக்கு ரெத்த மூலம், ரெத்தக் கடுப்பு இரைச்சல், பொருமல் இசிவு, குடல் பிரட்டு குடல் முறுக்கு, குடல் வாதம், கடுப்பு கழிச்சல், வாய்வு பயித்தியம் இது முதலானதுந் தீரும்.

ரெத்தப் பிரமியத்துக்கு:-

  நீர்சுந் தண்ணீரில் சுவாம்.ப உள்ளக் காலமே கொடுக்கவும். பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ஆம அதிசாரத்துக்குத் தொப்புளில் நோகும் இதுக்கு மருந்து:-

  கடுக்காய் இருபது விரை போக்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் வகைக்கு மாடையிடை வசம்பு, சீரா நெல்லி சமூலம் இவை வகைக்கு பணவிடை இவை யெல்லாம் மோ மோர் விட்டரைத்து அடுப்பில் வைத்து பிறகு உரி மோர் கூட விட்டு நன்றாய் கொதிக்க விட்டு இறக்கி வைத்து கறண்டி அந்தி சந்தி கொடுக்கவும். நல்லெண்ணை விட்டு செங் கலோட வைத்து பின்பு கடுக்காயும் அப்படி அரைத்து எல்லாம் மோர் விட்டரைத்து அடுப் பில் வைத்துப் பிறகு உரி மோர் விட்டு நன்றாய் கொதிக்க விட்டு இறக்கி வைத்து கறண்டி அந்தி சந்தி கொள்ளவும். ஆம அதிசாரம் தொப்புளில் வலி இவை தீரும்.

உஷ்ண வாய்வுக்கு:-

  மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளுள்ளி, சமன் கூட்டி இதில் பிடி வெதுப்படக்கி இலை கூட்டி அரைத்துக் கழற் பிரமாணம் உருண்டை பண்ணிக் காலமே தின்னவும். இதுக்கு வயறு பிரச்சம், பொருமல், கழிச்சல், அக்கினி மாந்தம் தீரும். தீபனமுண்டாம். கை கண்டது.

சகல குன்மக்கு:-

  கருதும்பை சமூலம் சூரணம் பண்ணி வெருகடி அந்தி சந்தி இருபது நாள் கொள்ளவும். குளிர்ந்த தண்ணீர் ஒரு வாய் குடிக்கவும். பத்தியம் உப்பு, மோர், தயிர் வாழைக் காய் கூட்டவும். பிறகு உடம்பு பருக்க அமுக்கிரு வேர் பாலில் அவித்துச் சூரணம் பண்ணி சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம் சட்டாக் கலந்து, நெய் தேன் கூட்டித் தின்ன உடம்பு பருக்கும். கை கண்டது.

  இஞ்சி தோல் சீவிப் போட்டு வெயிலில் சற்றே உலர்த்தி நிம்புச் சாறு சாத்திலரைத்து நெய், தேன், சர்க்கரை மட்டாக் கலந்து ஜாடி புடம் வைத்துப் பாக்களவு தின்ன உஷ்ண வாய்வு, பயித்திய வாய்., மலந் தீர்ந்து போனது கை கால் கடுப்பு அரோசிகம், தலை திருப்பு இவை தீரும்.

மூலத்துக்கு நெய்:-

  பசுவின் நெய் படி.க, கொதிக்க வைத்து நாயுருவி பிடி கொதிக்கிற நெய்யில் போட்டுச் சிவக்க வெந்த பிறகு பருத்தி விரை பிடி நருக்கிப் போட்டு சிவக்க விட்டு

எடுத்தப் போட்டுப் பிறகு பருத்தி விரை பிடி நருக்கிப் போட்டு சிவக்க விட்டு எரித்து போட்டு பிறகு உடனே எடுத்துப் போட்டுத் தேசக்கு சாதிக்காய் விராகனிடை.உ, பத்திரி விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை,உ, லவங்கப் பட்டை விராகனிடை.உ சுக்கு விராகனிடை.உ, மிளகுவிராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, திப்பிலி மூலம் விராகனிடை.உ, ரோகணி விராகனிடை.உ எல்லாம் பொடி பண்ணிப் போட்டு இவை இளஞ் சூடாறிவிட்டு, றக்கிக் கறண்டி குடிக்க மூலங் கரைந்து போம்.

<u>மூலக் கடுப்புக்கு:-</u>

உள்ளொட்டி பிறவொட்டி அத்தி நாந் காளி நாரும் அரைத்து உருட்டித் தயி தோய்த்து முழுங்கவும். மூலக் கடுப்புத் தீரும். பேய்ப் பாச்சொற்றியிலை அரைத்து எ யிலாவது வெள்ளையிலாவது உக்கிரை பண்ணி.ரு உருண்டை காலமே.ரு நாள் தின்னவும். மூலக் கிராணி தீரும். கை கண்டது.

<u>சோகைக்கு பாண்டுவுக்கு என்ன கற்பம்:-</u>

கொன்னைப் பட்டை இடித்து வடி கட்டி வெருகடி தேனில் எழு நாள் கொள் சோகை பாண்டு பயித்தியம் வாய்வு வீக்கம் சோகைக் கூட்டம் இவை தீரும்.

<u>சகல மூலத்துக்கும்:-</u>

சீயக்காய் இடித்துச் சூரணம் பண்ணி விராகனிடை.க, உள்ளுக்கு கொண்டு சற்று வெல்லஞ் சற்று பழஞ் சேர்த்து கொள்ளவும். உ விசை பேதியாம். இரண்டு நாள் கொள்ளவும். சகல மூலமுந் தீரும். இச்சா பத்தியம். கை கண்டது.

<u>சகல மூலத்துக்கு:-</u>

கருகு படி.உ, நிம்பு படி.ரு, கருகு தான் பண்ணி பழந் சட்டியில் வைத்து ர சாறு விட்டுப் பிசறிப் பிழிய எண்ணை விழும். இந்த எண்ணெயில் மருக்காரம் காயுரைத்த மூலத்திரந் தொப்பிளிருந் தடவ இருக்கு உள்மூலம், பிறமூலம், முளை மூலம் இவை விடு போம்.

பெருமரப் பட்டை இலை வகைக்குப் படி, எருமை மோர் படி.வ, விட்டுத் த ரப் பிழிந்து வைத்து தவர்க் கனிப் பாக்கு நாளுமென்று தின்று அதின் மேல் மருந்து குடி அதின் மேல் நாலு பாக்குத் தின்று இறக்கவும். அதின் மேல்.க துவரை அவித்துத் தின்ன பத்தியம் பாக்கு, வெற்றிலை, புகையிலை விடவும். வெள்ளீருஞ் சோறும் உண்ணவும். ட ரு நாள் மறு பத்தியம் மூன்று நாள் தலை முழுகி ஆணுக்குச் சாவல் பெண்ணுக்கு பெட கோழை ஆக்கின் கறி தானே தின்னவும். ஐக்காக் கறி அப்பாலே கொடுக்கவும். இரத் மூலம் மூல வாய்வி முளை இவை தீரும். நீருங் கரைந்து போம். மூலச் கிராணி துவரை அவித்துத் தண்ணீர் குடிக்கவுந் தீரும். கை கண்டது. நாலா முறைக்கு இதே மருந்து செ ய்யவும்.

<u>கிராணிக்கு:-</u>

சுக்கு மாதுளையிலை உளர்த்தி வறுத்துப் பொடி பண்ணி விராகன்.ய அபின் விராகன்.

சித்த மூலி விராகன்.உரு அதிவிடையம் விராகன்.க, சித்த மூலி விராகனிடை.உரு, அதி டையம் விராகனிடை.க எல்லாம் பொடி பண்ணிக் கலந்து பு உக்கிராணி தீரும்.

ரசம் உ, கெந்தகம்.அ, கூட்டி நிம்புச் சாற்றிலரைத்து விராகனிடை.ச, பிரத் தகட்டில் பூசிக் கலசத்திலிட்டுச் சில்லு மூடி சீலை மண் செய்து கெசபுடமிட பற்ப ஆறு விட்டு எடுத்துப் பொடி பண்ணிச் சிந்துமூலம் இந்துப்பு சாள் பண்ணி இஞ்சிச் சாறு கலந்து குன்றியிடைப் பிரமாணம் இடவும். இல்லா விட்டால் விளக்கெண்ணை தேன் இந்து காயம், சீரகம், கூட்டிப் பற்பங் குன்றிடை இதுக்கு வாய்வு வாய்வு சூலை பக்க சூலை உதாசூலை ஆம சூலை, பரிஜம சூலை, வாதம், சிலேத்துமமுந் தீரும். கலங் கொம்ப பொன் பற்பம் தேனும் நெய்யுங் கலந்த பற்பங் குன்றியிடை இடச் சூலை சகல குன்மமு தீரும். கை கண்டது.

தீரும்*

<u>சீய்க் கிருமிக்கு:-</u>

கருவேப்பிலை பலம்.ருய, மோரில் போட்டுக் காச்சிப் பிழிந்து இரத்தக் கொண்டு நல்லெண்ணை படி.உ, கூட்டிக் கலந்து இதில் சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சிறுதேக்குக் காட்டாத்திப் பூ, சீரகம், வெப்பாலை அரிசி, பெருமரப்பட்டை, விளாம்பிசின், இலவம் பிசின், ஏலம், லவங்கம், கிராம்பு, காயம், கழற்பருப்பு வகைக்கு.உ எடை கூட்டி கருவேப்பிலை தண்ணீர் விட்டரைத்து எண்ணெயில் கலந்து எரித்து கருகு திரன் பக்குவத்திலிறக்கி வைத்து உடல் சருவாங்கமும் இட்டு உள்ளுங் கரண்டி கொள்ளவும். இரண்டு நேரமுங் கொடுக்க.யஉ நாள் கொள்ள மூன்று நாளைக்கொரு காதில் தலை முழுகவும். பத்தியம் கொடி வறுகல், நகாய் துவரை, வாழைக் கச்சல், வேப்பம் பொடி கூட்டவும். தீரும் வியாதி கிருமி, சீய்க் கிருமி என்சப்பட்டது மூலம் அதிசாரம் இவை யெல்லாந் தீரும்.

<u>தீல் வாதத்துக்கு எண்ணெ:-</u>

மலை கலக்கி வேர்ப் பட்டை நல்லெண்ணெயில் உள்ளி வசம்பு கூட்டிக் கருக்கி கரப்பு திரமானவுடனே இறக்கி உள்ளுக்கு இரண்டு காசிடை கொடுத்து காதுக்கு சத்து யி விட்டுப் பிடிக்கவும். தீல் வாதம் தீரும். மூலத்துக்கு அந்திர தாமரை மேனி மருக்கை கருவேப்பிலை கூட்டிச் சூரணம் தேனில் கொள்ள மூலங் கரைந்து போம்.

<u>வெருகந் தயிலம்:-</u>

வெருகன் கிழங்கு பலம்.ஙய, சிறுக நறுக்கி.ச தண்ணீர் விட்டுக் காடி.ச கூட்டி மதுந்த போட்டுக் காய்ச்சி ஆறல் அரக்கு பலம்.ரு னால் பஞ்சி .ச நீரில் போட்டு உ-ஆய்க் காய்ச்சி தயிர், நீர் எண்ணைபடி.தெ எல்லாங் கலந்து அரத்தை சதகுப்பை மரமஞ்சல், மஞ்சள், சந்தனம், இந்துப்பு, ரோகணி, மதுரமும், மஞ்சட்டி, தற் கோலம்; ஏலம், லவங்கப் பட்டை, பத்திரி, நாகப்ப, அமுக்கிரு, தேவதாரம், வேர்ப் பட்டை, சிறு விளா வேர்ப் பட்டை வகைக்குப் பலம். எல்லாம் பாலிலரைத்துக் கரைத்துக் குழ் போலே வைத்து முன்றி எண்ணெ காய வைத்து காயச்செ இதை விடவும். எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் காலமே சிறு கரண்டி கொள்ளவும். மேலுக்குச் சருவாங்கமும் பூசவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். தன்டுக் கீரை பருப்பு ஆகாது. இந்தச் சாறு வெள்ளாட்டுக் கறியாகும். அஸ்தி சுரம், உள் காச்சல் பழஞ் சுரம் இவை தீரும்.

<u>வெருகெண்ணை:-</u>

வெருகன் கிழங்கு பலம்.எ, விடத்தலை காந்தி, சித்தாமுட்டி, சீந்தி வில்வவேர் சாறணை அமுக்கிரு இவை வகைக்கு பலம்.ரு எல்லாங் கூட்டி இடித்து இடங்கழி நீர் விட்டுக் குழியாய்க் காய்ச்சி இதில் மஞ்சள் அதிமதுரம், தேவதாரம், மஞ்சட்டி சந்தனம், விலாமிச்சம், நன்னாரி, அரத்தை, வசம்பு, கோஷ்டம், ஏலம், லவங்கம், நாகப்ப, கஸ்தூரி மஞ்சள் இருவேலி, முத்தக்காசு, அமுக்கிரு, சித்தாமுட்டி இவை வகைக்கு பலம்.ச, அரைத்துக் கரைத்து தயிர் தண்ணீர்.உ எண்ணெ குமரி கலந்து சுண்ட நாள் மந்தாக்கினியில் எரித்துப் பதத்தில் வடித்து உள்ளுக்கு அடித்து மேலும் பூசவும். கற்றிகச் சுரம், திரிகாயச்சுரம், சீத சுரம், /அஸ்திசுரம், சருவ சுரமுந் தீரும்.

<u>வெருகு லேகியம்:-</u>

வெருகங் கிழங்கு காடியில் வித்து உலர்த்தி பலம்.ய இடித்து தாளி பஞ்சி லவங்கப் பட்டை பத்திரி, நாகப்பூ, திப்பிலி மூலம், சித்திர மூலம், செவியம், சீரகம் வகைக்கு பலம்.க சர்க்கரை பலம்.அ இடித்துக் கலந்து தட்டிட தேன் நெய்யில் கொள்ள வெண்ணீரில்.சஉ.நாள் இருமல் மேல்ச் சுரம், காசம், பாண்டு காமாலை பயித்தியம் வாய்வு, சேற்பமம், குன்மம், சேற்பமம், அதிசாரம், அஸ்தி சுரம், சத்தி குன்மம், அரோசிகம், சிரோவாய்வு, மூர்ச்சை இருமல் பயித்தியம் அதி

சாரம் மேகம்.உயக, அக்கினி மாந்தம் சகல ரோகமுந் தீரும். இச்சா பத்தியம்.

<u>வெருகு லேகியம்</u>:-

வெருகன் கிழங்கு சமூலம் நருக்கிப் பாலையிலிட்டு பச்சரிசிக் கழுநீர் தண்ணீர் ஞானி விட்டு எட்டில் காய்ச்சி இறக்கி வெல்லம் பலம்ஐயச போட்டுக் காய்ச்சி இதில் திரிகடுகு திரிபாலை, லவங்கப் பட்டை, பத்திரி, சீரகம், எலம், நாகப்பு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், அமுக்கிர வேர், மதுரம், சிவதை ஞக்கக் காச, செவியம், சித்திர மூலம் வகைக்கு புலம்.க இடித்து வடிகட்டி முன்பாகம் போட்டு மூன் காயத்தில் வெல்லம் போட்டு இந்தத் தாள் போட்டுக் கிளரி மட்டாய் நெய் விட்டு இறக்கிக் கொள்ளவும். இது வெருகடி தின்ன அஸ்தி சுரம், பயித்திய வாய்வு, பாண்டு, சுவாச காசம், சத்திதோஷம், அதிசாரம், ஆழல், பயித்தியம், பயித்திய ஞலை இவை தீரும்.

<u>வில் வெருகுச் சூரணம்</u>:-

வெருகன் கிழங்கு காடியில் ஒரு நாளுறப் போட்டு உலர்த்தி லவங்கப் பட்டை லவங்கப் பத்திரி, எலம், நாகப்பு, திப்பிலி, மூலம், செவியம், சித்திர மூலம், சீரகம் அமுக்கிரு வேர் வகைக்கு பலம்.ஐ எல்லாம் சூரணம் பண்ணிக் கலந்து விராகனிடை.உ, அந்தி சந்தி.சய நாள் தின்னவும். இதுக்கு அனுபானம் தேன், நெய், வெந்நீர் இதில் கொடுக்கவும். இதுக்கு இருமல் மேலிசு சுரம், காசம், பாண்டு, காமாலை, பயித்தியம் வாய்வு, சேஷ்டும குன்மம், சேஷ்டும அதிசாரம், அஸ்திசுரம்; சத்தி குன்மம், அரோசிகம், சிரோவாய்வு, % தீரும்.

மூர்ச்சை பயித்தியம் அதிசாரம், அக்கினி மந்தம், மேகம்.உக தீரும். இச்சா பத்தியம்.

<u>அஸ்தி சுரத்துக்கு பாசித் தயிலம்</u>:-

வெருகங் கிழங்கு பலம். நலைச்சு பதக்கு காடி வார்த்து அடுப்பில் வைத்து நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு எண்ணெய் படி. பசுவின் பால் படி.ச கூட விட்டு கருஞ்ரோகணி கண்டு பறங்கி, மரமஞ்சள், கோஷ்டம், தேவதாரம், சுக்குத் திப்பிலி, விளங்கம், தக்கோலம் புட்டி அமுக்கிர வேர் வகைக்கு பலம். இடித்து வடிகட்டி எண்ணெயில் கலந்து வைத்த அரக்கு பலம்.ச இடித்து அரிசி தண்ணீரில் போட்டு இருநாழியாகக் காய்ச்சி இறக்கக் கூட வைக்கவும். அடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்திறக்கி வைக்க இது பழங் காச்சலுக்கு ஆகும். எலும்பு பக்கின சுரம், அஸ்தி சுரம் உளைப்பு, நீர்க்க, குளிர் காச்சலுக்கு இவை யெல்லாத்துக்கும் மேலுக்கும் ஆகும். உள்ளுக்குமாம். இந்தப்படிக்கு அமுக்கிர சமூலமும் கஷாயமும் கட்டினால் அது அசுவ கெந் தாதித் தயிலம் என்பார்கள்.

<u>நிலாவாரைச் சூரணம்</u>:-

நிலாவாரைப் பொடி பலம்.ச, சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி வகைக்கு பலம்.க, நாவத் சந்தே வத்து எல் பண்ணி கலந்து சர்க்கரையாபவது புட்டியாவது அரைவாசி கட்டி வெருகடி கா மே கொள்ள மலசுத்தியாம். சகல வாய்வு, அக்கினி மந்தந் தீரும். தீபனமுண்டாம். கை கண்டது. பசுவின் பால் சிறங்கை சந்திர வேதி பல.க கட்டிக் கொடுக்கவும். உடம்பு வெட்டை தீரும். தீபனமுண்டாம். கை கண்டது. பசுவின் பால், சிறங்கை சாத்திர வேதி பலம்.க, கட்டிக் கொடுக்க உடம்பு வெட்டை தீர்த்து பருக்கும். வெருகந் தண்டு இலை தலைத்த காடி.உ தண்ணீர்.உ இதில் அவைத்த மருந்தைப் போட்டு.உ ஆழாக் காய்ச்சி வடித்து இதில் கிழங்கு விளாங்காயளவு, அரைத்துக் கரைத்து எண்ணெய்.உ வெள்ளாட்டுப் பால்.உ விட்டுக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்துக் காசளவு உள்ளே கொடுக்கவும். உ காலவு உடம்பில் பூசச் சுழல சுரமும் வீக்கமுந் தீரும். கை கண்டது.

<u>வெருகெண்ணெய்</u>:- நல்லெண்ணெய் படி.உ, வெருகங் கிழங்கு பாலிலரைத்து விளாங்காயள

பால்.உ. விட்டு எரித்து காடி.உ. விட்டு எரித்த தயிலம் மெழுகு பதத்திலிறக்கி பஞ்ச திரவியம் விராகனிடை.ரு பொடி போட்டு மூடி வைக்கவும். இந்தத் தயிலம் தலைக்கும் இட்டு உடம்புக்கும் இட்டு முழுகிப் போடவும். பிறகு.ரு நாள் உடம்புக்கு சாயுங்காலம் தாளிக் கடைச்சுப் போடவும். ரு நாள் தலைக்கு இட்டு உடம்புக்கும் பூசித் தலை முழுகிப் போடவும். இப்படிச் செய்ய அஸ்தி சுரம் வெட்டை இலைச் சரீரம் சுகம்.

<u>உள் வெக்கைக்கு, விடாச் சுரத்துக்கு:-</u> 17.8.63

நெல்லி முள்ளி, பொன்னாங்காணி வேர், வெள்ளரி விரை இவை வகைக்கு கழஞ்சு மூலைப்பால்.உ நெய் படி.உ, எல்லாம் அரைத்துக் கட்டிக் கலந்து எரித்து பதத்தில் வடித்துக் கழஞ்சு தின்ன மேகம் பசு வெக்கை விடாச் சுரம், வரட்சி, உடம்புலைத்தல் இவை தீரும்.

<u>வெருகுத் தயிலம்:-</u>

வெருகங் கிழங்கு பலம்.உய நசுக்கி பதக்கு காடி வார்த்து.சக ஆகக் காய்ச்சி இறுத்து நல்லெண்ணெய்.ப பால் ஊறாறி கட்டி இதில் ரோகணி கிடேக்கு மரமஞ்சள், ரேணுகம், தேவதாரம், ஆனைத் திப்பிலி, விளங்கம், தக்கோலம், அமுக்கிரா இவை வகை ஒன்றுக்கு பலம்.வ இடித்து வடிகட்டி எண்ணெயில் கலந்து அரக்கு பலம்.உ இடித்து.வ தண்ணீரில் போட்டு.உ யாய்க் காய்ச்சி இறுத்து கூடக் கலந்து அடுப்பில் வைத்து எரித்து மெழுகு பதத்தில் இறக்கி இறுத்து வைத்து இந்த தயிலம் பழங் காச்சலுக்கும் எலும்பில் பற்றின சுரத்துக்கும் அஸ்தி சுரத்துக்கும் பழைய வியாதி உளைப்பு, சூலை, அனிலுங் காச்சலுக்கும் இது எல்லாத்துக்கும் மேலுக்கும் பூசி உள்ளுக் கொடுத்து இந்தப் படி அமுக்கிரா சமூலம் கஷாயமிட்டுக் கூட்டி ஆல் அரை கெந்தாதி தயிலமென்பது.

<u>வெருகெண்ணெய்:-</u>

வெருகங் கிழங்கு பலம்.ருய நசுக்கி இடித்துப் பதக்கு நீர் விட்டுக் கலந்து நாழியாய்க் காய்ச்சி இதில் நல்லெண்ணெய்.உ கலந்து இதில் அரத்தை கிடேக்கு, கர்க்கடக சிங்கி, கடுகுரோகணி, வெட்பாலை அரிசி, கொத்தமல்லிவிதை, திப்பிலி, ஏலம், லவங்கம், அதிமதுரம், கோஷ்டம், அரக்கு, சதகுப்பை, விளாமிச்சி இவை வகைக்கு விராகனிடை.உ கட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்த எண்ணெய் விட்டொரு நாள் உடம்பில் பூசவும். விடு சுரம் தீரும். அரக்கு இடித்துக் கலனி நீரில் போட்டு.உ ஆகக் காய்ச்சி நல்லெண்ணெய்.உ தண்ணீர் அமுக்கிரா மஞ்சள், கோஷ்டம், தேவதாரம், கோரைக் கிழங்கு, அரத்தை, செவியம், ரோகணி, சந்தனம், உத்தாமணி வேர் மதுரம் வகைக்கு பலம்.ரு எல்லாம் இடித்துத் தண்ணீர் விட்டு விளக்குப் போலே எரித்துமெழுகு பதத்தில் வடித்து மேலும் பூசி அந்திக்குச் சீலையாலே அடைத்து விடவும். இதுக்குச் சகல காச்சலுங் காசரோகமும் தீரும்.

<u>மேலெண்ணெய்:-</u>

அதிமதுரம், கோஷ்டம், சுக்கு, அரத்தை, பெருங்குரும்பை, மரமஞ்சள், மஞ்சள், மஞ்சட்டி, ரோகணி, சந்தனம், அமுக்கிரா வேர், நன்னாரி வகைக்கு கழஞ்சு.க மோர்படி.ரு வார்த்து அரைத்து எண்ணெய்,தெ புகட்டி வடித்து உடம்புக்கிட பழ வெதுப்புத் தலைவலி ரோக்காரு மிருகுந் தீரும்.

அவரிக்கு வேட்டுக் கருப்புக் கட்டித் தின்ன நாபிக்கு நெரி கிடக்கும் பாடுநாளம் ஏக்கும் சிறுகீரை சமூலம் சாறு குடிக்கவும்.

<u>வெருகுத் தயிலம்:-</u>

வெருகங் கிழங்கு அரைத்து விழுது விளாங்காயளவு நல்லெண்ணெய் படி.க, அதில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொதியடங்கின பிறகு பஞ்ச திரவியம் வகைக்கு விராகனிடை.க கட்டி அரைத்து சந்தத் தாளி எண்ணெயில் போட்டு

வேருகட்டி வைத்துக் கொண்டு நடுக்கலுக்கு நாது முறுக்கு முழுகவும். நடுக்கம் மாறும். பீனிசத்துக்குத் தலைக்கு தேய்த்துக் காதிலும் விட்டு பஞ்சிலடைக்கவும். சூசிக வாய்வுக்கு ய முழுக்கு முழுகவும். உடம்பு தேறும். அஸ்தி சுரம் தீரும்.

<u>செகதேவி எண்ணை:-</u>

நல்லெண்ணை படி.க, நெய்ச் சட்டி சமூலம் தவைத்து வடிகட்டி படி.க, ஏலம் பலம்.3/8, லவங்கப் பட்டை பலம்.3/8, அதிமதுரம் பலம்.3/8, கோஷ்டம் பலம்.3/8, செண்பகப்பூ பலம்.3/8, நெய்தல் கிழங்கு பலம்.3/8, வெட்டிவேர் பலம்.3/8, விலாமிச்ச வேர் பலம்.3/8, நன்னாரி வேர் பலம்.3/8, முத்தக் காசு பலம்.3/8, சந்தனம் பலம்.3/8 ஆக மருந்து.யக-ம் நெய்ச் சட்டிச் சாறு விட்டு அரைத்து.க நாள் சூரிய புடம் வைத்து மறுநாள் மெழுகு பதத்தில் வாத்துத் தலைக்கு ஒட்டு முழுகவும். இதனால் காசம், க்ஷயம், உள்க் காய்ச்சல், இருமல், வறட்சி மேக வகை என்னப் பட்டதெல்லாம் தீரும். ஒன்றை விட்டொரு நாள் முழுகவும். இப்படி அ நாள் முழுகவும். அப்புறம் அ நாளைக் கொருக்கால் முழுகவும். இதை .உ.தை மூற்றி விற்றை:-

இதனால் சூசிக வாய்வு, கிரானி, குன்மம், செவியம் இவை தீரும்:-

பிரண்டைச்சாறு படி.க, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், அரத்தை, நாகப்பூ, வால்மிளகு காட்டாத்திப் பூ, பெருமரப்பட்டை, முத்தக் காசு, பற்படகம், கம்பிப் பிசின், சாதிக்காய், சாபத்திரி, கிராம்பு, ஏலம், தாளிசபத்திரி, மஞ்சள், காசம், அபின், வசம்பு, சிறுதேக்கு, ஓமம் வகைக்கு பலம்.ய இதற்கு நாலத்தொன்று கஞ்சா இதற்கு.கரு பங்கு பழைய வெல்லம் இதற்கு ரெட்டிப்பு பிரண்டைச் சாறு வெல்லங் கூட்டிப் பாகு காய்ச்சிக் கறண்டியில் எடுத்து ரம்பி முத்த போது சூரணம் போட்டுக் கிளறித் தாளிக்காய் அளவு தின்ன சூசிகா சுரம், கிரானி, கழிச்சல், வாய்வு, க்ஷயம், குன்மம் இவை தீரும். பத்தியம், காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>சூசிகா கிரானிக்குச் சூரணம்:-</u>

திரிகடுகு விராகனிடை.உ, காயம் விராகனிடை.உ, சாதிக்காய் விராகனிடை.உ. ஓமம் கிராம்கை எல்லாம் கிருசம் பண்ணிப் பொரி செய்து இதற்கு நிகர்ச் கொவிற புடமிட்டு சித்தமுலி இதற்கு நாலத்தொன்று பனைவெல்லங் கூட்டிக் கலந்து வைத்துக் கொண்டு அசனம் பண்ணிப் படுக்கிற போது காசளவு தின்னவும். இதனால் மூல வாய்வு, மூலக் கிரானி இரைச்சல், பொருமல், கழிச்சல், அக்கினி மந்தம், பசி அற்றாது, சூசிகக் கிரானி இவை தீரும். கை கண்டது.

நல்லெண்ணை படி.க, பசுவின் தயிர் படி. காசுக் கட்டி பலம்.ச, கூட்டி அடுப்பில் வைத்து எரித்துக் காய்ச்சி மணல் பதத்தில் இறக்கிக் காசுக் கட்டி வடிக் கட்டி போடவும். இதற்கு பிள்ளை பெற்ற வயற்றில் அடிவயிறு வீக்கம், கால் முகம் வீக்கம், அக்கினி மந்தம் இதற்குக் கறன்டி உள்ளுக் கொடுத்து மேலும் பூசவும். தலைக்கு இந்த எண்ணை தேய்த்து உசிலம் பட்டை இட்டு முழுகவும். பத்தியம் துவரம் பருப்பு வைத்துக் கூட்டவும். உப்புக் கூட்டவும். புளி சுட்டுக் கூட்டவும்.

மலை கலச்சி வேர் அரைத்துக் கொட்டைப் பாக்களவு பசுவின் பாலில் காலமே கூ நாள் கொடுக்க வயறு பேதியாம். இதற்கு சூசிக வாய்விலே எடுத்த சால், கை முடக்கம், கால், கை எரிவு இவை தீரும். கை கண்டது.

<u>சூசிக வாய்வுக்கும், இருப்பு நோவுக்கும்:-</u>

கழற் பருப்பு பலம்.உ, படிக்காரம் பலம்.உ, வெங்காரம் பலம்.உ, திப்பிலி பலம்.உ, கடுக்காய் பொடி பலம்.உ, எருக்கு வறுத்த பொடி பலம்.உ, சுக்கு பலம்.உ, பெருங்காயம் பலம்.உ, ஓமம் பலம்.உ பனைவெல்லம் பலம்.ய, இவையெல்லாம் சூரணம் பண்ணித் தின்னவும். இதற்கு சேகக்கட்டு, உடல் வாதம், குன்மம், கர்ப்ப நோவு, சூதக வாய்வு இவைகள் தீரும்.

அக்கினி முகச் சூரணம்:-

அக்கினி முகச் சூரணம்:-

ஓமம், விளங்கம், பஞ்ச லவணம், திரிபாலை, மிளகு, திப்பிலி மூலம், செவியம் இருசீரகம் கோஷ்டம், அத்திக் திப்பிலி, சிறுதேக்கு வெடிசாரம், வசம்புச் சரி வகைக்கு பலம்.௧, காயம் விராகனிடை.ரு இவை இடித்து வடிகட்டி இதற்குச் சரி பழைய வெல்லம் கூட்டிப் பிசைந்து பாக்களவு தின்ன அக்கினி மாந்த மலபந்தம், சூலை, சுவாச காசம், மூல வாய்வு இவையெல்லாந் தீரும்.

இருப்பு நோவுக்கு:-

வெருகன் கிழங்கு விதைம், நிம்பளவு, பழங்கலரிசி, சிறுங்கை நெல்லத் சிறு நிம்பளவு.௨ அரைத்து நல்லெண்ணெயில் கரி பண்ணி தின்னத் தீரும். இது கண்டது.

சூசிக வாய்வுக்கு எண்ணை:-

ஆசி கழற்சியின் பருப்பு இன்று கூடிய வெங்காரம், உள்ளி, கோமுத்திர அரைத்துக் கூட்டி கொண்டு உள்ளுக்கு முறையும் போதை அழித்திட எந்த வயதிலும் சூசிக வாய்வு பேருத் தழைத்திட நல்லோர் சொன்னதாலிது கண்டு கொள்ளே.

இருப்பு நோவுக்கும் சூசிக வாய்வுக்கும்:-

நற்தென்னை வகைக்கு.தெ, கற்கம், வசம்பு உருக்கிப் போட்டு வெள்ளுள்ளிப் பூண்டு.௫, மிளகு பிடி.க, திராய் வேர்.௧ நறுக்கிப் போட்டு எரித்துப் பொன்னிறத்தில் இறக்கி கருகு வட அரைத்துக் கலந்துட்டிடை.உ அந்தி சந்தி.௩ நாள் கொள்ளவும். மேலும் பூசவும். இதற்குச் சூசிக வாய்வு, கைகால்வலி, சுருக்கு சருக்கென்ற குத்தல் இவை யெல்லாந் தீரும்.

நல்லெண்ணை படி.தெ, வேனி பிடி.க, காயம், திப்பிலி, சிரம்பு, சுக்கு, கடுகு, வெள்ளுள்ளி, பழசுவெல்லம் கூட்டிக் கருகு பண்ணித் தின்னவும். வயிறு கழியும். ரத்தக் கட்டு விடும். வயிறு வலி எடுத்தால் தேங்காய்ப் பாலில் நொச்சிக் கொழுந்து காயமும் அரைத்துக் கரைத்துக் காய்ச்சிக் கொடுக்க வலி தீரும். பிராணாதாரமும். வெங்காரம், சீனக்காரம், ஒட்டடை, சுண்ணாம்பு, எள்ளுக் கருவிழ தண்ணீர் வகைக்கு பணவிடை கட்டிக் கொடுக்க மூன்று நாளில் பிரசுவாள்.

சூசிக வாய்வு உதிரக் கட்டுக்கும்:-

புட்டு வெல்லம்.ரு, தென்னம் வட்டு.உ, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், உள்ளி, திப்பிலி மூலம் வகைக்கு பலம்.௫ காயம் விராகனிடை.ரு எல்லாம் வறுத்துப் பொடி பண்ணி பிறகு குப்பை மேனிச் சாறு படி.தெ நாரத்தையிலைக் கசாயம் படி.தெ இது இரண்டுங் கலந்து முன் வெல்லம் போட்டுப் பாகு காய்ச்சிப் பாகு பதத்தில் மூன்று சரக்கும் போட்டுக் கிளறி எண்ணை படி.தெ, நெய் படி.தெ, விட்டுக் கிளறிக் கொட்டப் பாக்களவு வயிறு வலி வயிற்று ரெத்தக் கட்டி கண்டு நோவு சூசிக வாய்வு இவை தீரும்.

அழுஞ்சிப் பட்டை பலம்.க சீரகம் விராகனிடை.க கருஞ்சீரகம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, லவங்கம் விராகனிடை.ச, சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, சக்கரை விராகனிடை.ரு, தேன் பலம்.க இவை இடித்துப் பிசைந்து கழற் பிரமாணம் தின்ன இதற்கு சூசிக வாய்வு வயிற்றுக் கட்டி இவை தீரும்.

சூசிக கிராணிக்கு:-

ஆசு கழற் பருப்பு பலம்.உ, மிளகு, திப்பிலி, சுக்கு, ஓமம், வெள்ளுள்ளி இவைகள் வகைக்கு பலம்.க எண்ணெயில் வறுத்து அரைத்து பனை வெல்லங் கூட்டி அரைத்து கழற்றளவு தின்ன இதற்குச் சூசிக வாய்வு; கிராணி, கழிச்சல், பொருமல் இரைச்சல் இவை தீரும்.

சூசிக வாய்வுக்கு:-

வேப்பெண்ணை படி.க, பெருங்கொட்டைக் கிழங்கு அரைத்து ஒட்டைச் சீலையில் மென்சு விசை பிடிப்பித்து உலர்த்தி அதில் நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை.ஙு பொடி பண்ணி சீலை நடுவே பரப்பி உருட்டித் திரிபண்ணி வேப்பெண்ணை விட்டு மரணம் பண்ணி விளக்கில் கொளுத்திறுல் தயிலம் விழும். அந்த எண்ணை காசிடை அபானத்தில் அந்தி, சந்தி.யஉ நாள் கொடுக்கவும். பத்தியம் வெள்ளருள் சோறம். இதுக்குச் சூசிக சன்னி வாய்வு கையில் விரலில் கால் விரலில் சுழக்கு கரக்கென்ற குத்தகிறதும் சூசிக கிரனி அக்கினி மந்தம், கை காலெரிவு, கால், கை கடுப்பு இவை தீரும். பத்தியம் வெள்ளருக் சோறம்.

சூசிக கட்டிக்கு:-

கெந்தகம் பலம்.க, வெள்ளுள்ளி உரிச்ச பருப்பு பலம்.ச, கோழிமுட்டை, வெள்ளைக் கருவெல்லாம் அரைத்துக் கலந்து தண்ணீர் குத்தி இந்த மருந்தைப் போட்டுக் காய்ச்சித் தயிலம் ஆகும். இது புற தொடுக்க குன்மம், வயசு கட்டி, சூசிக வாய்வு இவை தீரும்.

சூசிக வாய்வுக்கு சவுபாக்கிய சுண்டி:-

சர்க்கரை பலம்.ள, இஞ்சி பலம்.ஙய தண்ணீரில் ஊறப் போட்டு மேல்ப் புற ணியில் கல்லில் தேய்ச்சுப் போட்டுச் சிறுகச் சிறுக நறுக்கிச் சுண்ணாம்புத் தண்ணீரில்.ஙய நாழிகை ஊறப் போட்டு ராத்திரி எடுத்து உலர்த்தி மறநாள் கோமூத்திரத்தில் ஊறவும். மறநாள் கரிப்பான் சாற்றில் ஊறப் போடடவம். மூனை நாள் முசுமுசுக்கைச் சாற்றில் ஊறப் போடவும். மறநாள் இஞ்சி கிடையாவிட்டால் சுக்கு பறனி சீவிப் போட்டு இந்தப்படி பண்ணவேம். மறநாள் நொச்சிச் சாற்றில் ஊறப் போடவும். இந்தப்படி பண்ணி அப்புறம் நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு பிறகு, சுக்கு, லவங்கப் பட்டை, ஏலம், நாகப்பூ, திப்பிலி, கிராம்பு,, கருஞ்சீரகம், சீரகம், மிளகு, விளங்கம், திப்பிலி மூலம், சித்திர மூலம், ஓமம் வகைக்கு பலம்.உ இடித்து தாள் சூரணம் பண்ணி சிறுதேக்கு கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, வில்லப் பால் மரக்கால்.க, தண்ணீர் படி.ஙு தண்ணீரும் பாலும் கலந்து காய்ச்சி.சக ஆவவாறே சர்க்கரை போட்டுத் துளாவிக் காய்ச்சி பிப்பி போக வடிகட்டி திரும்பி அடுப்பில் வைத்துப் பாகு பதத்தில் தொட்டால் கம்பி போலே வரும். எல்லாங் கொட்டி வேக வைத்த மணப் பதத்தில் உடனே இறக்கி தேன் படி.கஐ, நெய் படி.தெ விட்டுக் கிளறிக் கொள்ளவும். இது விராகனிடை.உ கொள்ளவும். வாய்வு அடிபடும். கிரனி கழிச்சல், இருமல், கால் முகம் வீக்கம், அஸ்தி சுரம், உள்க் காச்சல், மேக வெட்டை, வலி குன்மம், சோகை, காமாலை இவை தீரும். கை கண்டது.

சவுபாக்கிய சுண்டி:-

ஏலம், வெப்பாலை, அரிசி விளங்கம், திப்பிலி, திப்பிலி மூலம், மிளகு, சீரகம் ஓமம், கரிப்பான் பொடி கிராம்பு கரிய போளம் வகைக்கு பலம்.வ, சதகுப்பை பலம்.யஉ கடைச் சரக்கு மாத்திரம் இடித்து வடிகட்டி இரண்டு படி பசுவின் பால் சூரனி காய்ச்சி இந்தக் கடைச் சரக்கும் மருந்தும் போட்டு இருப்புக் கரண்டியால் கிண்டி லேகம் போலே மெழுகு பதத்திலிறக்கிப் பாக்குப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு காலை, மாலைக்கு நேரத்துக்கு ஒரு உருண்டை.யக நாள்க் கொள்ளவும்.

மகாசாரடியம்:-

சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், எருக்கம் வேர்பட்டை, கண்டங்கத்திரி, சமூலம், மூக்காவலை வேர், சாறணை வேர் இது வகையும் கட்டிப் பெரும்படியா இடித்து வெருகடிப் பிரமாணம் சட்டியில் போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு கால் படியா இறக்கி உருண்டை திம்ச இந்தக் கசாயங் குடிக்கவும். கரிய போளம் பசுவின்

நெய்யில் போட்டுக் காய்ச்சிப் பொங்கிப் போலே எடுத்து ஊற பண்ணி மருந்தில் கூட்டவும். இதுக்குத் தீரும் வியாதி.

சூசிக வாய்வுக்கு சூசிகக் கிழிக்கு:-

சூசிகப் பொருமல், நளிர், கைகாலெரிவு, குத்துக் கடுப்பு, விடபாகம் அக்கினி மந்தம், அம்மிக் குழவி போலே கிடக்கிற சூசக வாய்வுஞலே வந்த வியாதிகள் விடபாகம் பாண்டு இவை தீரும். பத்தியம் உப்பு வறுத்து நச்சுப்புக் கூட்டவும். இளங் கீரை துவரை முருங்கை பசுவின் பால், நெய கூட்டவும். வேப்பெண்ணை, புங்கெண்ணை, விளக் கெண்ணை, நல்லெண்ணை வகைக்கு உரி, கற்கம். காசுக் கட்டி பலம்.3/ , பெருங்காயம் பலம்.3/8, உள்ளி பலம்.ஙு, கருஞ்சீரகம் பலம்.3/8, சீரகம் பலம்.வ கார்போகத்தரிசி வலம்.வ, விளங்கம் பலம்.வ, ஓமம் பலம்.உரு, மூக்காவணை வேர் பலம்.வ கண்டங்கத்திரி வேர் பலம்.வ இவை யெல்லா இடித்துப் போட்டு சாற்றிரா ற வைத்துக் காய்ச்சி தெளிந்த வரச்சே இறக்கி வைத்துக் கொள்ளவும். கரண்டி காலமே ஙு நாள் கொள்ளவும். உடம்பு, கால், கைகளுக்கு இட்டுப் பிடிக்கவும். இதுக்கு சூசிக வாய்வு, சன்னி, கை கால் மூடக்கம், குத்துகிறது கடுப்பு இவை யெல்லாந் தீரும். கை கண்டது. பத்தியம் கார்ப்பு, புளிப்பு, உப்புத் தவிர்க்கவும்.

சூசிக வாய்விலெடுத்த மூடக்கத்துக்கு:-

மலை கலக்கி வேரரைத்துப் புன்னைக் காயளவு ஆவின் பாலில் காலமே.ரு நாள் கொடுக்கவும். இதுக்கு சூசிக வாய்விலெடுத்த கால், கை மூடக்கம் எரிவு கை எரிவு தீரும். சாதிலிங்கம் விராகனிடை.ஙு, திப்பிலி பலம்.க, சத்தே வறுத்து இது இரண்டும் பொடி பண்ணி ஒரு நிம்பு கிண்ணி வாய்க் கொண்டது அறுத்து விரை வாங்கிப் போட்டுச் சாறு சத்துப் பிழிந்து போட்டு இந்தப் பொடியை அந்தக் காயி விட்டு ஒரு சட்டியில் குப்பை மேனியிலை பரப்பி அதின் மேல் உப்பு பரப்பி அதின் மேல் காயைப் பதித்து மேலே குப்பை மேனியிலை பரப்பி அதின் மேல் படி உப்பு பரப்பி, அடுப்பில் வைத்து.ங நாழிகை எரித்து எடுத்து அரைத்து கழற் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து ஒரு உருண்டை அந்தி சந்தி எழு நாள் தின்ன இதுக்கு சூசிக வாய்வு, குன்மக் கிரணி, அக்கினி மந்தம், எரைச்சல், பொருமல், கால் கை குத்துகிறது இவை தீரும். கை கண்டது. பத்தியம் உப்பு, புளி, நெய் பால் கூட்டவும்.

பிள்ளைப் பெற்ற அறையில் கழியிறதுக்கு:-

மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, ஓமம் பலம்.க எல்லாம் பொடி பண்ணி வட்டி பிறக் கவுத்து மருந்து கொட்டிக் குழி பண்ணி உரி நல்லெண்ணை காய்ச்சி விட்டு களியாய்க் கிண்டிப் பாக்களவு தின்னவும் கழிச்சல் நிற்கும். கை கண்டது.

பெரும்பாட்டுக்கு எழும்புருக்கிக்கு:-

பசுவின் பால் சிறங்கை கோரோசனை பலம்.க, உரைத்து நிம்பு.க, பிழிந்து அந்தி சந்தி ஙு நாள் பொழுது பக்குவம் பார்த்துக் கொடுக்கவும். இதுக் குப் பெரும்பாடு எழும்புருக்கி தீரும் கை கண்டது. சூசிக*சன்னிக்கு*செந்தூ

சூசிக சன்னிக்கு செந்தூரம்:-

ரச செந்தூரம் விராகனிடை.வ பொடி பண்ணி மிளகு அரைத்து விழுக் கழற் பிரமாணம் பொதிந்து பசுவின் வெண்ணையில் பிரட்டி முழுங்க.ஙு நாள் பொழுது பிறகு சிந்தூரம் விராகனிடை.3/8, முன் போலே தின்னவும். மூன்று நாள் இதுக்குப் பத்தியம் உப்பு வறுத்துக்கூட்டவும். திருக்கைச் சூரணம் முருங்கைப் பிஞ்சு துவரம் பருப்பு அரைக்கீரை கூட்டவும். நாள்.

நல்லெண்ணையில் மிளகு பொரி போட்டுத் தேய்க்கக் கொள்ளவும். வெந்நீரில் முழுகவும். பிறகு சகலமுங் கூட்டவும். இதுக்குச் சூசிக சன்னி, கை காலெரிவு, குத்திறதும் தலைவலி காலிலிருந்து உச்சியிலெரிகிறதும் உடம்பு சிறு சிறுப்பும் இவை தீரும். கை கண்டது.

<u>சூசிகை வாய்வுக்கு:-</u>

நிலாவாரை பலம்.௩, வெள்ளரி பலம்.௧, சுக்கு இவை எல்லாம் இடித்து வடி கட்டி வெருகடி கொள்ளவும்.

<u>கெற்ப கிரந்திக்கு:-</u>

கருநொச்சிச் சாறு, ஈருள்ளிச் சாறு, விளக்கெண்ணை, கருஞ்சீரகம் பலம்.௧, கூட்டி எரித்து வைத்துக் கறண்டி கொள்ள கெற்ப கிரந்தி தீரும்.

<u>உஊண்ண வாய்வு எவிரச்சல் பொருமல்:-</u>

சுக்கு பலம்.௧, பொடி பண்ணி பலம் வெல்லப் பாகு காய்ச்சி இந்த பொடி போட்டுக் கிளறி சித்த மூலி விராகனிடை.௧, அபின் விராகனிடை.௨, மூன் பொடி தூவிக் கிளறி நிம்பு பிழிந்து கிளறிக் கழற் பிரமாணம் தின்ன உஊண்ண வாய்வு வயறு இரைச்சல் பொருமல் கழிச்சல் மந்தம் இவை தீரும். கை கண்டது.

<u>கெற்ப விப்புருதிக்கு:-</u>

ஈரமான மூன்றும் நாள் கடப்பம் விரை விராகனிடை.௧, அரைத்து தேன் விட்டு மூன்று நாளும் கொள்ளப் பூச்சி செத்து விழும். பின் ஊயுண்டாம்.

<u>பெண் திரள மருந்து:-</u>

வெடிங்காரம், சீனக்காரம், ஒட்டடை, சுண்ணம்பு, எள்ளுக் கழுவின தண்ணீர் வகைக்கு பணவிடை கூட்டிக் கொடுக்க.௩ நாளில் திரளுவாள்.

<u>எலிகடிக்கு:-</u>

ஆடாதோடை வேர் சிறு குறிஞ்சா வேர், பாக்களவு அரைத்து கிராம்பு வேர் வெங்காயம் கூட்டி மூன்று நாள் ஆறு பொழுது வெந்நீரில் கொடுக்கவும்.

<u>கெற்ப விப்புருதிக்கு:-</u>

காக்கணம் வேர் அரைத்து புன்னைக் காயளவு பசுவின் பாலில் கொடுக்கவும். வயறு கழியும். பால், கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி.௩ நாள் கொடுக்கவும். நாலா நாள் முழுகவும். முருக்சே பாகவிலைச் சாறு படி.௨ புருஉஙள் கையிலே கொடுக்கவும். தண்ணீர் விட்டுக் கரையேற முன்னே கொடுக்கவும். கெற்ப விப்புருதி தீரும். கை கண்டது. பெண்டுகள் கண்டு நோவுக்கு வயசு வலிக்கும். வயறு பிசிவுண்டாம். முட்டு வந்த போது வெள்ளை விழும். மலம் சலம் கட்டும்.

<u>இதற்கு மருந்து:-</u> வெங்காரம் பலம்.௧, சுத்தி பண்ணிப் பொரித்துத் தூள் பண்ணிச் சர்க்கரை பலம்.௧, கலந்து வெள்ளுள்ளித் தயிலம் விட்டுப் பிசைந்து புளியம் விரைப் பிரமாணம் அந்தி சந்தி மூன்று நாள் கடுசாஙல்.௫ நாள் கொடுக்க கண்டு நோவு தீரும்.

<u>மலட்டுவலி, கெற்ப விப்புருதிக்கு:-</u>

பெருங்காயம் பலம்.௪, வெங்காரம் பலம்.௩, சத்தியாவுதாரம் பலம்.௩ சயிந்தலவணம் பலம்.௧, சுக்கு விராகனிடை.௮, திப்பிலி விராகனிடை.௮, மிளகு விராகனிடை.௮, வெல்லம் பலம்.௧, கருங்கொள்ளு மா சேர்.௧, எல்லாங் கலந்து பொடி பண்ணி தீட்டத்துக்கு விராகனிடை.௫ முன்னே.௩ நாள் தின்ன தீட்டம் வந்த பிறகு.௩ நாள் தின்ன மலட்டு விப்புருதி, கிருமி முட்டுக்குட்டு கெற்ப வாய்வும் தீர்ந்து பின் ஊயுண்டாம்.

<u>மலட்டு வலிக்கு புழுவுக்கு மருந்து:-</u>

காயம். இந்துப்பு, திப்பிலி, வகைக்கு கழஞ்சு அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும். மூன்று நாள் மலட்டு திபுழுச் சாகும். வயிற்று வலி நிற்கும்.

<u>கெற்ப விப்புருதிக்கு:-</u>

கருங்காக்கணம் வேர் கல்லுப்பு பசுவின் பாலிலரைத்து நெய்யில் குழப்பி முழுங்

காலமே.ஙு நாள் தீரும். பிள்ளையில்லா மலடிக்கு மருந்து:- 19.8.63.

கொடுவேலி வேர் அரைத்து வெண்ணெயுடன் முழுங்கவும் கரு விழும். பெலனித்தன்டு நறுக்கித் தலைத்து வைத்து தெ பாலுடன் பிசைந்து கொடுக்க உள்ளுடைந்து சீயாக விழும். ரத்தமாய் விழும். மற்ற நாள் பெருங் குறிஞ்சா இலை பிடி.க, கருகு, மிளகு வெள்ளுள்ளி காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும.

பிள்ளையில்லா மலடிதருக்கு:-

வாழைப்பழம் மூன்று ஒரு நாளரைத்து ஒரு பழந் தோலுரிச்சுப் போட்டு அதை மூன்று பங்கு பண்ணி ஒரு பங்கில் கம்பு பிறமாணமுமாய் உள்ளே வைத்து உருட்டி மூன்று உருண்டைக்கு மூன்று கம்பு பிரமாணம் வைத்து ஒரு நாளைக்கு மூன்று உருண்டை கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்க பிள்ளையுண்டாம்.

கெற்பக் கிரந்திக்கு:-

அவுரியிலை பிடி, புதகரப்பான் பட்டை, கம்பிப் பிசின் கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை.க, எல்லாங் கூட்டி அரைத்து வில்லை பண்ணிச் சற்றே உலர வைத்து அரைப்படி விளக்கெண்ணெயில் போட்டு வைக்கவும். அந்த எண்ணை மாதம் முதல் கொண்டு க மாதம் வரைக்கும்.அ, நாளைக்கொடுக்கால் எண்ணை கொடுக்கவும். கொடுக்கிற எண்ணை பேதியாம். அன்றைக்கு உப்பு, புளி தவிர்க்கவும். கெற்பக் கிரந்தி கழியும்.

பெரும்பாட்டுக்கு:-

முடக்கொத்தான் இலை, சீர வெங்காரமும் அரைத்து விளக்கெண்ணெயில் குழப்பி மூன்று நாள் முழுங்கவும். பெரும்பாடு எலும்புருக்கிக்கும் நெய் படி.ஊ மஞ்சள் பொடி மிளகு பொடி, சீரகங் கூட்டிச் சூரிய புடம் வைத்து கரண்டி அந்தி, சந்தி தின்னவும் தீரும். பத்தியம் காரிப்பு, புளிப்பு விடவும்.

கெற்பக் கிரந்திக்கு:-

கரிப்பான் சாறு, சிறங்கை நல்லெண்ணை படி.தெ, இரண்டுங் கலந்து காலமே .ஏ நாள் கொள்ள. மிக்கு கெற்பத்தில் யெழுந்த கிரந்திக்கு கை கண்டது. பத்தியங் கார்ப்பு, புளி தவிர்க்கவும். உப்பு தவிர்க்கவும். புருஷருக்கு கொடுக்கவும் கிரந்தி, தன்னீர் வடியிறதும் நிற்கும்.

கழலிலை பசு பிடி.க, ஈருள்ளி சிறங்கை இரண்டுந் தவைத்து சிறங்கை சாறு காலமே ஏ நாள் கொடுக்க கெற்பக் கிரந்தியுந் தீர்ந்து பிள்ளையுங் கருவிச் சாந்து போலே பிறக்கும். கை கண்டது. பத்தியங் கார்ப்பு, புளிப்பு, உப்புத் தவிர்க்கவும். மறு பத்தியம் உப்பு வறுத்துச் சாறு கூட்டவும்.

விளக்கெண்ணை படி.உ, திருமேனி தேங்காயளவு ஈருள்ளி சிறங்கை இரண்டுங் கூட்டி எரிந்து பதத்திலிறக்கி ஐந்து மாத முதல் ஒன்பது மாதம் வரைக்கும்.அ நாளைக் கொடுக்கால் கரண்டி கொடுக்கவும் கெற்பக் கிரந்தி, செங்கரப்பான், பனை நங்கு கரப்பான், பிள்ளை கொல்லிக் கரப்பான், பிள்ளை, செத்துப் போறதும் சகல கரப்பான் சகல கிரந்தி இவை யெல்லாந் தீரும். எண்ணை குடிச்ச போது புளி, உப்பு விடவும்.

பிள்ளைகள் பிறந்து சாகிறதுக்கும், கத்திரிக்காய் போலே திறங்கி வாயாலேயும், மூக்காலும் ரத்த மெடுக்கிறது தொண்டை கட்டி குருவி கூப்பிட்டாப் போலே கூப்பிட்டுக் கிடந்து சாகிறதுக்கும், வயத்திலே சாகிறதும், கிரந்தி நோவு என்றறிந்து எண்ணை வைத்து நக்கும்படி மருந்து. கை கண்டது.

செவாப்பு எண்ணை, வில்வ வேர் இலை, வெட்டை வேர், செங்கத்தாரி வேர், கருஞ்சீரகக்ர=வேச் கருங்குரை வேர், புங்கம் வேர், சங்கம் வேர், அவுரி வேர், செம்முள்ளி இலை, சேப்பு நெருஞ்சி, சமூலம், கிரந்தி, நாயகம், நல்லூரி, குழி மீட்டான் கழச்சிக் கொழுந்து பேய்ப் பாச்சொற்றி மிளகறணை வேர், கண்டங்கத்திரி

வேர்*அருசி*வேர்*செம்முள்ளி*இலை,
வேர், கழலவேர், அமுக்கிரா வேர், சாறணை வேர், முற்றிலும் வேர், கரப்பான் கருகு காரிப்பான், குப்பை மேனி, வெம்பாடம் பட்டை, செவ்வகரம் பட்டை, சீந்தில் தண்டு ஆக இந்த மருந்தெல்லாம் கடைச் சரக்கு செவ்வகரம் பழம், திப்பிலி, வசம்பு, கடுக்காய், மிளகு, களிப்பாக்கு, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், ஓமம், சுக்கு, உறளி ஆக வகை.யக, இதெல்லாங் கூட்டிப் பச்சிலைச் சாறு விடவும். வேருங் கடைச் சரக்கும் இடித்துச் சிற்றாமணக்கு எண்ணெயில் வேக வைத்து கடுகு திரள விட்டு இறுத்துக் கொண்டு விடிவேறு நாள் காசிடை நக்கவும். பத்து நாளைக்கொருக்கால் எட்டு நாளைக்கொருக்கால் அரைச் சிறங்கை கொடுக்கவும். வயறு கழியும். கழியாவிட்டால் கடுக்காய் வேர், தட்டிப் போடவும். இந்தப்படிக்கு நக்கத் தீரும். இது கை கண்டது. இந்த எண்ணெ ஐந்து மாதமுதல் கொண்டு. மாதம் வரைக்கும் கொடுக்கவும்.

வச்சிர வல்லி லேகியம். அக்கினி மாந்தத்துக்கு:-

வச்சிர வல்லி கருகு போக்கி குழனி அரைத்து இதில் கல்லுப்புச் சிறங்கை.டு மிளகு, சுக்கு, ஓமம், கடுகு, வெள்ளுள்ளி வகைக்கு பலம்.க, திப்பிலி மூலம் பலம்.ரு, காயம் விராகனிடை.க, புளி.உ நிம்பளவு நெய்,தெ நல்லெண்ணெ.தெ, சீரகம் பலம்.க போட்டு தாளிச்சுக் கிண்டி வைத்து புன்னைக் காயளவு தின்ன ஆலை வாய்வு அக்கினி மாந்தம் இரைச்சல் பொருமல், கழிச்சல் இவை தீரும். கை கண்டது.

முக்காவளை வேர்ப் பட்டை, நிம்பளவு அவ்வளவு வெள்ளுள்ளி இவை இரண்டும் சுண்ணாம்பு பொதிந்து புடமிட்டு எடுத்து சுண்ணாம்பு வாங்கிப் போட்டு அந்த மருந்தை அரைத்துக் கழற் பிரமாணம் தின்னவும். இதுக்கு அக்கினி, மாந்தம், அசீரணம், இரைச்சல், பொருமல், மலகழிச்சல் இவை தீரும். கை கண்டது.

பயித்திய வாய்வுக்கு:- கம்பித்த லேகியம்:-

குளை தண்ணீர் ஆக காய்ச்சி இதில் விளாம்பழம் சதையைப் போட்டுப் பிசைந்து பிப்பி எடுத்துப் போட்டு லவங்கப் பத்திரி, நாகப்பூ, ஏலம், சுக்குத் திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், தாளிசப் பழம், சடாமஞ்சள், வங்கம், வகைக்கு.கரு விராகனிடை சர்க்கரை நாலிலொன்று கூட்டி லேகியம் பண்ணிக் கொள்ளப் பயித்திய வாய்வு தீரும்.

வயத்தில் செத்த பிள்ளை விழ மருந்து:-

சங்கம் வேர், நாயுருவி வேர் இரண்டும் இள வெந்நீரிலரைத்துக் குடிக்கப் பிள்ளை விழும். முசல் புழுக்கை வெந்நீரில் கொடுக்கப் பிள்ளை விழும். குதிரை லத்தி காடியிலே குடிக்கப் பிள்ளை விழும். தூங்கிலை அவைத்து வெந்நீரில் குடிக்கப் பிள்ளை விழும். வில்வ வேர் அரைத்து வெந்நீரில் கொள்ளப் பிள்ளை விழும். கடுகு இந்துப்பு பெருங்காயம் காடியில் கொள்ள பிள்ளை விழும். கார்த்திகைக் கிழங்கு உலர்த்தி வைத்து வயத்தில் மத்தித்து தொப்புளிலும் உள்ளங்காலிலும் தடவப் பிள்ளை விழும். விழுந்தவுடனே முலைப்பால் கொண்டு கழுவிப் போடவும். கழுவாமலிருந்தால் குடலற்று விழும்.

பிள்ளைப் பெற்ற வயத்தில் சீக்கட்டுக்கு:-

கோவைத் தண்டுச் சாறுமுக்கு விளக்கெண்ணை ஆழாக்கு கல்லுப்புக் கூடக் கலந்து கொடுக்கவும் வயற்றில் கட்டின சீசெல்லாம் தீரும்.

பிள்ளைப் பெறமாட்டாதார்க்கு:-

புன்னைக்கு நாற்த்தங் காயளவு ஆவின் பாலிலரைத்து நாழி பாலில் கலந்து கொடுக்கவும். பிறகு வெள்ளெருக்கம் பூண்டு.ச அரைத்து விளக்கெண்ணெயில் குழப்பி யோனியில் உள்ளே தடவவும். பிள்ளை பெறுவாள். கை கண்டது.

வயத்தில் சீய் கட்டினால்:-

கோவைத் தண்டுச் சாறுமுக்கு விளக்கெண்ணை படி. கல்லுப்புக் கூடக் கலந்து கொடுக்க வயற்றில் சீக்கட்டி எல்லாம் விழும். விளக்கெண்ணை. உக்காமணிச் சாறு. வெள்

குள்ளி.ரு எருள்ளி.ரு கூட்டி எரித்துக் கறண்டி கொள்ளச் சீதமெல்லாங் கழியும். மிளகு நீருஞ் சோறும் உண்ணவும்.

யோனிப் புற்றுக்கு:-

நெல்லிக்காய்க் கெந்தகம் சுத்தி பண்ணின பொடி பண்ணி இதுக்குச் சரி குறிஞ்சா வேர்ப் பொடி கூட்டிச் சித்தாமணக்கெண்ணெயில் குழைத்து மஞ்சள் பொடியுங் கூடப் போட்டுக் காரச் சீலையிலே வைத்து தடவி யோனிப் புற்றில் போடவும். கரைந்து ஆறிப் போம்.

யோனி மூலத்துக்கு:-

யோனியிலே புளிப்புத் தள்ளினாப் போலே தள்ளியிருக்கும். சேர்க்கைக்கு இடங் கொடாது. நீருஞ் சிதறி விழும். கக்கிசுடு மாயிருக்கும். சீதமென்றுஞ் சொல்லப்படும்.

இதுக்கு மருந்து:-

நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை.ச பிறண்டைக் கொழுந்து விராகனிடை.ச புங்கம் பால், ஆலப் பால், கரிப்பான் சாறுவிட்டரைத்து.வ நாளரைத்து கழற் பிரமாணம் உருண்டை பண்ணி ஒவ்வொருண்டை தேனில்.எ நாள் கொள்ளவும். அண்டில இலை அவித்துக் கட்டவும். இல்லாவிட்டால் நாயுருவியிலை அவித்துக் கட்டவும். பத்தியங் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சகல வாய்வுக்கும்:-

நடையில் காற்று கழியிறதுக்கும்:- முருங்கைப் பட்டை மேல்ப் புறனி சீவிப் போட்டு விளக்கெண்ணை விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து வெருகடி தின்னவும் தீரும்.

மந்தித்த கண்ணுக்கு:-

பகல் வற்றியுப்ப பலம்.வ, கெந்தகம் பலம்.ரூ, சிறும்பு நீர் பலம்.க, கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் பிசறி பிறகு அரைத்து வைத்துக் கட்டவும். மந்தித்த கண்ணுக்கு மருந்தொன்றென்று மாதே கேள்:

இந்துப்புத், திப்பிலி, ரோகணி, கூட்டி நந்திப்பூச் சாற்றிலரைத்துக் கண்ணி லிட அந்திக்கு முன்னே அருந்ததி காணலாம்.

கண்ணுக்கு மை:-

கரிப்பால் சாறு மிளகு, தக்காளிச் சா வட்டிப் பிறத்தில் விட்டு நிம்புச் சாறும் செம்பு கொண்டு இழைத்துப் பிறகு வெண்ணை போட்டு இழைத்துக் கண்ணுக்கிடப் புகைச் சல், வெள்ளெழுத்துக் காசம் படலம் இவை தீரும். கை கண்டது.

வெள்ளெழுத்துக்கு:-

தேத்தான் வேர், நிலாவாரை வேர், ஆவாரை விரைப் பருப்பு அதின் பூ மொக்குச் சமன் கூட்டி பசுவின் நெய் விட்டரைத்து வைத்து இரண்டு கண்ணுக்கும் இடக் கண் புகைச்சல், வெள்ளெழுத்து நேத்திர வாய்வு இவை தீரும். பத்தியம் புளி, கடுச்சு புகையிலை கத்திரிக்காய் தவிர்க்கவும்.

அடிப் பட்ட கண்ணுக்கு நெய்:-

மரமஞ்சள், அதிமதுரம், செங்கழுநீர்க் கிழங்கு, நன்னாரி வேர், சிறுநாகப்பூ வகைக்கு பலம்.கரு, பசுவின் பால் படி.ரு இதில் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி இறக்கி புரையிட்டு மற்று நாள் கடைந்து வெண்ணை எடுத்து உரி நெய்க்கு மீட்டு பின் மருந்துகளை ஒரொன்று கழஞ்சு அரைத்துக் கரைத்து நெய்யாக.ரு நாள் செலுத்தி வடித்துக் கண்ணில் நசியக் கண்ணேக்காடும் வலிப்புக் கல்லெறிப்பட்டதும், தடியடி பட் டதும், மரமடி பட்டதும், மற்றுமுள்ள நோக்காடும் தீரும்.

நேத்திர வாய்வுக்கு:-

தேத்தான் விரை செம்பில் நிம்புச் சாற்றிலரைத்துக் கண்ணில் இட.உய நாள்

காசம் நீர்வடிவு, புகைச்சல், திமிர் மு டம்பிற தீரும்.

இளநீர்க் குழம்பு கண்ணுக்கு :-

சிறக்கீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், ஆரை வேர், நந்தி பத்திரி வேர், இசவேலி வேர், சந்தனம், விலாமிச்சம் வேர், இவை வகைக்கு பலம்.க, சுட்டு இடித்து குணி நாழி தண்ணீரில் போட்டு பிறலியாகக் காய்ச்சி வடித்து இதில் க லக்கம் ஏலம் லவங்கம், அதிமதுரம, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, மிளகு, சீரகம் இவை வகைக்கு விராகனிடை.க, அந்தக் கசாயம் விட்டரைத்து வடி கட்டிக் கொண்டு இதில் நிம்புச் சாறு உரி கூட விட்டு இளநீர் வேறே சட்டியில் விட்டுக் கொதிக்க வைத்து மூன்று சீலை கொண்டு இதனுடன் கூடவிட்டு அடுப்பில் வைத்து சிறுக எரித்து குழம்பான பக்குவத்தில் நடுவே கோலே வைத்துப் பார்க்க அந்தக் கோலில் ஒட்டினால் பதமென்றறிந்து இறக்கிச் கற்பூரம் விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.உ படிக்காரம் விராகனிடை. பொடி பண்ணி ஆறின் சாட்டிலும் தூவி வைத்துக் கொண்டு சகல கண்ணோவுக்கும் இடவும். சகல ரோகமுந் தீரும்.

புகைச்சல், நேத்திர வாய்வுக்கு எண்ணெய் :-

நல்லெண்ணெய் படி, வெள்ளாட்டுப் பால் படி, மிளகு பலம்.க, வெத்திலைக் காம்பு பலம்.க, அருகம் வேர் பலம்.க, மிளகு ஒன்றிரண்டா உடைத்து மற்றது நருக்கிப் போடவும். எரித்து பதத்தில் வடித்து தலை முழுகவும். புகைச்சல், நேத்திர வாய்வுந் தீரும்.

கண்ணுக்கு :-

படிக்காரம் விராகனிடை.ஙு பொடி பண்ணிக் கறண்டியில் போட்டுப் பசுவின் வெண்ணெய் கொட்டைப் பாக்களவு போட்டு நெருப்பில் வைத்திருக்க எரியும். அப்போது குளிர்ந்த தண்ணீரில் வைத்து அவிழ்சவுடனே திரும்பி முன் போலே நுனி விசை வைத்து எடுத்துப் பாதி இரும்பிலிழைத்துக் கண்ணுக்குப் பத்துப் போடவும். கண் கடுப்பு நிற்கும். வலி நிற்கும். மற்றப் பாதி கிண்ணிப் புறத்தில் மருந்திலிட்டு வெண்ணெயிட்டு இழைத்துச் சமம் பிறகு சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், முலைப் பால் விட்டு நருக்கிப் பொட்டணங் கட்டி இந்தச் சாறு பிழிந்து இழைக்கவும். அத்தோடே வெள்ளி, பொன், வெங்கலம், முத்து பவழமும் உரைத்து வைத்துக் கொள்ளவும். ஒன்றை விட்டொரு நாள் போடவும். இதுக்கு நேத்திர வாய்வு, பழுவெட்டுக் காசம், படலம், பூப் புகைச்சல், சகல ரோகமுந் தீரும். கை கண்டது. சிறு பிள்ளைக்கும் அமரம் ஆடு இவை தீரும். எவ்வளவு கண்ணுக்கு வலையிலிடவும்.

கண் புகைச்சலுக்கு எண்ணெய் :-

வேக வைத்து சித்திர விளக்கெண்ணெய் படி.க, கண்ணி சூலம் முடை பாலை யிலிட்டு இரண்டு படி மரக்கால்----விட்டுக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி படி இரண்டு கட்டி எரித்துப் பதத்தில் வடித்து வைத்துத் தலை முழுகக் கண், புகைச்சல், வெள்ளெழுத்து தீரும்.

நேத்திர ரோகத்துக்கு :-

ஏலம், அதிமதுரம், செண்பகப்பு, லவங்கப் பட்டை வகைக்கு விராகனிடை. க. வெள்ளைப் பொடி, துத்தம் விராகனிடை.ய, பசுவின் கோமியம் காடி முலைப் பால் சாணிப் பால் இதில் ஒவ்வொருநாழி வேக வைத்துக் கழுவி நாலும் சுத்தி பண்ணி பனை மட்டைச் சாற்றிலரைத்து உலர்த்திப் பிறகு நிம்புச் சாற்றிலரைத்து வில்லை பண்ணி அகலிலிட்டு அகல் மூடிச் சீலை மண் செய்து புடமிட்டு எடுத்தால் சுண்ணம்பு போலே ஆகும். இந்தப் பொடி பலம்.வ, கண்ணுக்குப் போடவும். சிவப்பு நீர்பாச்சல் சதை வளர்த்தி இவை தீரும்.

<u>சுற்று அஞ்சனப் பொடி:-</u>

சிறகீரை பொன்னாங்காணி, அத்தம் நீர் பூலா சாறணை இந்த ஐந்து வேர் சமன் கட்டி பனை மட்டை சாறு விட்டரைத்து வார்த்திப் பிறகு நிம்புச் சாற்றிலரைத்து அகலிலிட்டு அகல்கொண்டு மூடிப் புடமிட்டு ம. நாளெடுத்துப் பார்க்கக் கொக்கிறகு போலே ஆகும். வைத்துக் கொண்டு விரலில் முலைப்பால் தொட்டு அந்தப் பொடியைத் தொட்டுக் கண்ணுக்குப் போடவும். இதற்கு அமரம் நீர்ப் பாச்சல், நேத்திர வாய்வு ஒரு வலத்தி சிவப்பு கண்ணோக்காடு வெண்ணோக்காடு இவை தீரும். கண்ணில் குச்சி குத்தினால் கடுப்பு, வலிப்பு இதற்கு முருங்கையிலையில் வெண்ணெ போட்டுக் காச்சிக் கண்ணில் குத்தவும். எ.நாள் இவை தீரும்.

<u>சத்தம் பற்பம்: கண்ணுக்கு:-</u>

அத்தம் விராகனிடை.ய சுத்தி செய்து கோழியங் காடி முலைப்பால், சாணம் பால் இதில் ஒவ்வொன்று ஒவ்வொரு நாழிகை ஊற வைத்து கழுவி இந்தப்படி நாலிலுங் கழுவி சுத்தி பண்ணி எலுமிச்சம் பழச் சாறு வார்த்தரைத்து அகலில் வைத்து மூடி வறளி அடுக்கி அதில் வைத்து மேலும் வறளி அடுக்கிப் புடமிட்டு எடுத்துப் பார்க்கச் சங்கம்ப போலே இருக்கும். அது பொடி பண்ணி.க. புல்லிடை கண்ணுக்குப் போடவும். இதற்கு கண் சிவப்பு, நீர்ப் பாச்சல், சதை வளர்ச்சி, நேத்திர வாய்வு இவை தீரும். மாலைக் கண்ணுக்கு சித்தாமணக்கும் பருப்பு நிம்புச் சாற்றிலரைத்து/ பிறகு வெண்ணெயில் விழுத்துப் போடத் தீரும். உள்ளுக்கு மருந்துக்கும் நத்தைச் சூரி வேர் அரைத்து உளுக்குப் பாலில் கொடுக்க.கு நாள் காலமே.

<u>கண்ணோவுக்கு பத்து:-</u>

காசாபிலை உளர்த்தி ஊள் பண்ணி விராகனிடை.ஏ, நிம்பு அளவு புளி நைய்ய நருக்கி வெங்காரம் விராகனிடை.ஏ பொரித்து மஞ்சள் கலந்து முலைப் பால் விட்டுக் கலந்து பொட்டலங் கட்டிக் கண்ணைச் சுத்தி ஒத்திடச் சாமத்தில் நிற்கும். வெண்ணோக்காடு பீளை சாறுகிறது நித்திரையில்லாமலிருக்கிறது கண் வீக்கம் தலைவலி, சகலமும் உடனே நிற்கும்.

<u>கண்ணுக்கு:-</u>

அரிசி விராகனிடை.உ, கறியுப்பு விராகனிடை.க இரண்டும் பொடி பண்ணி வட்டியில் பிரட்டிலிட்டு நிம்புச் சாற்றிலிழைத்து பிறகு வெண்ணெ போட்டு நிம்பளவு செம்பு கொண்டு இழைத்து செம்புக் கிண்ணியில் வைத்து தண்ணீரில் காய ஒரு நாழிகை போட்டு வைத்து எடுத்து செம்புச் சிமிழில் வைத்துக் கண் ரணத்துக்கும் கண்ணோவுக்கும் சகலத்துக்கும் ஆகும். கை கண்டது.

<u>மேல் தலை வியாதிக்கும் தலை இடிப்புக்கும்:-</u>

ஏலம் விராகனிடை.ஏ, லவங்கப் பட்டை விராகனிடை.ஏ அதிமதுரம் விராகனிடை.ஏ, செண்பகப் பூ விராகனிடை.ஏ, நல்லெண்ணை படி.அ, இந்த ஐந்தையும் ஒன்று ரெண்டாக நருக்கிப் போட்டு பொட்டலங் கட்டி டோலெந்திரமாகக் கட்டி எண்ணையில் விட்டு ஊற வைத்து பிறகு பொட்டலத்திலிருக்கிற எண்ணையைப் பிழிந்து வைத்துத் தலையில் தேய்த்துக் கொள்ளவும். காலமே தேய்த்து மூன்றாஞ் சாமத்துக்கும் உசிலம்பட்டை இட்டு இள வெந்நீரில் முழுகவும். முழுகின அன்றைக்கு புளி, உப்பு தவிர்க்கவும். இது ஒன்றுவிட்டொரு நாள் முழுகவும். கண் திருட்டி மங்கலாயிருந்தாலும் தீரும்.

<u>தலைக்கு குளித்தி எண்ணை:-</u>

கரப்பான் சக்லம் இளநீரளவ நெல்லிப் பருப்பு படி.க, குளவி தண்ணீர் விட்டுக் காய்ச்சி இருநாழியான வரை இறுத்து இதில் நல்லெண்ணை படி.உ, பசுவின் பால் படி.உ, கலந்து எரித்து பஞ்ச திரவியம் பலம்.உ பொடி பண்ணிப் போட்டு எரித்து மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து முழுகவும். கபால வறட்சி, கண் புகைச்சல், கண்ணெரிவு, உடம்பெரிவு, தீரும். கை கண்டது.

செவிநோவுக்கு எண்ணெய்:-

பிரண்டைச் சாறு படி.வ, கரிப்பான் சாறு படி.வ, வேப்பெண்ணெய் படி.வ, நீரோடி விரை பலம்.ரு, கறைக் கெந்தகம் விராகனிடை.உ மான்கோம் விராகனிடை.எ காயம் விராகனிடை.உ எல்லாம் எரித்துக் காதில் விட்டு அடைக்க எழிச்சி செவிக் காளான் செவிரணம், காதடைப்பு இவை தீரும். கை கண்டது.

கண்ணோவுக்கு பற்று:-

காசுக் கட்டி, களிப்பாக்கு, சீனக் காரம் மூன்றுங் காசுப் பிரமாணம், கடுக்காய் பாதி, அபின் ஒன்றரைக் காசுப் பிரமாணம் எல்லாங் கட்டி அரைத்த நிம்புச் சாற்றில் காய்ச்சிக் கொதிப்பித்த மெழுகு பதத்தில் கண்ணிற் படாமல் சுற்றிப் போட உளைவும், சிவப்பு, தண்ணீர் விழுதல், கடுப்பு நேத்திர வாய்வு இவை தீரும். புழுங்கலரிசி பிடி.க, ஊற வைத்த அரைத்த நிம்புச் சாற்றில் குழப்பி பின்பு புது ஒடு கொண்டு நன்றாய் இழைத்து பின்னும் நிம்புச் சாறு விட்டுக் கொதிப்பித்து கண்ணைச் சுற்றிப் பற்றுப் போடவும். மூன்று நாள் கண் கலங்கல் வீக்கம். சிவப்பு நீர்ப் பாய்ச்சல், கடுப்பு இவை தீரும்.

காச உருண்டை பித்த காசத்துக்கு:-

அரிசு வெண்ணெய் காக்கட்டான் வேர், கருவேல விரை, கடுக்காய் மட்கட ஒடு சமன் கட்டிப் பொடி பண்ணி கரிப்பான் சாற்றிலரைத்து உருண்டை பண்ணி முலைப்பாலில் இடவும். பித்த காசம், நிலகாசம், கண் கூச்சம், ரெத்த ரோகம் இவை தீரும். கை கண்டது.

கண் புரு வெட்டு ஆணிப் புஷ்பத்துக்கு:-

கோரோசனை கழஞ்சி, கடுக்காய் அவ்வளவு இவை இரண்டும் பொடி பண்ணி பொட்டணங் கட்டி அமுரியில் ஊற வைத்து கண்ணில் பிழிய.ரு நாள் ஆணிப் பூப் பறியும். கண் புரு வெட்டுக்கு அரிசு, புளியம் விரை அளவு கடுகச் சுட்டு நேகப் பொடி பண்ணி நிம்பளவு பசுவின் வெண்ணெயிலரைத்து.உ நேரமும் போடவும். வெந்நீர் விட்டுக் கழுவிப் போடவும்.

ஆணிப் பூவுக்கு:-

அண்ட ஒடும், அரிசியும் சமன் கட்டி நிம்புச் சாற்றிலரைத்து வில்லை பண்ணி அகலில் விட்டு மூடிப் புடம் எட்டு எடுத்து அரைத்துக் கண்ணுக்குப் போட ஆணிப் பூவு கரைந்து போம். கை கண்டது.

சந்திரரோகையைத் அத்தம் விராகனிடை.க, எலுமிச்சஞ் சாற்றில் முக்கால் பழச் சாற்றில் ஊற விட்டு பால் உரியில் போட எந்திரங் கட்டி எரித்துப் பிறகு நிம்புச் சாற்றிலரைத்து மூன்று விரை அரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி முலைப்பாலிலிடக் காசம் படம், சதை வளர்ச்சி, நீர்ப் பாய்ச்சல் இவை தீரும்.

கண்ணுக்கு கிரிஞ்சி, பச்சை நருக்கிப் பிழிந்த சாறு அதில் நல்லெண்ணெய் கலந்து அதில் வெங்காரம் பொரிச்சு பு.க கட்டிக் கண்ணுக்கிட கெட்ட கண் கடும்.

வெள்ளெழுத்துக்கு மருந்து:-

செப்புக் கிண்ணியில் அட்டத்தனை நிம்புச் சாறு விட்டு.உ நாழிகை இருக்க விட்டு தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்துக் கொண்டு முழுகிற போது உச்சியில் முன் நிம்புச சாற்றில் நல்லெண்ணெய்.ச துளி விட்டு மத்திச்சு விரலில் தோய்த்து உச்சியில் தடவி இரண்டு கண்ணிலும் விட்டு தலைக்கு சீயக்காய் விட்டு தேய்த்து முழுகவும். இப்படி.ரு முறை வெள்ளெழுத்துத் தீரும். கை கண்டது.

கண்ணுக்கு:-

மயிர் கரி கோரோசனை கோழி சிவப்பு, எச்சம் சமன் கட்டி முருங்கைப்

பூவு கோவைப் பூ இவை கூட்டி வெண்ணெ கூட்டி இழைச்சுக் கண்ணுக்கு இட நீலகாசம் படித்திய காசம், வெள்ளைக் காசம், சகல காசமுந் தீரும்.

<u>தலைக்கு எண்ணெ:-</u> 20.8.63.

நல்லெண்ணெ பேராமுட்டி வேர், சித்தாமுட்டி வேர், பொன்னங்காணி வேர், சிறுகீரை வேர், நெல்லிப் பருப்பு வகைக்கு பலம்.ஒ நருக்கிப் போட்டு சூரிய புடம் வைத்து நாடி நாளைக்கு ஒருக்கால் முழுகவும் கண் புகைச்சல் தீரும்.

<u>கண்ணிலுள்ள ரோகத்துக்கு:-</u>

வெள்ளருகு, விலாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, செஞ்சந்தனம், ஒரிதழ் தாமரை முந்திரிப் பழம், அதிமதுரம், குங்குமம், வெள்ளைச் சந்தனம், வகைக்கு விராகனிடை.ஙு, அருகம் புல்லு, வெள்ளாட்டுப் பால் பதக்கு. நெய்.ச கூட்டி எரித்து பதத்தில் வடிகட்டி நக்கவும். இதுக்கு கண்ணிலுள்ள உஷ்ணம் சிவப்பு தள்மாங்கிஷம், தலையிலுள்ள உஷ்ணம், உலர்ந்த சரீரம் ரெத்த பித்தந் தீரும்.

பவழம், முத்து, செம்பு பொன்னந் தரிச பித்தளை, உப்பு அறுகீரை வேர் பொன்னங்காணி வேர், ஒரிலைத் தாமரை வேர், பனை மட்டைச் சாறு வேர் வகைக்கு விராகனிடை.க புளியிலைச் சாறு நெல்லியிலைச் சாறு, கரிப்பான் சாறு, நிம்பச் சாறு, இந்த ஒவ்வொரு சாற்றில் கலத்தில் செம்பு கொண்டு இழைத்து உருண்டை பண்ணி வைத்து தேன் வார்த்து இழைத்து வைத்துக் கண்ணுக்கிடப் பந்த காசம் நீலகாசம் சேஷ்பகாசம், தூளிப்பப் படலம்வெள்ளெழுத்து ரோகம் தீரும்.

<u>நேத்திர ரோகத்துக்குப் பொடி:-</u>

கிளிஞ்சி நருக்கிச் சாறு பிழிந்து அதில் எண்ணெயங் கலந்து வெங்காரம் பொரித்து கலந்து வைத்து மூன்று நாள் கண்ணுக்கிட மூன்று நாளில் தீரும். நேத்

<u>நேத்திர ரோகத்துக்குப் பொடி:-</u>

முத்தல் கழஞ்சு, சிறுகீரை வேர், வெள்ளைச் சாறணை வேர், பொன்னாங்காணி வேர் இம்மூன்றும் கழஞ்சு கூட்டி நிம்புச் சாற்றிலரைத்து அடை தட்டி சீலையில் பொதிந்து புடமிட்டுப் பொடி பண்ணி வைத்து சகல கண்ணோவுக்கு போடவும். சகல ரோகமுந் தீரும்.

<u>கண்ணுமை:-</u>

சீனக்காரம், கறண்டியிலிட்டுப் பசுவின் வெண்ணெ சருக்கு பொருந்தச் சிவந்த கலத்தில் வைத்துக் காலிச் செம்பு கிண்ணி கொண்டு இழைத்துக் கண்ணுக்குப் போடவும் சகல ரோகமுந் தீரும். சீனக்காரம் கறண்டியிலிட்டு பசுவின் வெண்ணெ கிண்ணியில் வைத்து சுருக்கு கொடுத்து சிவந்தவுடனே எடுத்து வெள்ளைக் காக்கணம் பூ இந்தச் சாற்றிலரைத்து ஒ சாமம் பிறகு செம்பு கொண்டிழைத்து எள்ளுப் பிரமாணம் கண்ணுக்கிட நேத்திர ரோகமெல்லாந் தீரும். பொன்னாங்காணிச் சாறு நாழி, பசுவின் பால் நாழி கலந்து கலயத்திலிட்டு மூடிச் சீலை மண் செய்து குப்பையில் புதைத்து அ நாள் தலை முழுகவும். கண் புகைச்சல், காசம் இவை தீரும்.

<u>நேத்திர ரோகத்துக்கு தலைக்கெண்ணெ:-</u>

சித்தாமுட்டி சமூலம் நருக்கி.உரு நாழி தண்ணீர் விட்டு அ-ல் ஒன்றாய்க் காய்ச்சி இதில் தேவதாரம் பலம்.ஙு, சித்தாமுட்டி வேர் பலம்.க, லவங்கப் பட்டை பலம்.உ, நல்லெண்ணெ படி. கூட்டி எரித்து பதத்தில் வடித்து தேய்த்து முழுகப் படலம் மீறி பலம் பத்மரோகம் வருண சுக்கிரன் கபால சூலை, வெள்ளெழுத்து மேல்பட்ட வியாதியெல்லாந் தீரும்.

முத்தம் விராகனிடை.அ, சிறுகீரை வேர் விராகனிடை.அ, பொன்னாங்காணி வேர் விராகனிடை.ச, வெள்ளைச் சாறணை வேர் விராகனிடை.உ இவை யெல்லாம் நிம் புச் சாற்றிலரைத்து அட்டை பதத்திலெடுத்து உருட்டி வெள்ளி சீலையில் மூடிந்து காட்டு

மூன்று முட்டையில் புடம் வைத்து நீரை வாறே கலப் பிரத்தில் வைத்து சங்கு கொண்டு இழைத்து காளிதம் பண்ணி, சிமிளில் வைத்துக் கொண்டு கொள்ளப் பிரமாணம் கண்ணிலிட கண்ணோவை, கண் மாசு, கண்மாங்கிஷம், கண்ணில் பூ இவை யெல்லாந் தீரும்.

மூக்கில் நீர்ப் பாய்ச்சலுக்கு:-

நிம்புச் சாறு படி.௪, நல்லெண்ணெ படி அறிஞ்சி விரை, மிளகு, கோஷ்டம், இஞ்சி, சுருவ்வி இலை சமன் கூட்டு நிம்புச் சாற்றிலரைத்துக் கரைத்து எரித்து பதத்தில் வடித்து தலையில் தேய்க்கவும். ௩ முறை.௪ முறை தேய்க்கவும். மூக்கில் நீர்ப் பாய்ச்சல் நிற்கும். கை கண்டது.

கண்ணுக்கு சந்திர உதையம்:-

துத்தம், கடுக்காய், நிம்புச் சாற்றில் முக்கால் ஜாம வைத்து ஒரு நிம்புச் சாற்றில் சவுர அரைத்து.௩ முறை அரைத்து குளிகை பண்ணி உரைத்தி முலைப் பாலிலிடவும். கண் சதை வளர்த்தி படலம், நீர்ப் பாய்ச்சல் மாறும். சந்திரோதயம் கை கண்டது.

நயனூபுரம்:-

கஸ்து நிமளை விராகனிடை.க, துத்தம் விராகனிடை.க, படிக்காரம் விராகனிடை. இம் மூன்றும் பொடி பண்ணிக் கரண்டியில் போட்டு பசுவின் வெண்ணெ போட்டு உருக்கி விட்டு எரிய இப்படி மூன்று விசை இப்படி மூன்று விசை உருக்கிப் பற்பமாக்கி கடுக்காய் பாதி வெந்தது பச்சை பாதியும் விராகனிடை.க கூட்டி வெண்ணெ போட்டு இழைத்து கண்ணுக்கிடப் படலம், காசம், பூசல், கண் வியாதியுந் தீரும். கை கண்டது. சிவனார் வேம்பு, தயிலம் உள்ளுக்குக் காசிடை கொடுத்து தலைக்குந் தேய்த்து அரப்பிட்டு முழுகவும். பிறகு.௩ நாள் சும்மா இருக்கவும்.௪ அம் நாள்தயிலம் யிட்டு முன் போலவே முழுகவும். இப்படி நாலு முறை.௰௨ முழுக்கு முழுகவும். இதற்குத் தலைப் பற்று, ஒரு போலே இருக்கிறதும் புழு வெட்டும் தலை திமிர் கபால குட்டம், கண் பூ இவை தீரும். தலை மயிர் வளரும். கை கண்டது.

கண் புழு வெட்டு, தலை புழு வெட்டு, கன்னந் தாடியில் புழு வெட்டு இவைகளுக்கு மை:-

எண்ணெ மாறு வாட்டிப் பிழிந்து அந்தச் சாற்றில் எழு விசை சீலை நனைத்து உலர்த்தி திரி பண்ணி வேப்பெண்ணெயில் தோய்த்து அந்த எண்ணெயில் விளக்கேத்தி மை பற்ற வைத்து எடுத்து அந்த எண்ணெயில் மத்தித்துக் கண்ணிலிடவும். புழு வெட்டுத் தீரும். அந்த எண்ணெயில் சிகை குழப்பித் தலைக்கு தாடிக்கு கன்ன மிறகளிக்கிடப் புழு வெட்டுத் தீர்ந்து மயிர் முளைக்கும். கை கண்டது.

கபால குட்டத்துக்குத் தயிலம்:-

நல்லெண்ணெ உரி, எருக்கம் பால் விராகனிடை.௩, காட்டுச்சீரகம் விராகனிடை.௰ கார்போகரிசி விராகனிடை.உ வசம்ப விராகனிடை.உ மஞ்சள் விராகனிடை.க அலரி வேர் பிடி.கா, கெந்தகம் விராகனிடை.உ, எல்லாம் பொடி பண்ணி எண்ணெயில் கலந்து சூரிய புடம் வைத்து.எ நாள் தலைக்குத் தடவவும் கபால குட்டந் தீரும்.

காசத்துக்கு தேச பத்திரி எண்ணெ:-

சன்னி பித்த காசத்தின் குணம்:- கிருஷ்ண விழி நடுவே பளிங்கு போலே இருக்கும்.
நீல காசத்தின் குணம் கிருஷ்ண விழி நடுவே நீலக் கல்லைப் போலே இருக்கும்.
சேற்பனக் காசத்தின் குணம் கிருஷ்ண விழி நடுவே வெள்ளைப் பீலை போலே இருக்கும்.
இதெல்லாந் தீரும்.

மூடு சன்னி, சுதா சன்னி, வாய்வு, கழல் வாதம், பயித்தியம், சன்னி வாய்வு, சன்னி கழல் வாதம், பயித்தியம், சன்னி வாய்வு, வூதிரட்சி இது முதலானதுக் கெல்லாம் எண்ணெ வைக்க:-

உகாமிலை, ஆடாதோடை யிலை, நொச்சியிலை எருக்கம் பழுப்பு, குப்பை மேனி

எருக்கம் பழுப்பு, குப்பை மேனி, முடக் கொத்தான், திராய் உத்தாமணி ஆடு தின்னாப் பாலை இவ் வகைக்குச் சாறு படி.ரு. சந்தனம், சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள், அரத்தை வசம்பு, அருள்ளிப் பருப்பு, காசம், வெங்காரம் இலுப்பைப் பூ, பெருங்குரும்பை கடுகு, ஓமம், மருக்காரை, சிறுபலை வேர், நீர் மேல் நெருப்பு வேர், பங்கம் வேர் இவை வகைக்கு கழஞ்சு சரி கொண்டு இதற்கு எண்ணெ வகை வேப்பெண்ணை, புன்னெண்ணை, இலுப்பெண்ணை, நல்லெண்ணை இந்த நாலு எண்ணையும் படி. இந்தக் கஷாயத்தில் விட்டு கற்கம் அரைத்துக் கரைத்து எரித்து பதத்தில் வடி கொண்டு காசிடை உள்ளுங் கொடுத்து மேலும் பூசவும். சகல சன்னி வாய்வு, காமாலை, பித்த பாண்டு இது முதலானவைகள் தீரும்.

ரண சுக்கிரனுக்கு:-

அதிமதுரம், தாமரை வளையம், கொட்டிக் கிழங்கு சமன் கூட்டி அரைத்து ஆட்டுப் பால் விட்டரைத்து அதில் நெ. முக்கால் விட்டெரித்து இறக்கித் தலைக்குத் தடவிக் கண்ணுக்கும் வார்க்கவும் ரண சுக்கிரன் தீரும்.

மதன காமேசுரம்:-

எலம், விராகனிடை.ரு?, கிராம்பு விராகனிடை.ரு, அவினி விராகனிடை.ரு, முந்திரிப் பழம் விராகனிடை.ரு அமுக்கிரா விராகனிடை. நிலப்பனை வேர் விராகனிடை.ரு, நாயுருவி வேர் விராகனிடை.ரு, நீர்முள்ளி விரை விராகனிடை.ரு, பூனைக் காலி விராகனிடை.ரு, சாதிக்காய் விராகனிடை.ரு, ஆக இந்த வகையெல்லாம் கூட்டி அரபாகத்தில் பண்ணவும்.

சீப் பிரமியத்துக்கு:-

கருங்குறுவையரிசியும், குப்பை மேனியிலையும் இரண்டும் இடித்துக் களிக் கிண்டி உப்பில்லாமல் தின்னவும். நல்லெண்ணையும் பனை வெல்லமும் கூட்டவும். சீப் பிரமியமுந் தீரும்.

காதடைப்பு எண்ணை:-

நல்லெண்ணை, நெல்லிக்காய்ச் சாறு, சரிப்பான் சாறு.க கலந்து எரித்துப் பதத்திலிறக்கித் தலையிலுந் தேய்த்துக் காதிலும் விட்டு அடைக்க செவி காதடைப்பு நிற்கும்.

மண்டை வலிக்கு:-

சுக்கு, வசம்பு, பெருங்காயம், நாய திப்பிலி, இந்தப்ப மிக்க கோரைக் கிழங்குடனே வெள் வெங்காய மோரொன்று செக்கு மொல்லொர் விராகனிட உள்ளுக்கு நல்லெண்ணையுங் கூட்டி புடக்கு மெருக்கம் பழுப்புடனே பொருந்த நீர் தானுக்கு கூட விட்டு மருந்து நருக்கி மிக விரவிப் போட்டுக் காச்சிய பின் படக்கடுகு முறிப் பின் பதத்தில் வடித்துக் காதில் விடக் கடகு மிரைச்சல் மிப்புருதல் கபால சன்னி, பல நோவும் திட்ட மிருதான் செயல்ராஸ் சிறதந்தே மோடுங் கண்டீரே.

மூக்கால் ரெத்தம் விழுகிறதுக்கு:-

மழும் புளி சாடியிலூறப் போட்டு முள்ளியம்

செவி ரோகத்துக்கு:-

வச்சிர வல்லிச் சாறு படி.வ, சரிப்பான் சாறு படி.வ, வேப்பெண்ணை படி.வ நீரொட்டி விரை பலம்.ரு பலவகைக் காய் விராகனிடை.ரு, கெந்தகம் பு.உ, மான் தோல் விராகனிடை.க, எல்லாங் கூட்டி எரித்துக் காதில் விட்டு அடைக்க எழுச்சி செவிக் காளான் செவிரணம் காதடைப்பு இவை தீரும். கை கண்டது.

ஒருத் தலை வலிக்கு :-

கருங் குங்கிலியம், வெள்ளுள்ளிச் சாறு இசைப்பைக் கட்டி, வேப்பங் கட்டி இசை நாளும் பொடி பண்ணி வெருகடி கொள்ள(புண்ணும். பீனிசம் நீற்கும். கை கண்டது.

நல்லெண்ணை படி.க, நெய்ச் சட்டி சமூலம் முலைக்குச் சாறு படி.க, கற்கம் ஏலம், லவங்கப் பட்டை, அதிமதுரம், கோஷ்டம், செண்பகப்பூ, நெய்தல் கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர், முத்தக் காசு, சந்தனம் ஆக மருந்து யகூ-ம் முன் சாறு விட்டரைத்து எண்ணையில் கலந்து ஒரு நாள் சூரிய புடம் வைத்து மறுநாள் மெழுகு பதத்தில் வடித்து தலைக்கு இட்டு முழுக இருக்குக் காசம், கூஷயம், உஷ்காசம், இருமல், விருஷ்ஷேமகம், அ நாளைக்கொருக்கால் முழுகவும். இருக்கு மூக்காலே சோளாய் விழுகிறதும் ரெத்த பீனிசம், சீப்பீனிசம், நீர்ப் பீனிசம், சிரப் பீனிசம், முகம் பிசிவு, குத்துகிறது மூக்குப் பரபரப்பு மூக்குப் பள்ளம் விழுகிறது இவைகள் தீரும். கை கண்டது. பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும். உப்பு பருப்பு அரைக் கீரை இவை யாகும்.

பீனிசத்துக்கு நசியம் :-

தேங்காய் மூன்று உடைத்து இடித்து பிழிந்த அதிலப்பைக் கோவையிலே தாளகம் பலம்.ச பொடி பண்ணிப் போட்டுக் காய்ச்சி நெய் வடித்து சங்கு நசியம் பண்ணவும்.

சகல பீனிசத்துக்கும் எண்ணை :-

சித்தாமணக்கு எண்ணையாவது பேராமணக்கெண்ணையாவது புழுக்கி எடுத்தெ எண்ணெ.உரி, துளசி, சரிப்பான், பொன்னாங்கண்ணி கீரை, மிளகு, தக்காளி இலை வகைக்கு சாறு படி.நெ, இஞ்சிச் சாறு உரி, மிளகு பலம்.க, வசம்பு பலம்.உ இவை அரைத்துக் கரைத்து வெள்ளுள்ளி பலம்.க, ஈருள்ளி பலம்.க, சிறுக அரிந்து சட்டியில் போட்டு சற்றே வதக்கு எண்ணையும் மருந்து சேர்த்து எரித்து மெழுகு பதத்திலிறக்கி வைத்து எண்ணை காலமே தடவி.உய நாழிகைக்கு மேல் சீயக்காயிட்டு வெந்நீரில் முழுகவும். இப்படி.ய நாள் தினம் முழுகவும். சீயம் போட்டுக் கலந்து எரித்து எ. நாள் நசியம் பண்ணவும். பீனிசம், ரத்த பீனிசம் எல்லாந் தீரும்.

பீனிசத்துக்கு :-

நல்லெண்ணை படி.க, அத்தம் விராகனிடை.க, அரிசி விராகனிடை.க, மிளகு பலம் ரு நாள் பண்ணி எண்ணை காயச்சே மிளகு பொடி போட்டு அத்தம் அரிசியும் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து இரண்டு தேத்தான் விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி இரண்டு நாள் பண்ணி எண்ணையில் அரைத்துக் கலந்து எரித்து பதத்தில் வடித்து தலைக்கு தேய்ச்சு முழுகி வர தலை மயிர் வாதம் சயித்தியம், கபால சன்னி, பிடரி பிசிவு தலைவலி இவை தீரும். கை கண்டது.

நல்லெண்ணை படி.உ, கரிப்பான் சாறு படி இரண்டுங் கலந்துமிளகு பலம்.க, மஞ்சள் பலம்.க, வெள்ளுள்ளி பலம்..க இம்முன்றும் முழுகவும். காதெரைச்சல் வாங்கும். தலைவலி, சந்து வலிக்கும் தீராத தலை வலிக்கும் காது கேளாததற்கும் காதில் சீ விழுகிறதுக்கும் பொன்னரிதாரம், சுக்கு, சுக்கு மிளகு, மஞ்சள், எருக்கம் மொட்டு இவை வகைக்கு விராகனிடை.உ கட்டி எருக்கம் பூச் சாறு விட்டரைத்துச் சீலையில் தடவித் திரி பண்ணி உலர்த்திக் கொளுத்தி அவித்துப் புகை காதில் பிடிக்க மூன் வியாதியெல்லாந் தீரும்.

குருதிக்கு எண்ணை :-

ஆமணக்கம் முத்து பிடி; பச்சைப் பயறு பிடி கட்டி அரைத்த அடை புங்கம் பட்டை ஆதண்டை வேர், தழுதாழை வேர், சங்கங் குப்பி, வெள்ளெருக்கு தண்ணீர் விட்டுக் காய்ச்சி மூன்று படியா விடத்துக் காய்ச்சி ஒருபடியாவ பிறகு இந்த எண்ணை விட்டு வெள்ளுள்ளி பலம்.க, போடவும்மிளகு பலம்.கு நசுக்கிப் போடவும். வெள்ளுள்ளி தளாவிப் பொன்னிற மாகப் போலே எண்ணை யிறக்கக் கொள்ளவும். [illegible]

சீலையில் முடிந்து புளியந் தணலில் புகை போடவும். புகை போகாமல் மூடிப் பிடிக்கவும். ஒருத் தலை வலி, சன்னி தலைவலி இவை தீரும். கை கண்டது.

காது இரைச்சலுக்கு :-

நல்லெண்ணெய் படி.க, வேப்பெண்ணெய் படி.க, புன்னெண்ணெய் படி.க, இலுப்பை எண்ணெய் படி.க, அமுர்சி வேர், விழுதி வேர் தழுதாழை வேர், ஆயில் பட்டை, கொடிக்குன்றி கவாத்திப் பட்டை, நஞ்சுண்டான் வேர் பூவரசம் பட்டை, ஈச்சப் பட்டை முறுக்கவும். சகல பீனிசமும் தீரும். கை கண்டது.

மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு :-

பழம் புளி நெல்லி முள்ளியுஞ் சிகாடியில் அறைப் போட்டு அரைத்துத் தலைக்கு தப்பவும் தீரும். மம்மாரி பலம்.௫ குங்குமப் பூ பலம்.வ, கபால பேதி பலம்.உ நாயுருவி விரை பிடி.உ இந்த விரையை பொடி பண்ணி நெய்யில் போட்டு நசியம் பண்ணவும். மூன்று நேரமும் பத்து நாள் விடவும். மூக்கில் ரெத்தம் கபால பீனிசந் தீரும். இரைப்புச் சுரம், தலைவலி இது முதலான வியாதி எல்லாந் தீரும்.

சகல பீனிசத்துக்கும் :-

வேப்பெண்ணெய் புன்னெண்ணெய் நல்லெண்ணெய் சித்தாமுட்டிச் சாறு மிளகு, முன்னை தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி நாழியான பிறகு இறுத்துக் கட்டவும் கோரோசனை விராகனிடை.வ, குங்குமப் பூ விராகனிடை.வ, சுக்கு விராகனிடை.வ திப்பிலி விராகனிடை.கரு, வெள்ளுள்ளி விராகனிடை.கரு, சித்தரத்தை விராகனிடை.கரு, விளங்கம் விராகனிடை.கரு, ஓட்டடை விராகனிடை.கரு எல்லாஞ் சுட்டு எரித்து மெழுகு பதத்திலிறக்கித் தலைக்குத் தேய்த்துக் கொண்டு உசிலம் பொடி விட்டு வெந்நீரில் முழுகவும். சீத சுரத்துக்கு சாறணைக் கொழுந்து பிடி கிள்ளிக் கசக்கிச் சாறு கையில் பிழிந்து மத்திச்சு வைத்து சுரம் வரச்சே கண்ணிலிடவும். மற்ற நாள் சுரம் வராது, தலை முழுகின்ன பிறகு இதின் கொடியைச் சிறுக வரிந்து மிளகு நீர் காய்ச்சிக் குடித்து மூடிக் கொள்ளவும். வேகும். சுரம் மாறும்.

சகல பீனிசத்துக்கும் :-

ஊமத்தை சமூலம் காய்ப் பூ இலை தண்டு வேர் சமூலம் உலர்த்தி இடித்துப் பொடி பண்ணி சுங்கானிலிட்டுப் புகைபிடிக்க இதுக்கு சகல பீனிசமும் காக்கா புத்து [illegible] இருமல் மூக்கில் நீர் விழுகிறது வகை யென்னப் பட்டதெல்லாம் தீரும். ஒன்றை விட்டொரு நாள் முழுகவும். இப்படி.அ நாள் முழுகி அப்பறம்.அ நாளைக்கு ஒருக்கால் முழுகி வரவும். கற்கம் வகைக்கு பலம். 3/8 விழுக்காடு கூட்டவும்.

பிறந்தாமலை தயிலம் :-

நல்லெண்ணெய், நெல்லிக்காய், சாறு பசுவின் பால் கரிப்பான் சாறு உரி, மஜரம் பலம்.௫ அரைத்துக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து வைத்துத் தேய்த்து முழுகி வரக் கண்ணெரிவு, புகைச்சல் காதடைப்ப வறப்பீனிசம் இவை யெல்லாந் தீரும். பசுவின் நெய், அவரைப் பருப்புக் கூட்டவும். இதுக்கு காசி வாயிலும் மூக்கிலும் ரெத்தம் விழுகிறது தீரும்.

பீனிசத்துக்கு :-

நல்லெண்ணெய் படி.க, பிரமியிலைச் சாறு படி.அ இதில் சிறுபிரான் பட்டை பலம்.வ விதுகன் கிழங்கு பலம்.உ சுட்டு எரித்து தலை முழுகவும் பீனிசம், கபால சூலை, நேத்திர வாய்வு இவை தீரும். ஒருத் தலை வலிக்குச் சாதிக்காய் விராகனிடை.க, செம்பை விரை விராகனிடை.க, திப்புச சாத்திலரைத்துச் சீலையில் தடவித் திரி பண்ணி விளக்கில் கொளுத்திப் புகை பிடிக்க ஒருத் தலைவலி தீரும்.

காசித்து வாயாலும் மூக்காலும் ரெத்தம் விழுகிறதுக்கு:-

கொம்பரக்கு பலம்.௧ பொட்டணங் கட்டி சட்டியில் ஒரு படி தண்ணீர் வார்த்து சட்டியில் குறுக்கே ஒரு கோலை வைத்து அந்தக் கோலிலே பொட்டணங் கட்டி அந்த தண்ணீருக்குள்ளாக நிற்கிறாப் போலே அடிச் சட்டியில் தாங்காதபடிக்குக் கட்டி தண்ணீர் ஒருபடியாக் சுண்டின பிறகு இறக்கி நிறுத்து இறுத்த உமிக் காந்தல் தெள்ளி பலம்.௨, சட்டிக் கலந்து கொடுக்கவும். இந்தப் பிரகாரம் மூன்று நாளைக்குப் பண்ணிக் கொடுக்கவும். பத்தியம் புளி, புகை விடவும். சாமி சர்வேசுவரன் துணை.

பச்சைபோத்தித் தயிலம்:-

நீதி பரம் பேகாம்பர பாணி நிமலன் பொற் பாதந்தான் போற்றி
ஊழியூழ் வந்த தீவினையே தீரும் ஆட்டவன் பொற்பாதந்தான் போற்றி
காப்பாறு பாடுவேன் அய்யாவே நம்பினேன் கருணை கடாட்சம் தந்தருள்வாய்
மா பாவமாகிய மானிடர் பாவத்தால் வந்த வியாதியைத் தீர்த்தருள்வாய் தாயாரே

நம்பினேன் வாதங்கள் யென்பதுக்கும் பிரியாவியே பச்சோந்தி தயிலம் பாடுகிறேன் சன்னி பதினெட்டுக்கும் வெள்ளை கெவுரியாம் வெளிப் பாசாணம் மிகுந்த தாளகம் கெந்தகமும் வல்லாம் மாசாவ சுலிங்கம் சீலையுடன் வாள் லெங்கதாரம் ஒன்பதுக்கு கட்டி மருந்து தான் ஒன்பதுக்கு கொளுச்ச சியன் வீராக என்றும் நம் மேனிச் சாத்தா வரைந்து நஞ்சு திருகு கள்ளிப் பால் சீலையிலே தேசி பற பன்றி வெள்ளாடு யெருமை சிறந்த மூம்பு விராகன் பத்து சார சமமாகவே மூன் சாத்திலாட்டியே சதிரக் கள்ளிப் பால் சீலையிலே மயிரிறகு தான் புறா வடக மிரடர் மிறகம் பிரியும் மேஷம் மானிடர் மயிரும் யெச்சமும் கோளி யெச்சமும் யேறு வகைக்கு பந்தகம் வேலியில் சாத்தாலாட்டி பழம் வேப்பம் பால் சீலை பச்சைபோத்தி மூன்று தான் கொண்டு வந்து அதை பாழ மாக் கீறியே உள்ளே வைத்து பிச்சைய தாகமுன் பாஷாணம் மறைக் காயத்தா மருந்தே உள்ளே வைத்த பச்சோந்தி யெத்தில் மருந்தை வைத்து பாங்கான எருமைக் கொம்பில் கட்டே. பருப்பியான பின் வேலியில் சக்கை மாங்கான எருமைக் கொம்பில் கட்டே. முருக்கையை வேப்பெண்ணெய் படி தான் கடலை போலே விட்டெரிக்க யெரித்து சடலை பதங்க தாரம் யேகமா திரண்டு தான் வீசாமல் சரிக் கிடவே வேப்பெண்ணெய் முன்று படி தான் சாதகமாகவே மூன்று வீசையும் தான் ஆக பின்பு மூன்றாலே ஒன்றாய் பார்த்து கொண்டு விளைந்த பச்சை போத்தி தயிலம் வீசியல் வாதங்கள் மடி விடும் தயிலம் இறக்கியே இவ பின்பு சாமியின் பாதத்தை தெண்டனிட்டு புளியில் வாங்கியே ஆதகம் மொரு பலம் பொறந்த தயிலத்திலாட்டி விட தீரும் வியாதியே செப்புறேன் நம்மாள் தீ வினையால் வந்த நோய்களுக்கு அம்பவயாக மேகக்கு பச அலாண்டு ஓடியே பச்சை வாதம் தீரும்படியாக அஞ்சு நம்பினேன் திறமா புசப்பா கால் கை கால் சோம்பல் அகன்றது கோணும் கடுத்து மிஞ்சின கால் முடக்கு தே பறக்கும் மேகக்கு பூச மறி வரும் காலம் கையும் யென்பது வாதமும் பச்சோந்தி தயிலம் மென்றிட காத வலி ஊரம் பம்பசம் ஓடுமே அன்பங்கள் தீருமே. பறக்குமே தயிலம் பெரு சொன்னால் தொலையை போடவே தான் சாஸ்திரங்கள் தலங்கியே உள்ளுக்கு கொள்வதில் கவலை தீர்த்திடும். கடும் பத்தியம்.

****

முற்றும்

க.ச.20.3,1963. * ******